விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

Dishtv
பழைய Dishtv
ரிஸீவர்க்கு பதிலாக
புதிய ரிஸீவர்
700/= மட்டுமே.
SATS-TECH
சாட்ஸ் ரெக் இன்ஜினியர்ஸ்
இல. 56/15 ஸ்ரான்லி வீதி ஒழுங்கை,
(பழைய தபால் கந்தோர் வீதி,
யாழ்ப்பாணம்.)
Phone: 021 222 8812, Mob:- 076 886 1160
(C-4787)

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2049 மார்கழி 07 சனிக்கிழமை (22.12.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 003

## கல்வி இராஜாங்க அமைச்சராக விஜயகலா மகேஸ்வரன் பதவியேற்பு



(கொழும்பு)

யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் மீளவும் கல்வி இராஜாங்க அமைச்சராகப் பதவியேற்றார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஐக்கிய தேசிய முன்னணி அரசின் பிரதி, இராஜாங்க அமைச்சர்கள் நியமனத்தின் போதே அவருக்கு இந்த நியமனம் வழங்கப்பட்டது.

அவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் உறுதியுரை எடுத்துக்கொண்டார். யாழ்ப்பாணத்தில் கடந்த ஜூன் 23☛

## 96 மேலதிக வாக்குகளால் இடைக்கால கணக்கறிக்கை பாராளுமன்றில் நிறைவேற்றம்

(கொழும்பு)

அடுத்த ஆண்டுக்கான இடைக்கால நிதிநிலை அறிக்கை 96 மேலதிக வாக்குகளால் பாராளுமன்றில் நேற்று நிறைவேற்றப்பட்டது.

அதற்கு ஆதரவாக 102 வாக்குகளும் எதிராக 6 வாக்குகளும் பதிவாகின.

ஐக்கிய தேசிய முன்னணி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பன அந்த அறிக்கைக்கு ஆதரவாக வாக்களித்ததுடன், ஜே.வி.பி. எதிராக வாக்களித்துள்ளது. வாக்களிப்பில் ஐக்கிய மக்கள் 23☛

# எதிர்க்கட்சி தலைவர் பதவியை ஆராய்ந்து சபைக்கு அறிவிப்பேன்

## பாராளுமன்றில் சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவிப்பு



(கொழும்பு)

எதிர்க்கட்சி தலைவர் பதவி குறித்து பல்வேறு தரப்பினர் முறைப்பாடுகளை செய்துள்ள நிலையில் அது குறித்து இறுதியான தீர்ப்பு ஒன்றினை முன்வைக்க முடியாதுள்ளது. வெகு விரைவில் எதிர்க்கட்சி தலைவர் பதவி குறித்து ஆராய்ந்து சபைக்கு அறிவிப்பேன் என சபாநாயகர் கரு ஜெயசூரிய அறிவித்தார். (23ஆம் பக்கம் பார்க்க)

## குழு மோதலுக்கு தயாராக இருந்த வாள்வெட்டு குழுவின் இருவர் பளையில் கைது

(பளை)

குழு மோதலுக்குத் தயாராகிய வாள்வெட்டுக் குழுவொன்றின் இரண்டு பேரை பளைப் பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளதுடன் அவர்களிடமிருந்து இரண்டு 23☛

## விஜயகலாவுக்கு பதவி வெடிகொளுத்தி யாழில் கொண்டாட்டம்

(யாழ்ப்பாணம்)

விஜயகலா மகேஸ்வரன் நேற்றையதினம் கல்வி, இராஜாங்க அமைச்சராக தெரிவு செய்யப்பட்டதையடுத்து யாழில் அவருடைய ஆதரவாளர்கள் வெடிகொளுத்தி கொண்டாடினர். (ம-3)

## வட மாகாணத்தில் சில தினங்களுக்கு மழை நீடிக்கும்

(கொழும்பு)

காற்றழுத்த தாழமுக்கத்தின் காரணமாக வடக்கு - கிழக்கு மாகாணங்களில் சுமார் 75 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. 23☛

## அமைச்சரவை அந்தஸ்து அல்லாத அமைச்சர்கள் இராஜாங்க, பிரதி அமைச்சர்கள் பதவியேற்பு

(கொழும்பு)

அமைச்சரவை அந்தஸ்து அல்லாத அமைச்சர்கள் 3 பேரும், இராஜாங்க அமைச்சர்கள் 17 பேரும், பிரதி அமைச்சர்கள் 7 பேரும் நேற்று பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன அவர்களின் முன்னிலையில் பதவியேற்றனர் அவர்களது பெயர் விபரங்கள் பின்வருமாறு.

**அமைச்சரவை அந்தஸ்து அல்லாத அமைச்சர்கள்**

ஹர்ஷ த சில்வா - பொது வழங்கல்கள், பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சு. அஜித் பீ.பெரேரா - டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள், தகவல் தொழில்நுட்ப அமைச்சு. சுஜீவ சேமசிங்க - விஞ்ஞான தொழில நுட்ப, ஆராய்ச்சித் துறை அமைச்சு.

**இராஜாங்க அமைச்சர்கள்**

ரஞ்சன் ராமநாயக்க - நெடுஞ்சாலைகள் வீதி அபிவிருத்தி அமைச்சர், விஜயகலா மகேஸ்வரன் கல்வி அமைச்சர், ஜே.சீ.அலவத்துவல - உள்ளக, உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சர், இரான் விக்ரமரத்ன நிதி அமைச்சர் 23☛

## கட்சி தாவிய வடிவேல் சுரேஷிற்கு அமைச்சு பதவி

(கொழும்பு)

கடந்த ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தை அடுத்து மகிந்த அணிக்கு கட்சி தாவலில் ஈடுபட்ட 23☛

## எதிர்க்கட்சி தலைவராக மகிந்தவை அங்கீகரிக்க வேண்டாம்

### கூட்டமைப்பு சபாநாயகரிடம் மனு கையளிப்பு

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷவை எதிர்க்கட்சி தலைவராக அங்கீகரிக்க வேண்டாம் என வலியுறுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் மனுவொன்று கையளிக்கப்பட்டுள்ளது.

மகிந்த ராஜபக்ஷவை எதிர்க்கட்சி தலைவராகவும், மகிந்த அமரவீரவை பிரதான எதிர்க் 23☛

## பெற்றோல் ரூபா 10; டீசல் ரூபா 5 குறைப்பு



(கொழும்பு)

நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் எரிபொருள் விலைகளை குறைப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். 23☛

## நிவாரண உதவிகளை வழங்கத் தயார் - ரணில்

(கொழும்பு)

கடந்த நவம்பர் மாதம் 5ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவிருந்த வரவுசெலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த பொது மக்களுக்கான அனைத்து நிவாரண உதவிகளையும் வழங்குவதற்குத் தயாராக உள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற இடைக்கால 23☛

## பிணைமுறி மோசடி தொடர்பில் ஜனாதிபதி தலைமையில் கலந்துரையாடல்

(கொழும்பு)

மத்திய வங்கியில் இடம்பெற்ற முறிகள் மோசடி தொடர்பான விசாரணைகளை துரிதப்படுத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நேற்று நடைபெற்ற கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டது.

வரையறுக்கப்பட்ட காலப்பகுதிக்குள் வழக்குகளை தாக்கல் செய்வதற்கு தேவையான திட்டங்களை வகுப்பதற்கும் இதன்போது தீர்மானிக்கப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதேபோன்று, ஆழமான 23☛

## பணியாளர் தேவை

**BEAUTICIAN**

நெல்லியடியில் உள்ள (Beauty Parlour) ஒன்றுக்கு அனுபவம் உள்ள (Beautician) தேவை. Facial, Eye brow, Hair தொடர்பான அறிவு கொண்டவர் தொடர்பு கொள்ளவும்.



**தொடர்பு:**

**0779143171**

(சி-4791)


**காரைநகர்**

**கிழவன்காடு கலாமன்றம் நடத்தும்**


**இந்திய, ஈழக் கலைஞர்கள் இணைந்து வழங்கும்**

## நாதஸ்வர தவில் கச்சேரி

இடம் : கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கு, காரைநகர்.

காலம் : இன்று (22.12.2018) சனிக்கிழமை

நேரம் : பிற்பகல் 5.30 மணி



நாதஸ்வரம் : (இந்தியா)
- நாதகான சிகாமணி Dr.மாம்பலம் M.K.S. நடராஜன்
- நாதஸ்வரச் சக்கரவர்த்தி மாம்பலம் N. மணிகண்டன்

தவில் : (இலங்கை)
- தவில் இளவரசு N.நந்தகுமார்
- தவில் இளஞ்சுடர் பா.உதயசங்கர்

இவர்களுடன் மேலும் பிரபல ஈழக்கலைஞர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*

கிழவன்காடு கலாமன்றம்,
காரைநகர்.

(சி-4797)

## திருநெல்வேலி பகுதியில் உள்ள வர்த்தக நிலையத்தில்

# பாவனைக்குதவாத 26 கொள்கலன் மரக்கறி எண்ணெய் கண்டுபிடிப்பு

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலிப் பகுதியில் உள்ள பிரபல வர்த்தக நிலையத்துக்கு சொந்தமான பாவனைக்குதவாத ரூபாய் 15 இலட்சம் பெறுமதியான 26 கொள்கலன் மரக்கறி எண்ணெய் கடந்த 19 ஆம் திகதி கண்டு பிடிக்கப்பட்டதாக உரும்பிராய் பொதுச் சுகாதார பரிசோதகர் ந.நிறூபன் தெரிவித்தார்.

குறித்த வர்த்தக நிலையத்துக் சொந்தமான உரும்பிராய் பகுதியில் அமைந்துள்ள களஞ்சியத்திலேயே இவ்வாறு பாவனைக்குதவாத உற்பத்தித் திகதி, காலாவதித் திகதி இடப்படாத ஒவ்வொன்றும் 210 லீட்டர் கொள்ளவை உடைய மரக்கறி எண்ணெய் கண்டுபிடிக்கப்பட்டு அன்றைய தினமே யாழ். கீழ் நீதிமன்றில் ரி அறிக்கை இடப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

மலேசியாவில் இருந்த இறக்குமதி செய்யபட்டு கொழும்பில் உள்ள தனியார் கம்பனியின் ஊடாக இலங்கை பூராகவும் குறித்த எண்ணெய் விற்பனை செய்யப்படுவதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

குறித்த வர்த்தக நிலைய உரிமையாளர் 2 இலட்சம் ரூபாய் ஆட்பிணையில் விடுவிக்கப்பட்டதுடன் வழக்கு அடுத்த மாதம் 16-ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-3)


**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



## வேலையாட்கள் தேவை

நெல்லியடியில் உள்ள கிறீம் கவுஸ் (Cream House) ஒன்றுக்கு வேலையாட்கள் தேவை. இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம்.

**தொடர்புகளுக்கு:**

**0773773197**


**புதிய உயர் கல்லூரி மாணவர்களுக்கான**

# மரண அறிவித்தல்

## அமரர் மா.இரத்தினசிங்கம் (சின்னன்னை)

*புதிய உயர் கல்லூரியின் இயக்குநர் மா.சண்முகநாதன் அவர்களின் அண்ணனும் புதிய உயர் கல்லூரியின் பணியாளருமாகிய மா.இரத்தினசிங்கம் (சின்னன்னை) நேற்று (21.12.2018) வெள்ளிக்கிழமை காலமானார்.*

*அதனால் சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு தினங்களிலும் வகுப்புக்கள் நடைபெறமாட்டாது என்பதனை அறியத்தருகின்றோம்.*

தகவல் : நிர்வாகி,
புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:
021 222 8148

(சி-4796)

## வட இலங்கைச் சங்கீத சபை பொதுக்கூட்டம் - 2019

வட இலங்கைச் சங்கீத சபையின் 2019 ஆம் ஆண்டிற்கான பொதுக்கூட்டம் 06.01.2019 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு மருதனார்மடத்தில் அமைந்துள்ள சபையின் பிரதான மண்டபத்தில் நடைபெறும். அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம். பிரேரணைகள் இருப்பின் 04.01.2019 ஆம் திகதிக்கு முன்பு சபையின் செயலாளரிடம் கையளிக்கவும்.

கூட்டத்திற்கு தவறாது கலந்து கொண்டு தங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்களை பகிர்ந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

"கலை இன்பமே நிலையான இன்பமாகும்"

| | |
|---|---|
| சு.சுந்தரசிவம் | பி.என்.சுதர்சன் |
| யாழ் வலயக்கல்விப் | செயலாளர் |
| பணிப்பாளரும், வட இலங்கைச் | வட இலங்கைச் |
| சங்கீத சபைத்தலைவரும் | சங்கீத சபை |

(சி-4792)

## பதவிவெற்றிட விளம்பரம் வெளிவாரி- 2018.12.20

முல்லை மாவட்ட சிகசுூ சங்கங்களின் சமாசம் கிராமிய வங்கி முகாமையாளர் பதவி ஒன்றுக்கு வெளிவாரியாக 2018.12.20 அன்று விண்ணப்பம் கோரப்படுகின்றது. 2018.12.31 அன்று பிற்பகல் 4.30 மணிக்கு பிந்தாது தகைமையுடைய விண்ணப்பதாரிகள் தனது விண்ணப்பத்தை பூரண விபரங்களுடன் சுயமாக தயார் செய்து தகைமைச் சான்றுகளின் நிழல் பிரதிகளுடன் தலைவர், சிகசுூ சமாசம், வித்தியாபுரம், ஒட்டுசுட்டான் எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலமோ அன்றி நேரடியாகவோ கிடைக்கும் வகையில் விண்ணப்பிக்கலாம். கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் தகைமையற்ற விண்ணப்பங்களாக இருக்குமிடத்து முன்கூட்டியே விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பிப்பதற்கான வயதெல்லை 18 - 45 வரை. கணனி கற்கை பூர்த்தி செய்தவர்களுக்கும், கூட்டுறவுப் பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கும், ஒட்டுசுட்டான் பிரதேசத்தவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும். கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் அவசியம்.

கிராமிய வங்கி முகாமையாளர் பதவி (தேவையான எண். 01)
சம்பளக் குறியீட்டு இல: 205/13
சம்பள அளவுத்திட்டம் சுற்றறிக்கை (04/2018)
16,365 - 140X10 - 150X10 - 19,265
196,380 - 1680X10 - 1800X10 - 231,180

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

அ. கூட்டுறவுப் பணியாளர் 14-வது சம்பளத்திட்ட கிராமிய வங்கிப் பகுதி பதவியொன்றில் 2 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 15-வது சம்பளத்திட்ட பதவி ஒன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம். அல்லது

ஆ. கூட்டுறவுப் பணியாளர் (உயர்தரம்) சான்றிதழுடன் கிராமிய வங்கிப் பகுதி எழுதுநர் பதவியில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

கௌரவ தலைவர், சிகசுூ சமாசம்,
வித்தியாபுரம் ஒட்டுசுட்டான். 2018.12.20

(சி-4793)

# மரண அறிவித்தல்



## திருமதி இரத்தினசிங்கம் சிவபாக்கியம்

**மலர்வு:05.05.1925 - உதிர்வு:20.12.2018**

*யாழ்.நாரந்தனையை பிறப்பிடமாகவும் பண்ணாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினசிங்கம் சிவபாக்கியம் அவர்கள் நேற்று முன்தினம் (20.12.2018) வியாழக்கிழமை காலமானார்.*

*அன்னார் காலஞ்சென்ற முருகப்பர் - அன்னப்பிள்ளை தம்பதிகளின் புதல்வியும், காலஞ்சென்ற பொன்னையா - ஆச்சிமுத்து தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற இரத்தினசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான முத்துதம்பி, சுந்தரம், அமிர்தலிங்கம், செல்லமுத்து, சித்திரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கலாபூசணம் கிருஷ்ணதுரை, சிவகங்கை, மதியாபரணம், பரமேஸ்வரன், கோகுலராசா (பிரான்ஸ் - லியோன்), சந்திரா, கலாமணி (மலர் - நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும், தெய்வானைப்பிள்ளை, சிவன்யோகம், காலஞ்சென்ற சிவநாயகம், நிர்மலாதேவி, சற்குணேஸ்வரி (சித்திரா), புவனேந்திரன், சிறீஸ்கந்தராஜன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஜெய்சிறிநிவாஸ், ஜெய்சந்தர், காலஞ்சென்றவர்களான ஜெய்குமாரி, ஜெய்காந்தன் மற்றும் ஜெய்சுகந்தன், ஜெய்ரமணன், ஜெய்சக்தி, மணிவேந்தன், கவிதா, பரணீதரன், பரலீசன், சுபாஜினி, கிரிகரன், ஜெயசிறீ, காலஞ்சென்ற ஜெயகணேஷ், தாட்சாயினி, கலிதரன், தமிழ்ச்செல்வி, திலீபன், காலஞ்சென்ற ரஜீவ்ன், ராதை, துஷிதா, நிவேதா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ஆரணி, விவேகன், விவேகா, கார்த்திகன், அஞ்சனா, புரந்தரன், பாரதிகிருஷ்ணா, அபிராமி, குபேரன், சிவந்திகா, அபிமன்யூ, தூயா, துர்க்கா, பிரியங்கா, சாத்வீகன், தார்வீகன், குவிசன், ஹரணி, யதீஸ், விஷ்ணுயன், இலக்கியன், கதிரவன், றக்ஷியா, அக்ஷயா, அபர்ணா, வித்தியா, வீசப்பிரியா - மீரா, ஜெனஜன், கவிண், நிலா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.12.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுழிபுரம் திருவடிநிலை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.*

தகவல் : பிள்ளைகள், மருமக்கள்
சிவகங்கை (பண்ணாகம் - 0766955851),
கோகுலராசா (பிரான்ஸ்- 0033478269172/0033624157450),
கலாமணி (நோர்வே - 004731412450/004740520558)

(சி-6769)

# மகிந்த தரப்பின் மிரட்டலுக்கு அஞ்சி நாம் தேர்தலை நடத்தப் போவதில்லை

## அமைச்சர் கபீர் ஹாசிம் திட்டவட்டம்



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி என்ற ரீதியில் பொதுத் தேர்தலுக்குச் செல்ல நாம் தயாராகயிருக்கின்ற போதிலும், மகிந்த தரப்பினரின் மிரட்டலுக்கு அஞ்சி ஒருபோதும் தேர்தலை நடத்தப் போவதில்லை என அமைச்சர் கபீர் ஹாசிம் தெரிவித்தார். மேலும், அனைத்துக் கட்சிகளின் ஒத்துழைப்புடனேயே தேர்தல் நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நிதியமைச்சின் இடைக்கால கணக்கறிக்கை தொடர்பாக நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

10 வருடங்களாக ஜனாதிபதியாக முழுமையான அதிகாரத்தைக் கொண்டிருந்தபோது மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணாத மகிந்த, தற்போது மக்களின் பிரச்சினை குறித்து பேசுவது ஆச்சரியமாக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆட்சியில் இருக்கும் போது மக்களின் வாழ்க்கைச் சுமையை உயர்த்தி, வர்த்தகர்களுக்கு சலுகைகளை வழங்கியவர்கள் தற்போது எதிர்க்கட்சியில் அமர்ந்தவுடன் மக்கள் நலன் குறித்து பேசிக் கொண்டிருக்கின்றனர் எனவும் விமர்சித்தார்.

இதேவேளை, இவர்களின் அதிகார ஆசை காரணமாக கடந்த 51 நாட்களில் சுற்றுலாத்துறை, சர்வதேச முதலீடுகள் என முழு நாடும் பெரும் பாதிப்பிற்குள்ளானது என்றும் கபீர் ஹாசிம்சுட்டிக்காட்டினார்.(இ-7)

# ஜனவரி மாதம் முதல் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுக்க நேரிடும்

## அமைச்சர் மங்கள சமரவீர

(கொழும்பு)

இடைக்கால கணக்கறிக்கையை நிறைவேற்றிக் கொள்ளாவிடின், எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் பல்வேறு சவால்களுக்கு முகம்கொடுக்க நேரிடும் என, நிதி மற்றும் ஊடக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வில், இடைக்கால கணக்கறிக்கை தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"50 நாட்களாக எமது நாட்டில் சட்டரீதியான அரசாங்கமோ, நிதியமைச்சரோ, அமைச்சரவையோ இருக்கவில்லை. இவ்வாறான சிக்கல்களுக்கு மத்தியில் தான் நாம் இந்நாட்டை இழுத்துக்கொண்டுச் சென்றிருந்தோம்.

இந்நிலையில், இடைக்கால கணக்கறிக்கையை நாம் நிறைவேற்றிக் கொள்ளாவிட்டால், நாட்டில் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் பல்வேறு சவால்களுக்கு முகம்கொடுக்க வேண்டியேற்படும்.

மகிந்த தரப்பினர் அரசியலமைப்பை மீறிச்செயற்பட்டார்கள் என்பதை நாடாளுமன்றம் மற்றும் நீதிமன்றின் ஊடாக நாம் நிரூபித்துள்ளோம்.

அவர்களின் செயற்பாட்டால் மக்களுக்கு தான் பாதிப்பு ஏற்பட்டது. இது நீடித்திருந்தால் ஆர்ஜென்டீனா மற்றும் கிரேக்கத்தின் பொருளாதார நெருக்கடியை விட பாரிய நெருக்கடிக்கு நாம் முகம் கொடுக்க நேரிட்டிருக்கும்.


2019ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தை இவ்வருடம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கவிருந்தோம். ஆனால், நாட்டில் இடம்பெற்ற சூழ்ச்சியால் முடியாது போய்விட்டது. எவ்வாறாயினும், அதனை நாம் அடுத்த வருடம் அதே போன்று சமர்ப்பிக்கவுள்ளோம்.

இதனாலேயே எதிர்வரும் 4 மாதங்களுக்கான இடைக்கால கணக்கறிக்கையை நாம் தற்போது நாடாளுமன்றில் சமர்ப்பித்தோம். இவ்வாறான சம்பவங்கள் இதற்கு முன்னரும் இடம்பெற்றுள்ளன.

எனவே, இதனை வெற்றிகரமாக நிறைவேற்ற வேண்டும். இதற்கான ஒத்துழைப்பை அனைத்துத் தரப்பும் வழங்க வேண்டும்" என அவர் வேண்டுகோள் விடுத்தார். (இ-7)

# அரசியலமைப்புக்கு அமைவாக அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு

## ஐ.நா.பொதுச் செயலாளர் வரவேற்பு



(நியூயோர்க்)

இலங்கையின் அரசியல் நெருக்கடி, அமைதியாக, அரசியலமைப்பு நெறிமுறைகளுக்கு அமைய தீர்க்கப்பட்டிருப்பதை ஐ.நா. பொதுச்செயலாளர் அந்தோனியோ குட்ரேரஸ் வரவேற்றுள்ளார்.

நியூயோர்க்கில் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட ஐ.நா. பொதுச்செயலரின் பேச்சாளர் ஸ்டீபன் டுஜாரிக்,

இலங்கையின் ஜனநாயக அமைப்புக்களின் ஆற்றலை ஐ.நா. பொதுச்செயலர் பாராட்டியுள்ளார்.

ஜனநாயகத்தை மதிப்பது மற்றும் மக்களின் நலன்களுக்காக, நாட்டிலுள்ள அனைத்து தரப்புகளும், அரசியல் வேறுபாடுகளைத் தீர்ப்பதற்கு புதிய அமைச்சரவை நியமனத்தின் வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். (இ-7)

# அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கமைய குற்றம் சுமத்துவதைத் தவிருங்கள்

## சரத் பொன்சேகா வலியுறுத்து

(கொழும்பு)

அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கமைய தேவையின்றி தன்மீது குற்றம் சுமத்துவதைத் தவிர்க்குமாறு, நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.



"எனக்கு எதிராக ஜனாதிபதி கொலைச் சதியொன்றை முன்வைத்துள்ளார். இது தொடர்பில் நான் சபாநாயகருக்கு எழுத்து மூலமாக அறிவித்திருந்தேன்.

இதற்கான பதிலை பொலிஸ்மா அதிபர் தற்போது அனுப்பியுள்ளார். இதிலிருந்தே இந்த கொலைச் சதிக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை எனத் தெரியவந்துள்ளது. இந்நிலையில், நாமல்குமார என்பவர் என்னைத் தொடர்புபடுத்தி கருத்து வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்.

எனவே, அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக தேவையில்லாமல் எம்மீது குற்றம் சுமத்த வேண்டாம் என நான் கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்தார். (இ-7)



# அனைத்துத் திட்டங்களும் மீளவும் செயற்படுத்தப்படும்

## கல்வியமைச்சர் காரியவசம் உறுதி

(கொழும்பு)

நாட்டின் சிறார்களுக்கு சீரான கல்வியைப் பெற்றுக் கொடுப்பதை நோக்காகக் கொண்டு செயற்படுத்தப்பட்ட அனைத்துத் திட்டங்களும் மீளவும் செயற்படுத்தப்படும் என கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.

கல்வி அமைச்சில் நேற்று வெள்ளிக்கிழமை மீண்டும் கல்வி அமைச்சராக தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டதன் பின்னர் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் கல்வி கட்டமைப்பில் பாரிய மாற்றங்கள் செய்யப்பட்டு செயற்படுத்தப்பட்ட திட்டங்கள் சட்ட விரோத அரசியல் மாற்றங்களால் கடந்த 50 நாட்களுக்கும் மேலாக தொடர்ந்து செயற்படுத்த முடியாமல் போனமை குறித்து கவலை அடைவதாகவும், நாட்டின் சிறார்களுக்கு சீரான கல்வியைப் பெற்றுக்கொடுப்பதை நோக்காகக் கொண்டு செயற்படுத்தப்பட்ட 13 வருட கட்டாய கல்வி, சுரக்ஷா காப்புறுதித் திட்டம், அருகாமை பாடசாலை சிறந்த பாடசாலை திட்டம் உட்பட சாதகமான அபிவிருத்தி திட்டங்கள் அனைத்தையும் மீண்டும் செயற்படுத்த போவதாக கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் மேலும் சுட்டிக்காட்டினார். (இ-7)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## 34வது பொதுப்பட்டமளிப்பு விழா (பகுதி I) 21.01.2019

கலாநிதி, முதுதத்துவமாணி, முதுமாணி, பட்டப்பின் தகைமைச் சான்றிதழ், இளமாணி, தகைமைச் சான்றிதழ் ஆகிய பட்டங்களை அளிப்பதற்காக 22.01.2019ஆம் திகதி அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 34வது பொதுப் பட்டமளிப்பு விழா (பகுதி I) நடைபெறவுள்ளது. பின்வரும் தேர்வுகளில் 08.06.2018ஆம் திகதிக்குப் பின்பு சித்தியடைந்து பட்டங்கள் பெறத் தகுதியுடையவர்கள் 31.12.2018ஆம் திகதிக்கு முன்னர் தமது வேண்டுகோள்களை கீழ்வரும் அறிவுறுத்தல்களுக்கமைய சமர்ப்பிக்குமாறு கோருகின்றேன்.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

1. கலாநிதி
2. முதுமெய்யியல்மாணி
3. முதுகல்வி. மாணி
4. முதுநிலை தொழில் நிர்வாகமாணி
5. கல்வியில் பட்ட பின் தகைமைச் சான்றிதழ்
6. பொறியியல் விஞ்ஞானமாணி
7. சித்த வைத்திய சத்திரசிகிச்சைமாணி
8. சட்டமாணி
9. விவசாய விஞ்ஞானமாணி

**வவுனியா வளாகம்**

10. வியாபார முகாமைத்துவமாணி (பொது, சிறப்பு)
11. விஞ்ஞானமாணி (பிரயோக கணிதமும் கணிப்பிடலும்) (பொது)
12. கணிணி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி (சிறப்பு)
13. சூழல் விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி (பொது, சிறப்பு)
14. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப இளமாணி (பொது)
15. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் விஞ்ஞானமாணி (சிறப்பு)

**அறிவுறுத்தல்கள்:**

**1. வேண்டுகோள் படிவங்கள்:**

விண்ணப்பதாரிகள் விண்ணப்பப் படிவத்தை www.jfn.ac.lk என்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத் தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**2. கட்டணங்கள்**

**இளமாணிப் பட்டதாரிகள்**

| | |
|---|---|
| வேண்டுகோள் கட்டணம் | ரூபா. 500.00 |
| சான்றிதழ் கட்டணம் | ரூபா. 500.00 |
| பட்டதாரி மேலங்கிக் கட்டணம் | ரூபா. 500.00 |
| மொத்தம் | ரூபா. 1500.00 |

முதுநிலைப் பட்டதாரிகள்

| | |
|---|---|
| வேண்டுகோள் கட்டணம் | ரூபா. 500.00 |
| சான்றிதழ் கட்டணம் | ரூபா. 500.00 |
| பட்டதாரி மேலங்கிக் கட்டணம் | ரூபா. 1000.00 |
| மொத்தம் | ரூபா. 2000.00 |

குறிப்பு: பின்வருவோர் சான்றிதழ் கட்டணம், வேண்டுகோள் கட்டணம் மட்டும் செலுத்தினால போதுமானது.

- பட்டமளிப்பு விழாவிற்கு சமுகமளிக்காது பட்டச் சான்றிதழைப் பெற விரும்பும் பட்டதாரிகள்
- ஒன்று/இரண்டு வருட டிப்ளோமாதாரிகள்

**3. கட்டணம் செலுத்தும் முறை**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையின் கணக்கு இல. 162 100 160 000 880 இற்குச் சேரக் கூடியதாக ஏதாவது ஒரு மக்கள் வங்கிக் கிளையில் கட்டணத்தைச் செலுத்த வேண்டும். (வங்கிப் பற்றுச் சீட்டில் பெயரையும் மாணவர் பதிவு இலக்கத்தையும் குறிப்பிடுதல் வேண்டும்)
பணம் செலுத்திய வங்கிப் பற்றுச் சீட்டின் மூலப்பிரதி வேண்டுகோள் படிவத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். மேலதிகமான ஒரு போட்டோப் பிரதியை உங்கள் தேவைக்கு வைத்துக் கொள்ளவும்.

**4. பட்டதாரி மேலங்கிகளும் விருந்தினர் நுழைவுச் சீட்டும்**

நேரடியாக சமுகமளித்து பட்டம் பெறுபவர்களுக்கு ஒரு பட்டதாரி மேலங்கியும் ஒரு விருந்தினர் நுழைவுச்சீட்டும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்விக் கிளையில் வழங்கப்படும்.

**5. பல்கலைக்கழக நிலுவைகள்**

பல்கலைக்கழகத்திற்கு ஏதாவது நிலுவைகள் அல்லது கொடுப்பனவுகள் செலுத்தப்படாதிருந்தால் அவ் விண்ணப்பதாரிக்கு பட்டமளிப்புச் சான்றிதழ் வழங்கப்பட மாட்டாது.

**6. வேண்டுகோள் படிவங்களை சமர்ப்பித்தல்**

பூரணப்படுத்தப்பட்ட வேண்டுகோள் படிவத்துடன் பணம் செலுத்திய வங்கிப் பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை இணைத்து நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமோ கீழ்க்காணும் முகவரிகளுக்கு 31.12.2018க்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும். (கடித உறையின் இடதுபக்க மூலையில் பட்டம் பெறும் கற்கை நெறியைக் குறிப்பிடவும்)

அ) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றவர்கள்:
பிரதிப் பதிவாளர்/அனுமதிகள்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

ஆ) யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் கல்வி பயின்றவர்கள்:
பிரதிப் பதிவாளர்/தேர்வுகள்,
வவுனியா வளாகம்,
வவுனியா.


வேண்டுகோள் படிவங்கள் சமர்ப்பிக்க வேண்டிய கடைசித்திகதி: **31.12.2018 திங்கட்கிழமை மாலை 3.00 மணி**

முடிவுத் திகதிக்கு முன்னர் கிடைக்கப் பெறாத வேண்டுகோள்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. மேலதிக விபரங்களுக்கு **பிரதிப் பதிவாளர்/அனுமதிகள் தொலைபேசி இல.** 021 222 6714 **உடன்** தொடர்பு கொள்ளவும்.

**பதிவாளர்** (C-4479) 20.12.2018

# மரண அறிவித்தல்

## ஜெயராஸ் தனஞ்செயன்



*மாதகல் வில்வளையை பிறப்பிடமாகவும் இல.01, 1ஆம் பண்ணை, கனகபுரத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய ஜெயராஸ் தனஞ்செயன் நேற்று (21.12.2018) வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.*

அன்னார் ஜெயராஸ் (முகாமையாளர் - அறிவுநதி புத்தக சாலை) - சாரதாதேவி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இராமசாமி - சந்திரவதனம்மா, சங்கரப்பிள்ளை - அன்னம்மாவின் பேரனும் செந்தூரனின் (தமிழ்மணி விற்பனை நிலையம்) அன்புச் சகோதரனும் லோகாவின் மைத்துனனும் பவித்திரனின் அன்புச் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2018) சனிக்கிழமை பி.ப ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் கனகபுரம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (4800)

**இல.1, 1ம் பண்ணை, கனகபுரம்.**

**தகவல்:- குடும்பத்தினர்**

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## VACANCY FOR THE POST OF MANAGEMENT ASSISTANT (ON CONTRACT)

The University of Jaffna, Sri Lanka will entertain applications for the under mentioned post from suitably qualified persons up to **31.12.2018.**

**1. Management Assistant - ON CONTRACT**

**REQUIRED QUALIFICATIONS AND EXPERIENCE**

1. Should have passed G.C.E (Ordinary Level) Examination in six subjects at **One Sitting** with credit passes in
   i) Sinhala/ Tamil
   ii) English Language/ English Literature
   iii) Mathematics

   **AND**
2. Should have Pass in all subjects at G.C.E.(Advance Level) examination (except the common general paper) at **One Sitting** (Passing in 3 subjects under the old syllabus at one sitting would be sufficient)
3. Preference will be given to those who possess the following;
   a. Fluency in English
   b. An acceptable qualification in computer application of not less than six (06) months duration obtained from recognized institutes.
   c. Two years of experience in the use of computer application packages.
4. Should be not less than 18 years and not more than 30 years of age on the closing date of the application.

**REMUNERATION AND OTHER CONDITIONS**

- A monthly payment of Rs. 36,900 (fixed)
- This appointment is a fulltime (contract basis) for a period of six months and it can be extended if necessary.

**HOW TO APPLY:**

Applicants who are interested in the above post are requested to submit their application to the following address in the prescribed form available at the Office of the Dean/Faculty of Graduates Studies, Palaly Road Jaffna.

**Assistant Registrar**
Faculty of Graduate Studies,
University of Jaffna,
Palaly Road
Thirunelvely
Jaffna

Applicants should deposit Rs 100 at any branch of the Peoples bank in favor of **"University of Jaffna"** account no **"162-1-001-6-0000880.** Applications must accompany a copy of the bank deposit slip.
Applicants are requested to indicate the post name **"Management Assistant – Contract Basis"** in the Top Left hand corner of the envelope.

**Note:**

1. Applicants in the Service of Government, Corporations and Statutory Board can submit their application directly. When they present for the interview they should bring a hardcopy forwarded through the Head of Institution concerned.
2. Applications without the copies of the O/L and A/L certificates, incomplete applications and applications which are late or that do not accompany the bank slip will not be considered for further processing.

**REGISTRAR**
**21.12.2018** (C-4795)

**JCP சாரதி தேவை**
**1 கியூப் ரிப்பர்**
**விற்பனைக்கு உண்டு** (6762)

**தொடர்பு:- 077 480 1734**



**நல்லூர் பாம் சென்ரர்**

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட், ஊர்கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம் செய்து கொடுக்கப்படும். (கிறேட்டென் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு)

நல்லூர் பாம் சென்டர்,
19, முருகேசர்லேன், நல்லூர். (C-6702)


## கிறிஸ்மஸ் கரோல் கீதங்கள் சிறப்பு நிகழ்ச்சி இன்று

(யாழ்ப்பாணம்)

கிறிஸ்து பிறப்பு பெருவிழாவை முன்னிட்டு திருமறைக் கலாமன்றம் நடத்தும் "கிறிஸ்மஸ் கரோல் கீதங்கள்" சிறப்பு நிகழ்ச்சி இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு இல.286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறும். இந் நிகழ்ச்சியில் பல் வேறு தேவாலய பாடகர் குழாம்கள் வழங்கும் நத்தார் கீதங்கள் இடம்பெறும்.

இந்நிகழ்ச்சியில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது. (இ-7)

### பெயர் மாற்றம்

சாந்தை பண்டத்தரிப்பில் வசிக்கும் செல்வராசா றேகன் ஆகிய எனது பெயர் பிறப்பு அத்தாட்சி பத்திரத்தில் றகன் என தவறாக பதியப்பட்டுள்ளது. எனவே இன்று முதல் என் சார்ந்த சகல ஆவணங்களிலும் றேகன் என்ற பெயரையே பயன் படுத்துவேன் என இத்தால் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

உண்மையுள்ள,
செல்வராசா றேகன் (6763)


**TVS** மானிப்பாயில் மாபெரும் வாகனச் சந்தை

- புதிய TVS மோட்டார் சைக்கிள் ஒன்றை சொந்தமாக்க வேண்டுமா? இதோ உங்களது கனவு நிறைவேற.
- உங்களிடம் உள்ள அனைத்து வகையான பழைய மோட்டார் சைக்கிள்களுக்கும் புதிய TVS மோட்டார் சைக்கிள்கள் பெற்றுக்கொள்ளலாம்.
- குறைந்த வட்டி வீதத்தில் லீசிங் வசதி செய்து தரப்படும்.





இடம் : மானிப்பாய் NDB வங்கி அருகில், எமது காட்சியறை முன்றும்,
காலம் : இம்மாதம் 21,22,23,24 ஆம் திகதிகளில் 9 மணி தொடக்கம் 5.30 வரை.

தொடர்புகளுக்கு :
J.P Motors
Manipay & Chankanai
0777 151 101, 0777 585 909,
077 129 0712, 021 225 2226,


# 31ம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 23 - 02 - 1949



மறைவு 23 - 11 - 2018

## அமரர். சிதம்பரநடராசா காத்தாமுத்து

கடந்த 23.11.2018 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தந்தையாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (23.12.2018) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5 மணியளவில் கீரிமலையில் நடைபெறும். அக்கிரியையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் வீட்டுக்கிரியைகளிலும் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஆலடி, ஒழுங்கை,
வல்வெட்டித்துறை. (C-4782)

குடும்பத்தினர்.


# BRITISH COLLEGE OF ENGLISH

- 2004 ஆம் ஆண்டு எமது கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட நாளில் இருந்து இதுவரை சுமார் 5000 மாணவர்கள் IELTS இல் சித்தியடைந்து UK, Australia, Canada, USA போன்ற நாடுகளில் நிரந்தரமாக வசித்து வருகின்றனர்.
- A1, பரீட்சையில் சுமார் 750 இற்கு மேல் City & Guilds மற்றும் IELTS - Life Skills பரீட்சையில் நமது நாட்டு இல்லத்தரசிகள் சித்தியடைந்து UK ல் வசித்து வருகின்றனர்.

IELTS Academic + General
IELTS Life Skills

**Cambridge English Courses**
- Cambridge Preliminary Test (PET) (B1)
- Cambridge First Certificate in English (FCE) (B2)
- Cambridge Advanced English (CAE) (C1)

University of Cambridge Certificate வாழ்நாள் முழுவதும் பயன்படுத்தக்கூடியவை. Cambridge English Qualification Registration Centre for the British Council.

வகுப்புக்கள் நடைபெறும் இடம்
JAFFNA COLLEGE UNDERGRADUATE DEPARTMENT
NO.464, Hospital Road, Jaffna. 075 261 3659 077 880 3887


## இராசி பலன்

**மீனம்:** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மேடம்:** குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வாய்ப்புண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும் நாள்.

**இடபம்:** பல நாட்களாக பார்க்காமல் இருந்த உறவினர் ஒருவரை திடீரென சந்திக்கும் வாய்ப்புண்டு, திட்டமிட்ட காரியத்தில் மாற்றம் செய்வீர்கள், குலதெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்:** குடும்ப பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், செய்தொழிலில் கூடுதல் பொறுப்புக்கள் வந்து சேரலாம்.

**கும்பம்:** தாய்வழி ஆதரவு பெருகும், மனதில் தோன்றுவதைச் செய்வீர்கள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்.

| | | | |
|---|---|---|---|
| செவ் | | சந் | |
| | **இராசி பலன்** கிரகநிலை | | ராகு |
| கேது | சந்திராஷ்டமம் அனுசம், கேட்டை | | |
| சூரி, சனி | குரு, புத | சுக் | |

**22.12.2018**
மார்கழி 07, சனிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.23 மணிக்கு
பூரணை பின்னிரவு 12.23 மணிவரை
மிருகசீரிடம் பின்னிரவு 12.33 மணிவரை
சுபநேரம் 3.25-4.55 மணிவரை
இராகுகாலம் 9.25-10.55 மணிவரை
பூரணை விரதம், இரவு ஆருத்திரா அபிஷேகம்

வளவன்

**கடகம்:** விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, சுப தகவல்கள் வந்து சேரலாம், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மகரம்:** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும் நாள், மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.

**சிம்மம்:** வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், முன்னேற்றப் பாதையை நோக்கி செல்வீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**தனுசு:** இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் வெற்றி பெறும், கடன் பிரச்சினைகளை மாற்றியமைப்பீர்கள், வருங்காலம் பற்றிய சிந்தனை மேலோங்கும், தடைகள் உடைபடும் நாள்.

**விருச்சிகம்:** இரவு-பகலாக பாடுபட்டதற்கேற்ப பலன் கிடைக்கும், நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு.

**துலாம்:** விட்டுக் கொடுத்துச் செல்வதால் நிம்மதி கிடைக்கும், அடுத்தவர் விவகாரங்களில் தேவையில்லாமல் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, சேமிப்புகள் கரையக் கூடிய நிலை ஏற்படலாம்.

**கன்னி:** நண்பர்களிடையே நிலவிய மனஸ்தாபங்கள் குறையும், சாமர்த்தியமாகப் பேசி சாதனை படைப்பீர்கள், பாக்கிகள் வசூலாகலாம், தொழிலில் இருந்த எதிர்ப்புகள் விலகும்.

# சகல பிரதேசங்களிலும் டெங்கு நோய்த்தாக்கம்!

## யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

''அண்மைக்காலமாக யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட அனைத்துப் பிரதேசங்களிலும் டெங்கு நோய்த்தாக்கம் ஏற்படுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. எனவே இந்நோய்ப் பரவலைத் தடுப்பதற்காகப் பொதுமக்கள் அனைவரும் தமது வீடுகளில் டெங்கு நுளம்பு பெருகுவதற்கு ஏதுவான பொருட்களை அழிக்குமாறும் மற்றும் நுளம்பு பெருகக்கூடிய பாவனையற்ற கொல்கலன்களை வீதியோரங்களில் வீசாது யாழ்.மாநகரசபையின் கழிவகற்றும் பிரிவினர் தங்கள் பகுதிகளுக்கு வருகை தரும்போது அவர்களிடம் நேரடியாக வழங்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம்'' என யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள்பணிப்பாளர்வைத்திய கலாநிதி ஏ.தேவநேசன் அறிவித்துள்ளார். (இ)

# இ.போ.ச.வடபிராந்திய அலுவலகத்தை முடக்கி கோண்டாவிலில் நேற்று கவனயீர்ப்பு போராட்டம்

## முகாமையாளரின் உருவபொம்மை எரிப்பு





(யாழ்ப்பாணம்)

இ.போ.ச. வடபிராந்திய தொழிற்சங்கங்கள் இணைந்து பிராந்திய முகாமையாளரை இடமாற்றம் செய்யக் கோரி நேற்றுக்காலை 7.30 மணி தொடக்கம் கோண்டாவிலுள்ளவடபிராந்தியஅலுவலகத்தை முடக்கி கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

கடந்த 12 ஆம் திகதி இடம்பெற்ற தொழிற்சங்கப் போராட்டத்திற்கு சாதகமான முடிவுகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எடுக்காமை தொடர்பில் கண்டனமும் வெளியிடப்பட்டதோடு பிரதான பிராந்திய முகாமையாளரின் உருவபொம்மையும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளால் எரிக்கப்பட்டது.

வட பிராந்திய தொழிற்சங்கத்தால் முன்வைக்கப்பட்ட 10 அம்சக் கோரிக்கை குறித்த போராட்டத்தில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனிடம் கையளிக்கப்பட்டது.

குறித்த விடயம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர், வடபிராந்திய போக்குவரத்துச் சபை மக்களுக்கான சிறந்த சேவையை வழங்கி வருவதாகவும் தற்போது எழுந்துள்ள இ.போ.ச. வடபிராந்திய நிர்வாகச் சீர்கேடுகள் தொடர்பில் உரிய அதிகாரிகளின்கவனத்திற்குக்கொண்டு சென்று மிக விரைவில் உறுதியான நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினரின் கருத்தை ஏற்ற தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கைதட்டி தமது உற்சாகத்தை வெளிப்படுத்தியதோடு போராட்டத்தையும் நிறைவு செய்தனர்.

தமது போராட்டம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தமது போராட்டங்கள் பொது மக்களுக்கு எவ்வித இடையூறுமின்றி மட்டுப்படுத்தப்பட்ட உறுப்பினர்களின் பங்குபற்றுதலோடு இடம்பெறுவதாகவும் அதிகார வர்க்கத்தில் உள்ளோர் தமது போராட்டத்தை கொச்சப்படுத்த நினைத்தால் இனி வரும் வாரங்களில் வடபிராந்தியத்தில் உள்ள 7 சாலைகளையும் முடக்கிய மாபெரும் போராட்டமாக மாற்றமடையும் என எச்சரிக்கை விடுத்தனர். (இ-9)




# உள்ளூராட்சிச் சபைகளின் பாதீடும் மக்களின் எதிர்பார்ப்பும்

(யாழ்ப்பாணம்)

சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் ஏற்பாட்டில் உள்ளூராட்சிச் சபைகளின் பாதீடும் மக்களின் எதிர்பார்ப்பும் யாழ்ப்பாண மாநகர சபையின் 2019 ஆம் ஆண்டுக்கான பாதீட்டை முன்வைத்து ஓர் உரையாடல் என்ற தலைப்பிலான கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை (பௌர்ணமி தினம்) மாலை 4 மணியளவில் இல. 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி என்ற முகவரியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

இதில் பிரதான உரையைத் தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெறும். இக் கலந்துரையாடலில் யாழ்.மாவட்டத்தின் பல்வேறு உள்ளூராட்சி சபைகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் கலந்துகொள்வர்.

அரசியல், பொருளாதார, சமூக, விஞ்ஞான, கலை, இலக்கிய ஆர்வலர்கள் அனைவரையும் இதில் கலந்துகொள்ளுமாறு சமூக விஞ்ஞானப்படிப்பு வட்டத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (இ-7)

## தவிசாளரின் கைகள் கட்டப்பட்ட நிலையில்

# உறுப்பினர்களிடையே பாரபட்சம்

## ஜெயக்குமார் குற்றச்சாட்டு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையில் உறுப்பினர்களிடையே பாரபட்சம் காட்டப்படுவதாக சாவகச்சேரி நகரசபையின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர் யோ.ஜெயக்குமார் குற்றம்சாட்டியுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி நகரசபையில் இருந்து ஒரு சில உறுப்பினர்களே தொடர்ச்சியாக செயலமர்வுகள் மற்றும் கருத்தமர்வுகளுக்கு அனுப்பப்படுகின்றனர். ஒருசில உறுப்பினர்களை மாத்திரம் வைத்தே சபை செயற்பட்டு வருகிறது. அத்துடன் ஒரு சில உறுப்பினர்கள் தவிசாளருக்குத் தவறான தகவல்களைக் கொடுத்து குழப்பி வருகின்றனர். சாவகச்சேரி நகரசபையில் தவிசாளரின் கைகள் கட்டப்பட்ட நிலை காணப்படுகிறது.

தயவுசெய்து நேர்மையானதும் நியாய மானதுமான உயரிய சபை என்பதனைக் கருத்தில் கொண்டு செயற்படுங்கள். நாம் சபையில் கதைக்கும் பல விடயங்கள் திரிவுபடுத்தப்பட்டே வெளி உலகிற்கு செல்கின்றன. ஒருசிலர் சபைக்கும் உறுப்பினர்களுக்கும் களங்கத்தை ஏற்படுத்தும் விதத்தில் நடந்து கொள்கிறார்கள். வட்டார அபிவிருத்தியை நான் கெடுப்பதாகவும் தடைபோடுவதாகவும் கூறுகிறார்கள்.

அவ்வாறு ஒரு சம்பவம் இடம்பெற்றதை உறுதிப்படுத்தினால் தடைப்பட்ட அபிவிருத்தியை எனது சொந்தப் பணத்தில் மேற்கொள்ளத் தயாராக உள்ளேன்.

தொடர்ந்து மக்கள் சேவை ஆற்ற வேண்டும். குரோதங்களைத் தவிர்த்து அபிவிருத்தியைப் பற்றிச் சிந்தியுங்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-30)

# பரிசளிப்பும் மாநாடும் நாளை

(யாழ்ப்பாணம்)


RAHAMA (றகம) அனுசரணையுடன் வடமராட்சி நல்லொழுக்க நிறுவணம் (VOGT) நடத்தும் சர்வதேச நல்லொழுக்க தின பரிசளிப்பு நிகழ்வும் மகாநாடும் நாளை 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் பருத்தித்துறை பிரதான வீதி, சூரிய மஹாலில் வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத் தலைவர் மு.இரவீந்திரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர்.ஆ.கேதீஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி, கரவெட்டி பிரதேச செயலர் இ.தயாரூபன், மருதங்கேணி பிரதேச செயலர் சுகனேஸ்வரன், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரன் ஆகியோர் கலந்துகொள்வர். (இ-5)

# மகரஜோதிப் பெருவிழாவும் இளங்கலைஞர் மதிப்பளிப்பும்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் வியாவில் ஐயனார் தேவஸ்தான மகரஜோதிப் பெருவிழாவும் இளங்கலைஞர் மதிப்பளிப்பு விழாவும் எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு ஐயனார் தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ளது. (இ-5)



நல்லூர் பிரதேச சபையின் இரண்டாம் வட்டார மக்களின் கோரிக்கைக்கமைவாக உறுப்பினர் கு.மதுசூதனின் நடவடிக்கையால் தில்லைக்காளி வீதி மக்கள் நலன் கருதி துரிதகதியில் தார் வீதியாக புனரமைக்கப்படுகிறது.

# சிங்கள மொழிப் பயிற்சி வகுப்பு மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சின் கீழ் இயங்கும் மும்மொழிக் கற்கை நிலையத்தில் ஆரம்ப வகுதி உத்தியோகத்தர்களுக்கான 50 மணித்தியால சிங்கள மொழிப் பயிற்சியை நிறைவு செய்தமாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் எதிர்வரும் 30.12.2018 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சாவகச்சேரி நகர சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

01.09.2018 முதல் 18.12.2018 வரையான காலப்பகுதியிலே (பிரிவு 01 முதல் IIIB) குறித்த கற்கை நெறியைப் பூர்த்தி செய்தவர்கள் 26.12.2018 ஆம் திகதிக்கு முன்னர் மும்மொழிக் கற்கை நிலையத்திற்கு வருகை தந்து தங்கள் வரவினை உறுதி செய்து கொள்வதுடன் இச் சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் பங்கு பற்றித் தங்களுக்கான சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளுமாறு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தெரிவித்துள்ளார். (இ)

# டிப்ளோமா தர கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ். தொழில்நுட்பவியல் கல்லூரியின் பின்வரும் டிப்ளோமா தர கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

1.தொலைத்தொடர்புதொழில்நுட்ப தேசிய டிப்ளோமா (Telecommunication) NVQ மட்டம் 5 மற்றும் 6 முழுநேரம்.

2.நிர்மாண தொழில்நுட்ப தேசிய டிப்ளோமா (Construction Technology) NVQ மட்டம் 5 முழுநேரம் மற்றும் பகுதிநேரம்.

3.ஓட்டோமொபைல் (தன்னியக்க மோட்டார் வாகனம்) தொழில்நுட்ப தேசிய டிப்ளோமா (Auto Mobile) NVQ மட்டம் 5 பகுதிநேரம்.

4.தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தேசிய டிப்ளோமா (Information Communication Technology) NVQ மட்டம் 5 முழுநேரம் மற்றும் பகுதிநேரம்.

5.கணிய அளவையியல் தொழில்நுட்ப தேசிய டிப்ளோமா (Quantity Surveying) NVQ மட்டம் 5 முழுநேரம்.

6.கணக்கியல் தேசிய டிப்ளோமா (Accounting) NVQ மட்டம் 5 மற்றும் 6 முழுநேரம்.

7.ஆங்கிலமற்றும் கல்வி டிப்ளோமா (English and Education) முழுநேரம் மேலும் க.பொ.த. சா/த பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கான மூன்று மாத அடிப்படை ஆங்கில கற்கைநெறியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தகுதியானவர்கள் தொழில்நுட்பவியல் கல்லூரியுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். மேலதிக விபரங்களுக்கு கல்லூரியின் தொழில் வழிகாட்டல் நிலையத்துடன் (021 221 2403) தொடர்புகொள்ளலாம் என தொழில்நுட்பவியல் கல்லூரி இயக்குநர் எஸ்.முகுந்தன் அறிவித்துள்ளார். (இ)

# ஐ.தே.முன்னணி அரசை மீண்டும் கவிழ்ப்போம்!

## நாடாளுமன்றில் மகிந்த எச்சரிக்கை

(கொழும்பு)

**விரைவில் மீண்டும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை கவிழ்ப்போம் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எச்சரிக்கை விடுத்துள்ளார்.**



பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்தார்.

அரசாங்கத்தில் இருப்பவர்கள் தமது ஆசனங்கள் நிலையானவை என நம்பியிருக்கக்கூடாது. நாங்கள்விரைவில் மீண்டும் ஆட்சியை கவிழ்ப்போம். மக்கள் போராட்டங்கள் நடக்கும். ஆட்சி பறிக்கப்படும்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி சதிப்புரட்சி மூலம் அரசாங்கத்தை கவிழ்க்கவில்லை. வரியை அதிகரிக்கும் போதும் விலைகளை அதிகரிக்கும் போதும், பட்டினியில் இருக்கும் மக்கள் தொடர்பில் கவனம் செலுத்தவும்.

சர்வதேச நாணய நிதியம் கூறுவதை மட்டும் செய்ய வேண்டாம் எனக் கேட்டுக் கொண்ட அவர், மக்களின் நலனை கருத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

அத்துடன், ஒரு வேளையேனும் உணவு உட்கொள்ளாமல் இருப்பவர்கள் குறித்து கவனத்தில் கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

வரி விதிப்பானது ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கக்கூடியவகையில் அமைந்துள்ளது. இந்நிலையில் மேலும் வரி விதிப்பை அதிகரித்தால் மேலும் வாழ்வாதாரம் பாதிக்கும் என தெரிவித்துள்ளார்.

குறித்த நிலையை மாற்றி புதிய அரசாங்கத்தை உருவாக்க ஐ.தே.க. இடமளிக்கவில்லை என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். நாட்டை பாதுகாப்பதற்கு தேவை ஏற்படும் போது நாங்கள் வருவோம் என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (இ-7)

# ஈழத்துச் சிதம்பரத்திற்கு புராணம் தந்த பெருங்கவி



7 ஆம் திருவிழாவில் சுவாமி வீதி உலா வரும் காட்சி

தமிழ் தாயின் அருந்தவப் புதல்வர் புலவர் மணி இளமுருகனார் எம்மை விட்டுப் பிரிந்து பல ஆண்டுகள் கழிந்து விட்டன. அவர் சைவத்தமிழ் உலகத்திற்குச் செய்த அரிய பணிகளை என்றும் மறக்க முடியாது.


அவரது நினைவு நாள் இன்று ஈழத்துச் சிதம்பரத்தில் நிகழும் திருவெம்பாவை திருவாதிரைத் திருநாளாய் அமைவது அவருக்கு நடராஜப் பெருமானிடத்துள் பேரன்பையே காட்டுகின்றது. அவர் ஈழத்துச் சிதம்பர புராணத்தில் திருவெம்பாவை விழாவை மிகச் சிறப்பாகப் பாடியுள்ளார்.

பல நூல்களை எழுதிய அவர் தமது முதிர்ந்த வயதிற் பாடிய ஈழத்துச் சிதம்பர புராணமே அந்தச் சித்திரக் கோயிலில் எழுந்தருளிய அழகுத் தெய்வமாகியது. அந்தப் புராணத்தில் வருகின்ற பாடல்களில் ஒன்றைப் பாடிப் புலவர்மணி இளமுருகனாரின் நினைவு நாளை நிறைவு செய்வோமாக.

ஈழத்துச் சிதம்பரத்தில் நடராஜா
ஆனந்தக் கூத்தாடல்
மும்மைமல நீங்கியுயிர் வீடு பெற
வாடுகின்ற முடியாக் கூத்தர்
செம்மை மலி புலிக்காலும் பதஞ்சலியுங்
கண்டுகண்டு திளைத்து நிற்க
அம்மையுவர் கண் குளிர வைத்தெழுந்தின
திருமேனி யழகு கொள்ள
இம்மையடி யவரெல்லா மின்பார
வெழிற்புரத்தி லாடினாரே

க.சிறீகரன்

# 20 ஆவது அகவையில் வெற்றி நடைபோடும் -வலம்புரி-



## ஓங்கு புகழ் பெற்று வாழ்க வாழ்கவே

அகவை இருபது காண் எமதினிய அன்பு இதழ் வலம்புரியே!
ஆவலாய் அதிகாலையில் பல்சுவைகள் நாம் படித்தறிய, மகிழ
இன்சுவை வேந்தனாய் இரவிரவாய் தொகுத்து எடுத்து, நீ
ஈந்திடும் இணையிலா எம் கரம் தவழும் இனிய வலம்புரியே!
உலகதனில் நிகழும் பல் சேதிகளையும் தாங்கியே வந்து உளம் மகிழ
ஊரெல்லாம் புதினங்கள் யாவும் முரசொலிபோல் வலம்புரியே! நீ என்றும்
எல்லோரும் ஆவலுடன் படித்து மகிழ்ந்தறியவே, நீ என்றும்
ஏற்றமுடன் ஏறு நடைபோட்டு ஒப்பாடும் மிக்காடும் இன்றியே
ஐயம் தெளிய வைத்து ஐயம் திரிபத எடுத்தியம்பும் வலம்புரியே
ஒப்புவரை இல்லாமல் புதினங்களோடு அறிவுக்களஞ்சியமாய்
ஓரிதழாய் மண்ணில், கண்ணன் கை வலம்புரிபோல், நீ
ஔவைப்பாட்டி காட்டிய அறநெறியில் நிமிர்ந்து ஆல்போல் வளர
மேலும் சிறக்க வாழ் வாழ்க வாழ்க பல்லாண்டு வாழியவே.

கலாபூஷணம், திருமுருகன்
ந.சிவசுப்பிரமணியம

>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>

## "வலம்புரி" வாழ்க பல்லாண்டு

நலம் தரும் நோக்கில் நடுவு நிலையில்
நிதமும் நிகழும் நிகழ்வுகள் பலவும்
பலம் தரும் விதமாய்ப் பயனுறத் தகவல்கள்
பலவும் தொகுத்துப் படைத்திடும் பாங்குடன்
வலம்வரும் இதழே! வையகம் எங்கும்
விடிவினை வழங்கும் உன்னதப் பணியில்
"வலம்புரி" யாக விளங்கிடும் ஏடே!
வளர்க! உன்றன் நாதம் ஓங்கிட!

நாயன்மார்க்கட்டு
ப.மகேந்திரதாசன்

>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>

## வதம் செய்

வலம்புரியே! வலம்புரியே!
வாசகர் மனங்களில் நிறைந்தவனே...
வயது 19 என்ன வையகம் உள்ள வரை வாழ்வாய் நீ!
வஞ்சகர் செயல்களை வதம் செய்து வடித்திடு செய்திகளை
வாழ்த்துகிறோம் வாயார
வாஞ்சையுடன் வளர்மதி போல் வளர்ந்து
நீ நீடூழி வாழ்கவென.

மந்துவிலான்




# 60 வது பிறந்தநாள் வாழ்த்தும் சேவைநலன் பாராட்டும்

## திருமதி. சூரியகலா சூரசங்காரம்



கரவெட்டி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் பணிபுரிந்து தனது 60ஆவது வயதில் இன்று ஓய்வு பெறும் எமது குடும்ப தலைவி திருமதி.சூரியகலா சூரசங்காரம் அவர்கள் தனது 60 ஆவது பிறந்த தினத்தை 22.12.2018 இன்று மிக விமர்சையாக கொண்டாடுகின்றார். அவரை பல்லாண்டு காலம் மென் மேலும் சகல செல்வங்களும் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

(6753)

ஆதியாமலை,
உடுப்பிட்டி.

குடும்பத்தினர்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

# மன்னாரில் பண்டிகைக்கால வியாபார நிலையங்கள் அமைப்பு

## பொருட்களை கொள்வனவு செய்வதில் மக்கள் ஆர்வம்






(மன்னார்)

எதிர்வரும் நத்தார்,புதுவருட பண்டிகைக்கால வியாபாரங்களை மேற்கொள்ள இம்முறை மன்னார் நகர சபை பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் சுமார் 300 இற்கும் அதிகமான தற்காலிக வியாபார நிலையங்கள் அமைக்க இடம் வழங்கப்பட்டுள்ள நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை முதல் பண்டிகைக்கால வியாபாரங்கள் இடம் பெற்று வருகின்றன.

ஒவ்வொரு வருடமும் நத்தார்,புதுவருட பண்டிகைக்கால வியாபாரங்களை மேற்கொள்ள மன்னார் நகர சபைக்குட்பட்ட பகுதிகளில் உள்ளூர் மற்றும் வெளி மாவட்ட வர்த்தகர்களுக்கு கேள்வி கோரலின் அடிப்படையில் இடம் வழங்கப்படுவது வழமை.

அந்த வகையில் மன்னார் நகர சபைக்குட்பட்ட பகுதிகளில் சுமார் 300 இற்கும் அதிகமான தற்காலிக வியாபார நிலையங்கள் அமைக்க இடம் வழங்கப்பட்டது.

எதிர்வரும் 31 ஆம் திகதி வரை குறித்த பண்டிகைக்கால தற்காலிக வியாபார நிலையங்களின் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இந்த நிலையில் மக்கள் பண்டிகைக்காலத்திற்கு தேவையான பொருட்களை கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-285)




# வழிபாட்டு தலங்களின் சீரமைப்பிற்கு காசோலைகள்



(முல்லைத்தீவு)

கோவில்கள் மற்றும் தேவாலயம் என்பவற்றின் சீரமைப்புப் பணிகளுக்காக முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரனால் காசோலைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 2018ஆம் ஆண்டிற்கான பிரமாண அடிப்படையிலான நிதியொதுக்கீட்டிலிருந்தே இவ்வுதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வருடம் மொத்தமாக, எட்டு வழிபாட்டுத் தலங்கள் உள்வாங்கப்பட்டு, ரவிகரனால் சீரமைப்பு வேலைகளுக்கான காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் யோகபுரம் பகுதியில் அமைந்துள்ள சிறீ வயலூர் விநாயகர் கோவில், கைவேலிப் பகுதியில் அமைந்துள்ள சிறீ முறிகண்டிப் பிள்ளையார் கோவில், ஒட்டுசுட்டான்,புதியநகர் பகுதியில் அமைந்துள்ள இத்தியடி சித்தி விநாயகர் கோவில் போன்ற வழிபாட்டுத்தலங்களுக்கு ஏற்கனவே, ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் கடந்தவாரம் தூய வேளாங்கன்னி மாதா தேவாலயம்(தீர்த்தக்கரை), நரசிம்ம வைரவர் கோவில்(3ம்வட்டாரம் முள்ளியவளை), கோட்டைக்கேணிப் பிள்ளையார் கோவில்(கொக்குத்தொடுவாய்), சிறீ ஞானமூர்த்திப் பிள்ளையார் கோவில் (வற்றாப்பளை), ஆதி நாகதம்பிரான் கோவில் (கள்ளப்பாடு வடக்கு) ஆகிய ஐந்து வழிபாட்டுத் தலங்களுக்கும் (இரண்டு இலட்சத்துப் பத்தாயிரம்) ரூபா பெறுமதியான காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலகத்தில் ஆலய நிர்வாகிகளுக்கு குறித்த காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டன.

மேலும் இவ்வருடம் மொத்தமாக எட்டு வழிபாட்டுத் தலங்கள் உள்வாங்கப்பட்டு, மூன்று இலட்சத்து அறுபதாயிரம் ரூபா பெறுமதியில் காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# சீரற்ற காலநிலை; தொழிலை மேற்கொள்ள முடியாத நிலை

## உதவிகளை வழங்குமாறு கடற்றொழிலாளர்கள் கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலவுகின்ற சீரற்ற காலைநிலையால் பாதிக்கப்படும் கடற்றொழிலாளர்கள் தமக்கு நிவாரண உதவிகளைப் பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் சுமார் நான்காயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் கடற்றொழிலையே பிரதான தொழிலாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் அண்மைய நாட்களாக நிலவுகின்ற சீரற்ற காலநிலை, கடல்கொந்தளிப்பு என்பவற்றால் கடற்றொழில் பாதிக்கப்படுவதாகவும் தொழிலை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ள இப்பகுதி கடற்றொழிலாளர்கள் இவ்வாறான பாதிப்புக்களால் தமது தொழில்களை மேற்கொள்ளமுடியாதநிலை காணப்படுவதுடன், தமது வாழ்வாதாரத்தை கொண்டு செல்வதிலும் பாரிய சிக்கல் நிலை காணப்படுகின்றது என்று மீனவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்வாறு இயற்கையால் பாதிக்கப்படும் தங்களுக்கு குறிப்பிட்ட காலத்திற்கு நிவாரண உதவிகளைப் பெறறுத்தர நடவடிக்கை எடுக்குமாறு கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)

# வேகக்கட்டுப்பாட்டை இழந்த வாகனம் நந்திக்கடலினுள் பாய்ந்தது



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம்-முல்லைத்தீவு பிரதான வீதியால் பயணம் செய்துகொண்டிருந்த இராணுவத்தினருடைய வாகனமொன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து நந்திக்கடலில் பாய்ந்துள்ளது.

இதனால் அதில் பயணித்த ஒருவர் காயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (2)

# இராணுவத் தலைமையகத்தினால் கிளிநொச்சியில் நத்தார் விழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இராணுவ தலைமையகத்தின் ஏற்பாட்டில் பிரமாண்டமான நத்தார் விழா கிளிநொச்சியில் நேற்று முன்தினம் பிற்பகல் 5.30 மணியளவில் இரணைமடு சந்தியில் அமைந்துள்ள நெலும்பியச மண்டபத்தில் இடம்பெற்றது. கிளிநொச்சி இராணுவத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த நத்தார் விசேட நிகழ்வில் மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க ஆயர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டிருந்தார்.

இதன்போது கத்தோலிக்க திருச்சபை, தென்னிந்திய திருச்சபை, அங்கிலிக்கன் திருச்சபை, பப்றிஸ் திருச்சபை, மெதடிஸ்த திருச்சபை ஆகிய திருச்சபையின் பாடகர் குழுக்கள் நத்தார் கீதங்களை இசைத்தனர். இதேவேளை இராணுவத்தினரின் நத்தார் பாடல் குழுவினரும் நத்தார் கீதங்களை இசைத்ததுடன், கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.

நத்தார் பாப்பாக்கள் இதன்போது வருகை தந்து சிறார்களை மகிழ்வித்ததுடன், பரிசுகளையும் வழங்கினர். இந்நிகழ்வில் பேராயர், மதகுருமார், சர்வமத குருமார், கிளிநொச்சி இராணுவத் தலைமையக கட்டளை அதிகாரி, படைப்பிரிவுகளின் கட்டளை அதிகாரிகள் என பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

ஒன்பதாவது தடவையாக குறித்த நத்தார் விசேட நிகழ்வுகள் கிளிநொச்சி இராணுவ தலைமையகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறான நிகழ்வுகள் ஊடாக இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சியாக நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன. (2)

# மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்



(வவுனியா)

நெடுங்கேணி பிரதேசத்தில் 60 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஒலுமடு தமிழ் மகா வித்தியா லய அதிபர் கு.விமலேந்தின் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் இப்பகுதிகளில் பெற்றோரை இழந்த மாணவர்களுக்கும் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள பழைய வாடி அ.த.க.பாடசாலையில் 12 மாணவர்களுக்கும் ஒதியமலை பாடசாலையில் 09 மாணவர்களுக்கும் ஒலுமடு தமிழ் மகா வித்தியாலயத்தில் 39 மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்களை முல்லைத்தீவு வன்னி சுதந்திர ஊடகவியலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் ஒரு இலட்சத்து எண்ணூறு ரூபா செலவில் 60 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் ஒலுமடு தமிழ் மகா வித்தியாலயத்தில் வைத்து மாணவர்களுக்கு சமூக உதவித் திட்டத்தின் பணிப்பாளர் ரவீந்திரனால் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. (2)

# வனவளத்திணைக்களத்தினால் ஆக்கிரமிக்கப்பட்ட சின்ன ஆலங்குளத்தை விடுவித்து புனரமையுங்கள்

(கண்டாவளை)

வவுனியா சின்னத் தம்பனை பிரதேசத்தில் வனவளத்திணைக்களத் தினால் ஆக்கிரமிக்கப்பட்ட சின்ன ஆலங்குளத்தை விடுவித்து குளத்தைப் புன ரமைத்து வயல் காணி களை தமக்கு பெற்றுத்தரு மாறும் இதனால் சுமார் 50 இற்கும் மேற்பட்ட குடும்பங் களின் வாழ்வாதாரம் கேள் விக் குறியாகியுள்ளதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரி வித்துள்ளனர்

சின்னத்தம்பனை சின்ன ஆலங்குளத்தில் வாழ்ந்துவரும் சுமார் 50 இற்கும் மேற்பட்ட விவசா யக்குடும்பங்களின் வயல் காணிகள் வனவளத்திணை க்களத்தினால் எல்லையிட ப்பட்டுள்ளன.

இதனால் இக்குளத்திற் குட்பட்ட விவசாயிகள் குறி த்த காணிகளுக்குள் பயிர்ச் செய்கை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத் துத் தெரிவித்த பிரதேச மக் கள், சின்ன ஆலங்குள கிராமமானது சின்னத்தம் பனை பிரதேசத்திற்குட்பட்ட கிராமமாகும்.

இந்தக்குளத்தின் கீழ் கடந்த 30 வருடங்களாக 90 ஏக்கர் வரையான வயல் நிலங்களில் விவசா யச் செய்கைகளை மேற் கொண்டு வந்தோம்.

இதனால் சுமார் 50 வரையான குடும்பங்கள் நன்மையடைந்திருந்தன.

இதன் பின்னர் யுத்தத் தினால் இடம்பெயர்ந்து மீளவும் நாங்கள் குடியே றிய நிலையில் எமது குளம் உடைப்பெடுத்த நிலை யிலும் வயல் நிலங்கள் பற்றைக்காடுகளாகவும் காணப்பட்டன.

இவற்றை வனவளத்தி ணைக்களம் தங்களுடைய காணிகளாக எல்லையிட் டுள்ளது.

இவ்வாறு எல்லையிடும் போது. இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் களுக்கு அறிவித்திருந்தோம், அவர்களும் எந்த நடவடி க்கையும் எடுக்கவில்லை. அதன் பின்னர் நாங்கள் ஜனாதிபதிக்கும் சம்பந்தப் பட்ட அமைச்சுக்களுக்கும் கடிதங்கள் அனுப்பினோம், ஆனால் இது வரை எதுவும் நடக்கவில்லை.

மீள்குடியேற்றத்தின் பின் னர் நாங்கள் வயல்களைச் செய்ய முடியாதநிலை ஏற் பட்டுள்ளது.

இக்குளத்தைப் புனர மைத்து இதன் கீழுள்ள வயல் காணிகளை விடு வித்து தரும் பட்சத்தில் சுமார் 50 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் நன்மைய டைவார்கள் என்று குறிப் பிட்ட மக்கள், தற்போது ஒரு ஏக்கர் வயற்காணியை பத் தாயிரம் ரூபாய் குத்தகை யாகப்பெற்று பயிர்ச்செய்கை மேற்கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

தமது பிரதேசத்திற்குட் பட்ட சின்ன ஆலங்குளத் தினையும் வயல் காணி களையும் விடுவிடுத்து அவ ற்றைப் புனரமைத்து தரு மாறு பிரதேச விவசாயிகள் கோரியுள்ளனர். (2-315)

# வவுனியாவில் பெய்த மழையினால் மக்களின் இயல்பு நிலை பாதிப்பு




(குருமன்காடு)

வவுனியாவில் கடந்த சில தினங்களாக கடும் குளிருடனான கால நிலை நீடித்ததையடுத்து நேற்று காலை 9.30 மணியிலிரு ந்து கடும் மழை பெய்த நிலையில் மக்களின் இய ல்பு நிலை பாதிப்படைந்துள் ளது.

இதனால் வர்த்தக நிலை யங்கள், தூர இடங்களிலி ருந்து நகருக்கு வருகை தந்த பயணிகள் மழையி னால் அவதியடைந்த னர். (2-250)

# உற்பத்தியை அதிகரிப்பதற்கு விவசாயிகளுக்கு விதைகள்



(முல்லைத்தீவு)

விசேட கமத்தொழில் அபிவிருத்தி வேலைத்திட் டத்தின்கீழ் உற்பத்தியை அதி கரிக்கும் பொருட்டு தரம்மிக்க விதைகளை இலவசமாக வழ ங்கும் நிகழ்வு கமநல அபிவி ருத்தி உத்தியோகத்தர் ந.சுந்தரமூர்த்தி தலைமை யில் உடையார்கட்டு கமநல சேவை நிலையத்தில் அண் மையில் நடைபெற்றது.

இதில் உழுந்து, பயறு, கௌப்பி, கச்சான், எள்ளு, சோளம், குரக்கன் போன்ற தரமான விதைகள் விவசா யிகளுக்கு வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் விசு வமடு மற்றும் உடையார் கட்டு விவசாய போதனாசிரி யர்கள் கலந்து கொண்டிருந் தனர். (2)

வன்னி வலம்

# இரண்டு மாதங்கள் கடந்த நிலையிலும் மின்கட்டணப்பட்டியல் வழங்கவில்லை

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்டத் தின் உருத்திரபுரம் மற்றும் சிவநகர் கிராமங்களில் மின்சார சபையைச் சேர்ந்த மின்மானி வாசிப்போர் கடந்த இரண்டு மாதங்க ளுக்கு மேலாக வீடுகளுக்கு வருகைதந்து பார்வையிட்டு மின் கட்டணப் பட்டியல்கள் வழங்காததால் இப்பகுதி மக்கள் உரிய மின்கட்ட ணத்தை செலுத்த முடியா மல் கஷ்டமடைவதாககவலை தெரிவிக்கின்றனர்.

சரியாக மொழி தெரி யாத சகோதர இனத்தைச் சேர்ந்த ஒருவர் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இந்த மின்வாசிப்பு நடவ டிக்கையைச்செய்து வந்தார். இதன் போது மின்வாசி ப்பு நடவடிக்கை இழுபறி நிலையிலும் ஓரளவு நடை பெற்றதாகவும் பொது மக் களால் தெரிவிக்கப்படுகி றன.

உரிய மாதங்களில் தமக்கான மின்கட்டணப் பட்டியல்கள் கிடைக்காமல் பல மாதப்பட்டியல் கிடைக் கும் போது மிகக் கூடுதலான கட்டணத்தை செலுத்துவத ற்கு தாம் கஷ்டமடைய நேரிடு மெனவும் கவலையடை கின்றனர்.

எனவே உரிய மின்சார சபையினர் மற்றும் அதி காரிகள் இவ்விடயத்தில் கூடிய கவனமெடுத்து மின் பாவனையாளர்கள் நன் மையடைய உதவுமாறு வேண்டுகோள் விடுத்துள் ளனர். (2-254)

# தேசியக்கொடியை அநாகரிகமான முறையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞன் கைது



(கிளிநொச்சி)

வவுனியா நகரசபை பூங்கா வீதியில் நேற்று முன்தினம் மாலை இலங் கையின் தேசியக்கொடியு டன் ஆட்டோவில் அதிவே கமாகச் சென்ற இளைஞர் களை பொலிஸார் துரத்திப் பிடித்து நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

வவுனியா நகரசபைக்கு அருகே வழமைபோன்று போக்குவரத்து பொலிஸார் கடமையில் ஈடுபட்டிருந் தனர். இதன்போது ஓர் ஆட்டோ அதிவேகமாகச் சென்றது.

இதனை அவதானித்த போக்குவரத்து பொலிஸார் ஆட்டோவை மறித்தனர். எனினும் பொலிஸாரின் சைகையை கருத்தில் கொள்ளாது ஆட்டோ அதி வேகமாகச் சென்றது.

பின் தொடர்ந்த பொலி ஸார் நகரசபை பூங்கா விற்கு அருகே ஆட்டோவை மடக்கிப் பிடித்தனர்.

பொலிஸாரின் சைகை யினை கருத்தில் கொள் ளாது அதிவேகமாக சென் றமை, ஆட்டோவின் பின்பு றமாக இலங்கையின் தேசி யக்கொடியை அநாகரிக மான முறையில் வைத்தி ருந்தமை போன்ற குற்றச் சாட்டுக்களை முன்வைத்து நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

ஆட்டோவின் பின்புற மாக அநாகரிகமான முறை யில் காணப்பட்ட இலங் கையின் தேசியக்கொடியை சீரான முறையில் வைக் குமாறு பொலிஸார் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க ஆட்டோவில் பயணித்த இளைஞன் தேசியக் கொடியை சீரான முறை யில் மாற்றினான். (2)

# முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களுக்கு தண்ணீர் படுக்கை மெத்தைகள் வழங்கிவைப்பு



(கிளிநொச்சி)

கனடா சிவன் அறக் கட்டளை கிளையின் அனு சரணையுடன் சிவன் அறக் கட்டளை நிறுவனத்தி னால் ஏ-9 வீதி மாங்குளம் பிரதேசத்தில் அமைந் துள்ள உயிரிழை முள்ளந் தண்டு வடம் பாதிக்கப்பட்டு தங்கவைத்து பராமரிக் கப்பட்டு நிலையத்திலுள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு 40 தண்ணீர் படுக்கை மெத்தைகள் வழங்கி வைக் கப்பட்டன.

மாகாண சுகாதார பணிப் பாளர் டாக்டர். கேதீஸ்வர னின் வேண்டுகோளின் பிரகாரம் சிவன் அறக்கட் டளை நிறுவனத்தின் இயக குநர் கணேஸ்வரன் வேலா யுதத்தினால் படுக்கைப்புண் ணால் பாதிக்கப்பட்ட 40 பேருக்கு தண்ணீர் மெத் தைகள் அண்மையில் வழ ங்கி வைக்கப்பட்டன.(2-60)

# கட்டாக்காலி கால்நடைகளால் இரவு-பகல் வேளைகளில் விபத்து

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட் டத்தின் மாங்குளம்- வெள் ளாங்குளம் பிரதான வீதி யில் இரவு-பகல் வேளை களில் கட்டாக்காலி கால் நடைகளின் நடமாட்டத்தால் வாகன சாரதிகள், பொது மக்கள் ஆகியோர் பெரும் அசௌகரியங்களை எதிர் கொள்வதுடன் அடிக்கடி விபத்துக்களும் இடம் பெற்று வருகின்றன.

முல்லைத்தீவு மாங் குளம் ஏ-9 வீதியில் இருந்து துணுக்காய் ஊடாக வெள் ளாங்குளம் வரை செல்லும் பிரதான வீதியில் தினமும் இரவு-பகல் வேளைகளில் கால்நடைகளின் நடமாட் டம் அதிகரித்துக் காணப்ப டுவதனால் பலரும் பல் வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதுடன் அடிக் கடி விபத்துக்களும் இடம் பெற்று வருகின்றன.

அதாவது மாங்குளம், வன்னிவிளாங்குளம், மல் லாவி, துணுக்காய், கல்வி ளான், சேவாலங்கா கிரா மம், வெள்ளாங்குளம் ஆகிய பகுதிகளில் கட்டாக்காலி களாக விடப்பட்டுள்ள கால் நடைகள் இரவுவேளைக ளிலும் பகல் வேளைகளி லும் வீதிகளில் காணப்படு கின்றன.

இவ்வாறு வீதியில் கட் டாக்காலிக் கால்நடைகள் காணப்படுவதுடன் வீதி யால் பயணிக்கும் வாகனங் கள் மற்றும் பயணிகள் பல்வேறு அசௌகரியங் களை எதிர்கொள்வதுடன் அடிக்கடி விபத்துக்கள் இடம் பெறுவதுடன் விபத்துக்க ளால் பெருமளவானோர் காயமடைவதுடன் உயிரி ழப்புக்கள் கூட இடம்பெற் றுள்ளன.

எனவே இவ்வாறு கட் டாக்காலிகளாக வீதியில் காணப்படும் கால்நடை களைக் கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பல ரும் கோரிக்கை விடுத்துள் ளனர். (2-315)



கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் ஒளிவிழா நிகழ்வு நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட செயலக வளாகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட செயலக உத்தியோகத்தர்களினால் நத்தார் கீதங்கள் இசைக்கப்பட்டதுடன், மாவட்ட செயலக ஊழியர்களின் பிள்ளைகளின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்—162

# பார்த்தீனியத்தை அழிப்பதற்கான வரவேற்கத்தக்க முயற்சி



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

வடமாகாணமெங்கும் பார்த்தீனியம் பரந்து வளர்ந்து கொண்டிருக்கின்றதனை அவதானிக்கும் அதேநேரத்தில் அதனை அழிப்பதற்கான முயற்சிகள் பலமட்டங்களில் பல முறை எடுக்கப்பட்டிருந்தாலும் அனைத்தும் வெற்றியளிக்கவில்லை என்பது இதுவரை நடைபெற்ற நிகழ்வுகளிலிருந்து அறிந்து கொள்ள்லாம்.

இது ஒரு அந்நியக்களை என்பதனையும் தாண்டி இவ்வாறான அந்நியக்களையின் ஊடுருவல் தற்செயலானதாக இருப்பினும்அதனைநாம்முளையிலேயே கிள்ளியெறிய முடியாமற்போய்விட்டது. ஆரம்ப காலங்களில் நாட்டிலிருந்த சூழ்நிலை ஒரு காரணமாக முன்வைக்கப்பட்ட போதிலும் எமது கவனயீனமும் இதற்குள் உள்ளார்ந்து கொண்டிருக்கும் முக்கிய காரணங்களில் ஒன்றாகும்.

ஆரம்பத்தில் இக்களை பற்றி அறிந்தபோது எவருமே இதனைப்பற்றி அலட்டிக் கொள்ளாதிருந்தது தற்போது பல இடங்களிலும் பரந்து வளர்ந்து கொண்டிருக்கின்றது. இன்னும் இதனது வீரியம் அப்படியேயிருப்பதுதான் இதனை அழிப்பதிலுள்ள பிரச்சினையாகும்.

வடபகுதியில் பரந்துவிட்ட இக்களை செடியொன்றுக்கு ஏறக்குறைய ஒரு இலட்சம் விதைகளை உற்பத்தி செய்வதனால் அந்தவிதைகளும் வீரியம் கொண்டு முளைத்து புதிய தாவரங்களை உருவாக்கும் தன்மை கொண்டுள்ளதால் இதனை அழிப்பது சுலபமான காரியமல்ல. காலநிலை மாற்றம் நாம் பயிரிடும் பயிர்களை அதிகளவில பாதிப்பதனை நாம் உணர்ந்திருந்தாலும் அதன் விளைவுகளை அனுபவித்துக் கொண்டிருப்பதாலும் பார்த்தீனியத்தின்வளர்ச்சியையோ அல்லது பரம்பலையோ இது பாதிக்கவில்லை.

இந்நிலையில் பார்த்தீனியத்தை கட்டுப்படுத்துவதற்கு அவ்வப்போது முயற்சிகள் எடுக்கப்படுவதனை வரவேற்கும் அதே நேரத்தில் இவ்வாறான முயற்சிகளுக்கு மக்கள் முழுமையாக ஊக்கமளித்து அனைவரும் இதில் இணைந்து கொள்ளவேண்டும். பார்த்தீனியத்தினால் ஏற்படும் பின்விளைவுகள் பாதகமானவை என்பதனைநாம் உணருவோமாயின் அதற்கான நடவடிக்கைகளை கைகட்டி வேடிக்கை பார்ப்பதனை வி டநாமும் பங்காளர்களாக மாறி இந்த முயற்சிக்கு உதவுதல் வேண்டும்.

பார்த்தீனியத்தை அழிப்பதற்கு பலவழிகள் பரிந்துரைக்கப்பட்டாலும் இரசாயனத்தைப் பயன்படுத்தி அதனை அழிப்பது முழுமையாக பலனைத்தராது. இது தொடர்ச்சியாக செய்ய வேண்டிய கட்டுப்பாட்டு முறைகளாகும். பார்த்தீனியத்தின் விதையுற்பத்தியை எவ்வகையினாலும் தடுப்பதற்கு முயற்சி செய்தால் அது ஒரு வகையில் அதனது எண்ணிக்கையையும் பரம்பலையும் கட்டுப்படுத்த வழிவகுக்கும்.

ஆனால் அதேநேரத்தில் களையை அழிப்பதற்கென்று தொடங்கி எம்மிடமுள்ள பல்வதை தன்மையுடனான வளங்களை அழிப்பது குற்றமாக்கப்பட்டிருக்கின்றது. அந்த வகையில் எமது சூழலுக்கேற்ற வகையில் கட்டுப்பாட்டு முறைகளை இனங்கண்டு பரிசோதித்து பின்னர் அதனை சாதாரணமான விவசாயியின் தோட்டத்தில் பரீட்சித்துப் பார்த்தபின் மக்களுக்கு சிபாரிசு செய்யலாம்.

பார்த்தீனியத்தின் வளர்ச்சி அபரிமிதமாக இருப்பது அதற்கு இன்னும் உறுதுணையாக இருக்கின்றது. பார்த்தீனியத்தின் பரம்பலை முதலில் கட்டுப்படுத்துதல் அவசியமாகும். புதிய இடங்களுக்கு அது பரவாமலிருக்க நாமனைவரும் முயற்சிகளை எடுக்க வேண்டும். ஏனோதானோ என வெட்டிப்பேச்சு பேசிக்கொண்டிருப்பது எமக்கு நல்லதல்ல.

இது அவர்களின் வேலையென நாம் இலகுவாக ஒதுங்கிக்கொள்ளவும் கூடாது. ஒவ்வொருவருக்கும் பொறுப்புக்கள் உண்டு என்பதனை உணருதல் வேண்டும். இது எமது தேசத்தின் சுற்றுச் சூழலை பாதுகாக்கும் கடமையாக உணரப்பட வேண்டும்.

பார்த்தீனியத்தை பூப்பதற்கு முன்பு பிடுங்கியழித்து விட்டால் அது பெருகுவதற்கு வாய்ப்புக்களை நாம் குறைக்கத்தொடங்கி விடுவோம். பூக்கள் உருவாவதற்கு முன்னர் அதனை அழித்து விடுவது சிறந்தது. பூக்கள் உருவாகி காய்கள் உருவாகி விட்டால் விதைகள் விரைந்து வெடித்து பரவத்தொடங்கி விடும். பார்த்தீனியத்தை ஒருமுறை அழித்து பிரயோசனமில்லை. அதனை தொடர்ச்சியாக அது வளரவளர அழித்துக்கொண்டிருக்க வேண்டும். அதன் மூலம் தான் பார்த்தீனியத்தை அழிக்கலாம்.


களைநாசினிகளை பயன்படுத்தி அழிப்பது முழுமையாக சாத்தியமில்லையாயினும் மக்களால் அழிக்க முடியாத இடங்களில் களை நாசினிகளைப் பயன்படுத்த வேண்டும். இந்த பிரயோகத்தில் சுற்றுச் சூழலையும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்பதும் இங்கே முக்கியமானதாகும்.

வாகனங்கள்செல்லும்பாதையூடாக இதனது பரவல் அதிகமாக காணப்படுவதனால் அந்த பாதைகளிலுள்ள பார்த்தீனியத்தை தொடர்ந்து அழித்துக் கொண்டிருந்தால் இது சாத்தியமாகும். தற்போது எங்கள் எல்லோர் முன்னால் எழுந்துள்ள கேள்வியென்னவெனில் இந்த செயற்பாட்டை தொடர்ச்சியாக செய்யப்போகும் கட்டமைப்பு எது? எவ்வளவு காலத்திற்கு இதனை இவ்வாறு செய்யப்போகின்றோம்.

இதற்கு மக்களை எவ்வாறு அறிவூட்டப்போகின்றோம்? மக்களுக்கான விழிப்புணர்வினை கொடுத்து அவர்களை ஈடுபடுத்துவதற்கான பொறிமுறை யாது? இவையெல்லாவற்றையும் கண்காணிக்கும் பொறிமுறை என்ன? இவ்வாறான பல கேள்விகளுக்கு நாம் பதிலைக் கண்டு கொண்டால் பார்த்தீனிய அழிப்பு என்பது சாத்தியமாகும்.

வாருங்கள் முயன்றால் எம்மால் முடியாதது எதுவுமில்லை. அனைவரும் இணைந்து இந்த முயற்சிக்கு ஆதரவும் எம்மாலான பங்களிப்பினையும் வழங்குவோம்.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 176







பருத்தித்துறை பிரதேச சபையின் நாகர் கோவில் வட்டார உறுப்பினர் ஆ.சுரேஸ்குமார் தனக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து 168 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங் களை வழங்கினார்.

(படங்கள்:- மகாலிங்கம்)

# இடைக்கால கணக்கறிக்கைக்கு ஆதரவளிக்கப்போவதில்லை

## ஜே.வி.பி. எம்.பி.பிமல் எதிர்ப்பு



(கொழும்பு)

**புதிய அரசாங்கத்தின் நிதியமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால கணக்கறிக்கைக்கு ஆதரவளிக்கப் போவதில்லை என மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

நிதியமைச்சினால் நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால கணக்கறிக்கை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது ஐக்கிய தேசியக் கட்சியின் பழைய கருத்திட்டங்களை மேற்கொள்ளும் வகையிலேயே முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், மலையக மக்களின் அவலநிலை ஒக்டோபர் 26ஆம் திகதிக்கு பின்னர் ஏற்பட்டதல்ல என சுட்டிக்காட்டிய அவர், அதற்கு மகிந்த - ரணில் அரசாங்கங்கள் இரண்டும் பொறுப்புக்கூற வேண்டும் எனவும் கடந்த 50 நாட்களைச் சுட்டிக்காட்டி ரணில் அரசாங்கம் தப்பிக்க முயல்வதாகவும் விமர்சித்தார்.

இந்நிலையில், சமுர்த்தி, சம்பளம், ஓய்வூதியம் ஆகியவற்றுக்கான நிதியொதுக்கீட்டை மேற்கோள்காட்டி சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால கணக்கறிக்கையை தாம் ஆதரிக்கப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

## அரசியல் நெருக்கடி சர்வதேசத்தில் இலங்கைக்கு தாக்கம் செலுத்தியது

### சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டு



(கொழும்பு)

நாட்டில் கடந்த 51 நாட்களாக இடம் பெற்ற அரசியல் நெருக்கடி சர்வதேச அரங்கில் தாக்கம் செலுத்தியது. பல பாரிய அபிவிருத்திகளுக்கு சர்வதேசமே தடையை விதித்தது.

கடந்த அரசாங்கத்தில் இழுபறி நிலையில் காணப்பட்ட அபிவிருத்தி செயற்றிட்டங்களை நாங்கள் குறுகிய காலத்திற்குள் முழுமைப்படுத்தினோம் என பாரிய நகர அபிவிருத்தி மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

பாரிய அபிவிருத்திகள் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சின் பொறுப்புக்களை நேற்று வெள்ளிக்கிழமை பொறுப்பேற்றதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாங்கள் கடந்த 51 நாட்களாக பாரிய போராட்டத்தின் மத்தியில் வெற்றி பெற்றுள்ளோம். மீண்டும் பாரிய நகர அபிவிருத்தி மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சு கிடைத்துள்ளமை மகிழ்ச்சிக்குரியது. அரசியல் நெருக்கடியின் காரணமாக பல அபிவிருத்திகள் இன்று தடைப்பட்டுள்ளன. சர்வதேசத்தின் ஆதரவு இல்லாமல் ஒருபோதும் தனித்து செயற்பட முடியாது.

அரசியலமைப்பிற்கு முரணாக அரசாங்கத்தை அமைத்து ஒரு திட்டத்தை நீக்கி எரிபொருளின் விலையை குறைத்தால் மக்களின் நன்மதிப்பை பெற்று விட முடியாது. நாட்டு மக்கள் தற்போது அரசியல் ரீதியில் தெளிவான நிலைப்பாட்டிலே உள்ளார்கள். எவரும் கீழ்த்தரமாக விலை போக மாட்டார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி

**பானை முறையிலான பொறித்தொகுதி திருத்தம் செய்வதற்கான மதிப்பீட்டறிக்கை பெற்றுக்கொள்ளல்**

எமது வரணி வடிசாலையில் பொருத்தப்பட்டிருக்கும் பானை முறையிலான பொறித்தொகுதியை 2019 ஆம் ஆண்டில் தொழிற்படுத்தக்கூடியவாறு திருத்தம் செய்து கொள்வதற்கான மதிப்பீட்டு அறிக்கையினை (துறைசார்ந்த தொழில்நுட்பவியலாளர் மூலம்) 05.01.2019 ஆம் திகதிக்கு முன்னர் அலுவலக நாட்களில் பொறித்தொகுதியை பார்வையிட்டு அறிக்கையினை தலைவர்-தென்மராட்சி ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின் கொத்தணி, பருத்தித்துறை வீதி, வரணி என்ற முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது நேரிலோ ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(C-4788) தலைவர்:- திரு.க.துரைசிங்கம்



7 ஆம் ஆண்டு நினைவலைகள்



வைத்திய கலாநிதி.
**மரிசலீன்பிள்ளை மரியதாசன்**
(JP) (பேரின்பம்)
சுகாதார வைத்திய அதிகாரி, யாழ்.மாநகர சபை
(M.O.H) (2001-2011)

எம்மைத் தாலாட்டி மகிழ்வூட்டி
எழுத்தறிவித்து அறிவூட்டி
இவ்வளவும் செய்துவிட்டு
ஏன் எம்மைப் பிரிந்து சென்றீர்
உம் அளவற்ற அன்பை
என்றென்றும் மறவோம்
(பேரன்-அருண்)

ஆவே மரியா
72, கோவில் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(6754)

கண்ணீருடன்
குடும்பத்தினர்


## பார்த்தீனியச் செடிகளை ஒழிக்க மக்களின் பங்களிப்பும் அவசியம்

### டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மட்டுமன்றி வடக்கு மாகாணத்தில் காணப்படும் பார்த்தீனிய செடிகளை அழிக்கும் நடவடிக்கையில், மக்கள் அனைவரும் மிகுந்த அக்கறையுடன் செயற்படுவதன் ஊடாகவே பார்த்தீனிய செடிகளை எமது பகுதிகளில் இருந்து முற்றாக அழிக்க முடியும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் கடந்த 17ஆம் திகதிமுதல் பார்த்தீனியம் ஒழிப்பு நடவடிக்கைகள் குறித்த பகுதிகளில் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் இப்பார்த்தீனியச் செடிகளை முற்றாக அழிக்கும் நடவடிக்கைகளில் எமது மக்கள் குறிப்பாக இளைஞர்,யுவதிகள் மிகுந்த விழிப்புணர்வுடன் செயற்படுவது காலத்திற்கு பொருத்தமான விடயம் என்றே நான் கருதுகிறேன்.

குறிப்பாக வலிகாமம் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் பயிர்செய் நிலங்களிலும் வெற்றுக் காணிகளிலும் அதிகளவில் காணப்படும் இப்பார்த்தீனியச் செடிகள் மனித வாழ்வியலுக்கும் கால்நடைகளுக்கும் மிகுந்த ஆபத்தை தோற்றுவித்து வருகிறது என்பதை துறை சார்ந்தோரால் சுட்டிக்காட்டப்பட்டு வருகிறது.

அதுமாத்திரமன்றி கால்நடைகள் இந்த பார்த்தீனியச் செடிகளை மேய்வதன் காரணமாக உயிரிழக்கும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுள்ள அதே வேளை மனிதர்களின் உடலில் இந்த பார்த்தீனியச் செடிகள் தொடுகையுறும் பட்சத்தில் தோல் நோய்கள் ஏற்படக்கூடியதான வாய்ப்புக்களும் இருப்பதாகவும் மருத்துவ துறைசார்ந்தோரால் சுட்டிக்காட்டப்பட்டு வருகிறது.

எனவே யாழ்.மாவட்டத்தில் குறித்த பகுதிகளில் காணப்படும் பார்த்தீனியச் செடிகளை அழித்தொழிக்கும் நடவடிக்கை பாராட்டுவதற்குரியது. இந்த நடவடிக்கையில் துறைசார்ந்த திணைக்களங்களை சார்ந்தோர் மட்டுமல்லாது இளைஞர்,யுவதிகளும் உரிய முறையில் ஆதரவையும் ஒத்துழைப்பையும் கொடுத்து ஒத்தாசையையும் வழங்குவதனூடாக பார்த்தீனியமற்ற பகுதிகளாக எமது பகுதிகளை மாற்ற முடியும் என்பதுடன் எதிர்காலங்களில் பார்த்தீனியச் செடிகளால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களில் இருந்து பாதுகாத்துக்கொள்ள முடியும் என்றும் டக்ளஸ் தேவானந்தா எம்.பி.மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# பாரதம்

# உயர் நீதிமன்ற தீர்ப்பை கட்சிகள் முழுமையாக கடைப்பிடிக்க வேண்டும்

## ராமதாஸ் வலியுறுத்து



(சென்னை)

தமிழ்நாட்டில் பனர் கலாசாரத்தை ஒழிக்க உயர் நீதிமன்றத் தீர்ப்பை அரசியல் கட்சிகளும், அதி காரிகளும் முழுமையாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்று ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்ததாவது.

தமிழ்நாடு முழுவதும் வீதிகளில் இடையூறு ஏற்படுத்தும் வகையில் யாரும் பதாகைகளை அமைக்கக் கூடாது என்று சென்னை உயர்நீதிமன்றம் ஆணையிட்டிருக்கிறது. வீதி அடைத்து வைக்கப்படும் பதாகைகள் விபத்துகளுக்கு வழி வகுப்பவையாகவும், வீதிகளில் செல்லும் அப்பாவி பொதுமக்களின் உயிர்களை குடிப்பவையாகவும் மாறியுள்ள நிலையில், உயர் நீதிமன்றத்தின் இத்தீர்ப்பு வரவேற்கத்தக்கது.

அரசியல் கட்சிகளின் நிகழ்ச்சிகளுக்காக வீதி அடைத்தும், நடைபாதைகளை மறித்தும் சட்ட விரோதமாக பதாகைகள் மற்றும் கட்-அவுட்டுகளை அமைப்பது தீராத நோயாக மாறி வருகிறது.

இதுதொடர்பாக சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபதிகள் தெரிவித்துள்ள கருத்துகள் நியாயமானவை. அதேநேரத்தில் போக்குவரத்துக்கும், பொதுமக்களுக்கும் இடையூறாக பதாகைகளை அமைக்கும் கலாசாரத்தை பாட்டாளி மக்கள் கட்சி வெறுக்கிறது. பாட்டாளி மக்கள் கட்சி நிகழ்ச்சிகளுக்காக பதாகைகள் மற்றும் கட்- அவுட்டுகள் சட்டவிரோதமாக வைக்கப்பட்டிருந்தால் அதை கண்டித்திருக்கி றேன்.

தூத்துக்குடியில் 2007 ஆம் ஆண்டு நவம்பர் 30 ஆம்திகதி நடைபெற்ற பாட்டாளி மக்கள் கட்சியின் மாவட்டப் பொதுக்குழுக் கூட்டத்திற்காக அதிக எண்ணிக்கையில் பதாகைகள் மற்றும் கட்-அவுட்டுகள் அமைக்கப்பட்டிருந்தன. அதற்கு நான் கண்டனம் தெரிவித்ததுடன், அவற்றை அகற்றினால் மட்டுமே கூட்டத்தில் கலந்து கொள்வேன் என்று கூறி விட்டேன்.

அதன்படி பதாகைகள் அகற்றப்பட்ட பிறகே பொதுக்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டேன். அதேபோல், புதுவையில் நடைபெற்ற நிகழ்ச்சிக்காக அமைக்கப்பட்டிருந்த பதாகைகளை அகற்ற ஆணையிட்டதுடன், அவற்றை அமைத்தவர்களுக்கு தண்டனை விதித்தேன். அண்மையில் கூட சென்னை புறநகரில் வரவேற்பு பதாகைகள் அமைக்கப்பட்டதை அறிந்த நான் அவற்றை அகற்ற ஆணையிட்டேன். இத்தகைய கலாசாரத்தை பா.ம.க. ஒருபோதும் அனுமதிக்காது.

தமிழ்நாட்டில் சட்டத்திற்கு எதிரான வகையில் பதாகைகளை அமைப்பது ஆளும் கட்சியும், ஆண்ட கட்சியும் தான். எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழா என்ற பெயரிலும், பொதுக்குழு என்ற பெயரிலும் ஆளும் கட்சியான அ.தி.மு.க. தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் செய்த அட்டகாசங்கள் அளவிட முடியாதவை.

அதனால் அனைத்து மாவட்டங்களிலும் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது் பொதுமக்கள் நடைபாதைகளில் நடந்து செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. பல இடங்களில் பதாகைகள் சரிந்து விழுந்ததால் பலர் காயமடைந்தனர். கோவையில் அலங்கார வளைவில் மோதி சரிந்து விழுந்த அமெரிக்க வாழ் தமிழ் இளைஞர் ரகு மீது வாகனம் மோதியதில் அவர் உயிரிழந்தது உள்ளிட்ட பல சோகங்கள் நிகழ்ந்தன. ஆனாலும், ஆளுங் கட்சியின் பதாகைக் கலாசாரம் தடையின்றி தொடர்ந்தது.

உயிருடன் இருப்பவர்களுக்கு பதாகைகள் அமைக்கத் தடை விதித்து கடந்த ஆண்டு ஒக்டோபரில் சென்னை உயர்நீதிமன்றம் ஆணையிட்டது. அத்தீர்ப்பை தமிழக ஆட்சியாளர்களும் மதிக்கவில்லை. அதிகாரிகளும் மதிக்கவில்லை. எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவுக்காக தொடர்ந்து பதாகைகள் அமைக்கப்பட்டன.

அதேபோல், சென்னை அண்ணா நகரில் நடைபாதைகளை பெயர்த்தது உட்பட எதிர்க்கட்சியின் நிகழ்ச்சிகளுக்காக செய்யப்பட்ட சீரழிவுகளும் ஏராளமானவை. ஆளும் கட்சி மற்றும் ஆண்ட கட்சிக்கு அஞ்சி இத்தகைய அத்துமீறல்களைத் தடுக்க உள்ளாட்சித் துறை அதிகாரிகளும் தயங்குகின்றனர்.

இத்தகைய சூழலில் சென்னை உயர்நீதிமன்றத்தின் இந்த ஆணை தான் பதாகைக் கலாசாரத்தை ஒழிக்க கிடைத்த ஆயுதமாகும். தமிழகம் மற்றும் புதுவையில் அமைக்கப்படுவது போன்று உலகின் வேறு எந்த நாடுகளிலும், இந்திய மாநிலங்களிலும் இத்தகைய பதாகைக் கலாசாரம் கடைபிடிக்கப்படுவதில்லை.

தமிழ்நாட்டிலும் அத்தகைய கலாசாரத்தை ஒழிக்க வேண்டும். அதற்காக உயர்நீதிமன்றத் தீர்ப்பை அரசியல் கட்சிகளும், அதிகாரிகளும் முழுமையாகக் கடைப்பிடிக்க வேண்டும். கடந்த காலங்களில் பா.ம.கவினர் எப்போதாவது பதாகை அமைத்திருந்தால் கூட அப்பழக்கத்தைக் கைவிட்டு, இனிவரும் காலங்களில் பதாகைகள் மற்றும் கட் அவுட்டுகள் அமைப்பதை கட்டாயம் தவிர்க்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (4)

# அமெரிக்கா வான்

# 11 பயங்கரவா



(மொகாடிஷு)

சோமாலியாவில் அமெரிக்க இராணுவம் நடத்திய வான் தாக்குதல்களில் அல் ஷபாப் இயக்கத்தைச் சேர்ந்த 11 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்.

சோமாலியாவில் அல்-ஷபாப் மற்றும் அல் கொய்தா பயங்கரவாதிகள் பெரிய அளவில் தாக்குதல்களை நடத்தி, அரசுப் படைகளுக்கு கடும் அச்சுறுத்தலாக விளங்கி வருகின்றனர். அவர்களை அழிக்கும் நடவடிக்கையில் சோமாலியா இராணுவத்திற்கு அமெரிக்க இராணுவம் உதவி புரிந்து வருகிறது. பயங்கரவாத முகாம்கள் மீது அமெரிக்க இராணுவம் வான்தாக்குதல்கள் நடத்தி வருகிறது. இதில், ஏராளமான பயங்கரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், தலைநகர் மொகாடிஷுவில் இருந்து 40 கிமீ தொலைவில் உள்ள பெலத் அமின் சவுத் பகுதியில் அல் ஷபாப் பதுங்கியிருந்த இடங்களை குறிவைத்து

# மொராக்கோவில் இளம் பெ

## ஐ.எஸ் ஆதர





(கோபன்ஹேகன்)

டென்மார்க் நோர்வேயை சேர்ந்த இரு இளம் பெண்கள் மொராக்கோவில் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள நால்வர் ஐ.எஸ்.ஆதரவாளர்கள் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஸ்கன்டினேவியன் நாடுகளை சேர்ந்த இரு இளம் பெண்கள் கத்திக் குத்து காயங்களுடன் மொராக்கோவின் தென்பகுதி நகரொன்றில் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

# சிரியாவைத் தொடர்ந்து ஆப்கானிஸ்தானில் படைகளை திரும்பப்பெற அமெரிக்கா திட்டம்

(வோஷிங்டன்)

சிரியாவைத் தொடர்ந்து ஆப்கானிஸ்தானில் இருந்தும் சுமார் 7000 படை வீரர்களை திரும்ப பெறுவதற்கு அமெரிக்கா முடிவு செய்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் ஆதிக்கத்தை ஒடுக்க 2001ஆம் ஆண்டில் அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகள் அங்கு முகாமிட்டன. இந்த படைகள் நடத்திய அதிரடி தாக்குதல்களில் தலிபான்கள் பலர் கொல்லப்பட்டனர். 2014ஆம் ஆண்டு நேட்டோ படைகள் அங்கிருந்து வாபஸ் பெறப்பட்டன.

எனினும் ஒரு சில பகுதிகளில் தலிபான்களின் ஆதிக்கம் இருந்தது. அவர்கள் அவ்வப்போது தாக்குதல்களை நடத்தி வந்தனர். எனவே, ஆப்கானிஸ்தானில் அமைதி, ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் அமெரிக்க படைகள் தொடர்ந்து அங்கு முகாமிட்டு தலிபான்கள் மற்றும் ஐ.எஸ்.பயங்கர வாத அமைப்பினர் மீது தாக்குதல் நடத்தி வந்தனர்.

தற்போது அமெரிக்க ராணுவ வீரர்களில் 14000 பேர் ஆப்கானிஸ்தானில் தங்கியிருந்து, அந்நாட்டு வீரர்களுக்கு போர் பயிற்சியும், ஆலோசனைகளும் தாக்குதல்களுக்கு உதவியும் புரிந்து வருகின்றனர்.

இந்நிலையில், தற்போதைய கள நிலவரத்தை கருத்தில் கொண்டு ஆப்கானிஸ்தானில் உள்ள அமெரிக்க வீரர்களில் பாதி பேரை திரும்ப பெறுவதற்கு ட்ரம்ப் நிர்வாகம் முடிவு செய்துள்ளது. இத்தகவலை பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த இரண்டு அதிகாரிகள் தெரிவித்ததாக அமெரிக்க ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது.

சிரியாவில் இருந்து அமெரிக்க படைகளை திரும்ப பெறுவது தொடர்பாக ட்ரம்ப் முடிவெடுத்தபோது ஆப்கானிஸ்தானில் உள்ள படைகளை திரும்ப பெறுவது குறித்தும் முடிவு எடுத்ததாக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். அநேகமாக கோடைக் காலத்தின்போது படைகள் திரும்ப பெறப்படலாம், ஆனால் இதுபற்றி இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என மற்றொரு அதிகாரி தெரிவித்துள்ளார். (4-7)

# வடகொரியாவிற்கு காய்ச்சல் தொற்று மருந்துகளை வழங்குவதற்கு அமெரிக்கா- தென்கொரியா இணக்கம்



(வோஷிங்டன்)

அமெரிக்கா மற்றும் தென்கொரிய நாடுகள் வடகொரியாவிற்கு காய்ச்சல் தொற்று எதிர்ப்பு மருந்துகளை உதவியடிப்படையில் விநியோகிப்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளன. சியோலின் அணுஆயுத ஒழிப்பு தொடர்பான தூதுவர் நேற்று வெள்ளிக்கிழமை இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்.

பியாங்யாங்குடனான அணுசக்தி பேச்சுவார்த்தைகளுக்கு இடையே மனிதாபிமான உதவிகளை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று வோஷிங்டன் நிர்வாகம் அறிவித்த பின்னர், தென் கொரியாவின் ராஜதந்திரி லீ டூ-ஹூன் இந்த தகவலை வெளி யிட்டுள்ளார்.

வடகொரியாவிற்கு டெமிப்ஃபுலூ எனப்படும் காய்ச்சல் தொற்று மருந்துகளை விநியோகிக்கும் தென்கொரியாவின் திட்டத்திற்கு அமெரிக்கா இணக்கம் தெரிவித்துள்ளதாக, அமெரிக்காவின் இராஜதந்திரி ஸ்டீபன் பிய்கன்னுடன் சியோலில் இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் தெரிவித்துள்ளனர்.

வடகொரியாவுக்கான விசேட பிரதிநிதியான பீ்கன் தெரிவிக்கையில், இந்த நடவடிக்கையானது வோஷிங்டன் மற்றும் பியாங்யாங்கிற்கும் இடையே ஆரம்ப அணுசக்தி இராஜதந்திர நடவடிக்கைக்கு உந்து சக்தியாக இருக்கும் என்று தெரிவித்தார்.

இது அணுசக்தி விவகாரம் தொடர்பாக தடையற்ற பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்கும் உதவும் என்றும் தெரிவித்தார். (4)

# வெளிநாடு

## ...ான் தாக்குதல் ...வாதிகள் பலி!



அமெரிக்க இராணுவம் அண்மையில் அடுத்தடுத்து இரண்டு முறை விமான தாக்குதல்களை நடத்தியது. விமானங்கள் மூலம் குண்டுகளை வீசி தாக்கியதில், 11 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது. பொதுமக்கள்தரப்பில் காயமோ உயிரிழப்போ ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலைநகர் மொகாடிஷு மீது தாக்குதல் நடத்துவதற்காக பெலத் அமின் சவுத் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளை அல் ஷபாப் பயங்கரவாதிகள் பயன்படுத்தி வந்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

சோமாலியா மற்றும் ஆபிரிக்க ஒன்றிய படைகளுடன் அமெரிக்க படைகளும் இணைந்து கடந்த சில மாதங்களாக பயங்கரவாத அமைப்புகளுக்கு எதிராக தரைவழி தாக்குதல்கள் மற்றும் வான் தாக்குதல்களை தீவிரப்படுத்தி உள்ளது குறிப்பிடத்தக்கது. (4)

## மீதேன் வாயு வெடிப்பு!
## 5 பேர் பலி; 8 பேர் மாயம்

(வார்ஷா)

செக் குடியரசில் சி.எஸ்.எம்.கடின நிலக்கரி சுரங்கத்தில் ஏற்பட்ட மீதேன் வாயு வெடிப்புச் சம்பவத்தில் ஐந்து பேர் உயிரிழந்த நிலையில், எட்டுப்பேரை காண வில்லை என்று சுரங்கப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் கிழக்குப் பகுதியில் உள்ள பாரிய நிலக்கரிச் சுரங்கத்திலேயே நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளது. இது தவிர, மேலும் 10 பேர் சம்பவத்தில் காயமடைந்துள்ளதாக சுரங்க அக ழ்வு நிறுவனத்தின் பேச்சாளர் செக் தொலைக்காட்சி ஒன்றுக்கு தெரிவித்தார்.

நிலத்தடி வேலைத் தளத்தில் இந்த அனர்த்தம் இடம்பெற்ற நிலையில் போதிய வெளிச்ச மின்மை காரணமாக மீட்புப்பணிகளை மேற்கொள்வதில் சற்றுக் கடின நிலை எதிர்நோக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

போலந்து எல்லைப்பகுதியில் கர்வினா பிராந்தியத்தில் உள்ள அரசாங்கத்தால் இயக்கப்படும் நிலக்கரி சுரங்கத்திலேயே இந்த அனர்த்தம் நேர்ந்ததாகவும் நிலத்திற்கடியில் சுமார் 800 மீற்றர் ஆழத்தில் நேற்று மாலை 5 மணியளவில் வெடிப்புச் சப்தம் கேட்டதாகவும் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலும் போலந்து நாட்டவர்கள் எனவும் மீட்புப் பணிகள் தொடர்வதாகவும் அவர் தெரிவித்தார். (4)

## கையடக்க தொலைபேசி பயன்படுத்தாத உலக வல்லரசு தலைவர் விளாடிமிர் புடின்



(மொஸ்கோ)

சர்வதேச ரீதியாக கையடக்கத் தொலைபேசிகளை பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை நாளாந்தம் பெருகிக்கொண்டே செல்கின்றது.

அடுத்த வருடம் உலகளவில் கையடக்க தொலைபேசிகளை உபயோகிப்பாளர்களின் எண்ணிக்கை 468 கோடியை தொட்டு விடும் என்றும் அந்த தொகை 2020 ஆம் ஆண்டளவில் 478 கோடியையும் கடந்து விடும் என்று புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன

எனினும், உலக வல்லரசு நாடுகளில் ஒன்றான ரஷ்யாவின் ஜனாதிபதி விளாடிமிர் புடின் கையடக்க தொலைபேசியை பயன்படுத்துவதில்லை என்ற அதிர்ச்சி தகவலை கிரெம்ளின் மாளிகை செய்தி தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் வெளியிட்டுள்ளார்.

அவ்வாறாயின் ஜனாதிபதி புடின் தகவல்களை எவ்வாறு பெறுகிறார் என்று 'ரஷ்யா 24' தொலைக்காட்சியின் செய்தியாளர் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த அவர், "ஒரே ஒரு தகவல் ஆதாரத்தையோ, ஊடக செய்தியையோ மட்டுமே நம்பி இருக்கக்கூடாது என்பது ஜனாதிபதி புடினுக்கு வாழ்க்கை கற்றுக்கொடுத்த பாடம்" என்று தெரிவித்தார்.

அத்துடன் "நாளிதழ் செய்தி சுருக்கங்கள், தொலைக்காட்சி செய்திகளின் சுருக்கங்கள் உள்ளிட்ட பல்வேறு வழிகளில் அவர் தகவல்களை பெற்றுக்கொள்கிறார்.

கணனியில் அவர் தனிப்பட்ட முறையில் இணையத் தளங்களை பார்த்துக் கொள்கிறார். எனக்கு தெரிந்தவரையில் அவரிடம் கையடக்க தொலைபேசி கிடையாது" என்று செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார். (4)

## ...ம் பெண்கள் படுகொலை
## ...ஆதரவாளர்கள் கைது



இந்த கொலை தொடர்பில் நான்கு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என தெரிவித்துள்ள அதிகாரிகள் இவர்கள் அனைவரும் வீடியோவில் பயங்கரவாதத்திற்கு ஆதரவு தெரிவித்தவர்கள். கொலைக்கு முன் னர் குறிப்பிட்ட காணொலி தயாரிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்கள் குறிப்பிட்ட வீடியோவில் தாக்குதல்களை மேற்கொள்ளப் போவதாக தெரிவித்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மொராக்கோவின் இமில் என்ற பகுதியில் உள்ள மலைப்பகுதியொன்றில் கூடாரம் அடித்து தங்கியிருந்த இரு பெண்களும் சடலங்களாக மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சந்தேகநபர்களின் புகைப்படங்களையும் அதிகாரிகள் வெளியிட்டுள்ளனர். (4)

## அமெரிக்காவின் இராணுவ அமைச்சர் ஜிம் மேட்டிஸ் திடீர் இராஜினாமா

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் ஜனாதிபதி ட்ரம்புடன் ஏற்பட்ட கொள்கை முரண்பாடுகள் காரணமாக இராணுவ அமைச்சர் ஜிம் மேட்டிஸ் இராஜினாமா செய்துள்ளார்.



அமெரிக்காவில் ஜனாதிபதி ட்ரம்ப் பதவியேற்ற பிறகு அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டார். வெள்ளை மாளிகையில் முக்கிய பதவி வகித்து வந்த அதிகாரிகள் பணிநீக்கம் செய்யப்பட்டனர். ட்ரம்புடன் ஏற்பட்ட கருத்து வேறு பாடுகள் காரணமாக பல அதிகாரிகள் ராஜினாமா செய்தனர்.

இந்நிலையில், இராணுவ அமைச்சர் ஜிம் மேட்டிஸ் (வயது 68) தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார். அவர் ஜனாதிபதி ட்ரம்புக்கு இராஜினாமா கடிதம் அனுப்பி உள்ளார். அதில், பதவி விலக இதுவே சரியான தருணம் என்றும், ஜனாதிபதி ட்ரம்ப் தகுதியான ஒரு தலைவரை இராணுவ அமைச்சராக நியமிப்பதற்கு ஏதுவாக பதவி விலகியிருப்பதாகவும் கூறியிருக்கிறார்.

தனது பதவிக்காலம் அடுத்த ஆண்டு பெப்ரவரி 28 ஆம் திகதியுடன் முடிவடைய உள்ளதாகவும், இந்த இடைப்பட்ட காலம் புதிய அமைச்சரைத் தேர்வு செய்வதற்கு போது மானதாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சிரியாவில் இருந்து அமெரிக்க படைகள் வாபஸ் பெறப்படுவதாக ட்ரம்ப் அறிவித்த மறுநாளே, இராணுவ அமைச்சர் பதவியில் இருந்து ஜிம் மேட்டிஸ் பதவி விலகியிருக்கிறார். எனவே, ட்ரம்புடன் ஏற்பட்ட கொள்கை முரண்பாடுகள் காரணமாக அவர் பதவி விலகியிருக்கலாம் என கூறப்படுகிறது.

ஜிம் மேட்டிஸ் இராஜினாமா கடிதம் அனுப்பியதையடுத்து, பெப்ரவரி மாதம் அவர் ஓய்வு பெற உள்ளதாக ஜனாதிபதி ட்ரம்ப் அறிவிப்பு வெளியிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், கடந்த இரண்டு ஆண்டுகளாக பாதுகாப்புத் துறையில் ஜிம் சிறப்பாக பணியாற்றியதாகவும், அவரது பதவிக் காலத்தில் மிகப்பெரிய முன்னேற்றம் ஏற்பட்டதாகவும் பாராட்டியுள்ளார். (4-7)

## அமெரிக்காவுடனான வர்த்தக உறவை புத்தாண்டில் புதுப்பிக்க சீனா எதிர்பார்ப்பு

(பீஜிங்)

புத்தாண்டில் அமெரிக்காவு டன் பலசுற்று வர்த்தக பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள தீர்மானித்துள்ளதாக சீனா அறிவித்துள்ளது.

அதன்படி, ஜனவரி மாதத்தில் அமெரிக்காவுடன் பேச்சு வார்த்தைகளை துரிதப்படுத்த எதிர்பார்த்திருப்பதாக சீன் வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது

அமைச்சின் இந்த அறிவிப்பை வர்த்தக அமைச்சின் பேச்சாளர் கோ பெங் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அறிவித்தார்.

பிரதி அமைச்சர்கள் மட்ட பேச்சுவார்த்தைக் கான ஏற்பாடுகள் குறித்து இருதரப்பும் தமது நிலைப் பாட்டை பரிமாறிக் கொண்டுள்ள நிலையிலேயே சீனா இவ்வாறு தெரிவித்துள் ளது.



அமெரிக்காவுடன் வர்த்தக பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், வரிக் கட்டண அதிகரிப்பை அமெரிக்கா தாமதப்படுத்தியுள்ளமையை வரவேற்பதாகவும் அமைச்சின் பேச்சாளர் குறிப்பிட்டார்.

இதேவேளை, இருதரப்பிற்கும் இடையிலான ஒருமித்த கருத்துக்களின் அடிப்படையில் அமெரிக்க கார்களுக்கான வரியை சீனா குறைக்கும் எனவும் தெரிவித்துள்ளார். (4)

# அதிநவீன போர்க்கப்பல்களுடன் ஆயிரம் ரஷ்யக் கடற்படையினர் இலங்கைக்கு நல்லெண்ண பயணம்



(கொழும்பு)

சுமார் ஆயிரம் ரஷ்ய கடற்படையினருடன் ரஷ்ய கடற்படையின் அதிநவீன போர்க்கப்பல்களைக் கொண்ட அணியொன்று நேற்று முன்தினம் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

நான்கு நாட்கள் நல்லெண்ணப் பயணமாகவே ரஷ்ய கடற்படையின் வர்யாக், அட்மிரல் பன்ரெலேவ், பொறிஸ் புரோமா ஆகிய கப்பல்கள் இலங்கை வந்துள்ளன.

இவற்றில், 187 மீற்றர் நீளமான வர்யாக் என்ற அதி நவீன ஏவுகணைப் போர்க்கப்பலில் 529 கடற்படையினரும் 162.8 மீற்றர் நீளம் கொண்ட அட்மிரல் பன்ரெலேவ் என்ற போர்க்கப்பலில், 388 கடற்படையினரும் 161 மீற்றர் நீளமான பொறிஜஸ் புரோமா என்ற விநியோகக் கப்பலில் 75 கடற்படையினரும் பணியாற்றுகின்றனர்.

இந்த ரஷ்ய கடற்படைக் கப்பல்கள் அணிக்கு, றியர் அட்மிரல்ட எடுவேட் மிகெய்லோவ் தலைமையேற்று வந்துள்ளார்.

நாளை மறுதினம் 24 ஆம் திகதி இந்தக் கப்பல்கள் கொழும்பு துறைமுகத்தில் இருந்து புறப்பட்டுச் செல்லவுள்ளன. (இ-4)

# 300 மில்.டொலர் திட்டத்தை ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸில் நடைமுறைப்படுத்தவில்லை!

(கொழும்பு)

ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸில் முகாமைத்துவப் பணிக்கு அமர்த்தியிருந்த முன்னாள் சிரேஷ்ட நிதி அலுவலர் எஸ்.ஏ.சந்திரசேகர 2008 மற்றும் 2010 இல் பரிந்துரைத்த, இரண்டு வர்த்தகத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை.


ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பாக விசாரணை செய்யும்ஆணைக்குழுவின் முன் இந்தத் தகவல் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ளது.

சந்திரசேகர, எயார்லைன்ஸின் முன்னாள் தலைவரும் சிராந்தி ராஜபக்ஷவின் சகோதரருமான நிசாந்த விக்கிரமசிங்கவினால் நியமிக்கப்பட்டிருந்தார்.

இவர் பரிந்துரைத்திருந்த திட்டத்தின் படி 300 மில்லியன் டொலர்கள் தொடர்பான வர்த்தகமே நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இதேவேளை, இந்தத் திட்டத்தின்படி பங்குளை விற்பனை செய்து, அதன் மூலம் கிடைக்கும் இலாபத்தைக்கொண்டு கடன்களைத் தவிர்ப்பது என்ற யோசனை முன்வைக்கப்பட்டிருந்ததாக விசார ணைக்குழுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

# சிவனொளிபாத யாத்திரை ஆரம்பம்



(இரத்தினபுரி)

நேற்று அதிகாலை தொடக்கம் பெல்மதுல கல்பொத் தாவெல ஸ்ரீபாத ரஜ மஹா விகாரையில் இருந்து புத்த பெருமானின் புனித பொருட்களுடன் கூடியதாக சமன் தெய்வத்தின் உருவச்சிலை ஊர்வலமாக சிவனொளிபாத மலையை நோக்கி எடுத்துச் செல்லப்படவுள்ளதாக பெங்கமுவ தம்மதின்ன தேரர் தெரிவித்தார்.

இரத்தினபுரி - அவிசாவளை - ஹற்றன் மார்க்கத்தின் ஊடாகவும் பெல்மதுல - பலாங்கொட மார்க்கத்தின் ஊடாகவும் இரத்தினபுரி - பலாபத்தல ரஜமாவத்தை ஊடாகவும் மூன்று பெரஹெராக்கள் இடம்பெறுகின்றன.

சிவனொளிபாத மலை செல்லும் பக்தர்களுக்கு போதிய பாதுகாப்பு வழங்கப்படும். இம்முறையும் பிளாஸ்ரிக், பொலித்தீன் பொருட்களைக் கொண்டு செல்ல வேண்டாம் எனப் பக்தர்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (இ-7)

# துப்பாக்கிப் பிரயோகம்; ஒருவர் கைது

(கல்கிஸை)

கல்கிஸை - இரத்மலானை வடக்குப் பகுதியிலுள்ள வீடொன்றின் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது.

கல்கிஸை - இரத்மலானை பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை 2.15 இற்கும் 2.30 இற்கும் இடைப்பட்ட காலத்தில் குறித்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை நேற்று முன்தினம் மாலை துப்பாக்கி மற்றும் தோட்டாக்களுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கல்கிஸை பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை கல்கிஸை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த சம்பவத்தில் நபர்கள் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

அதே நேரத்தில் குறித்த வீட்டின் கதவுகள் மாத்திரம் சேத மடைந்துள்ளதாகப் பொலி ஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## படிப்பும் – பட்டறிவும்

இந்த உலகத்தில் படித்துத் தெரிந்துகொள்வதும் கொஞ்சம், பட்டுத் தெரிந்து கொள்வதும் கொஞ்சம். தெரிந்துகொள்ளாமல் இருப்பது ஏராளம். பாடம் படித்தேன் என்று சொல்வதற்கும் பாடம் கற்றுக்கொண்டேன் என்று சொல்வதற்கும் வித்தியாசம் இருக்கிறது அல்லவா!

“அந்த ஆள் படிப்பதற்கு ஒரு புத்தகம் கொடுத்தேன். ஆனால் நான் பாடம் கற்றுக்கொண்டேன்” என்றார் ஒருத்தர். எப்படி என்று கேட்டால்... ‘‘கொடுத்த புத்தகம் திரும்பி வரவில்லை... அதனாலே இனிமேல் யாரிடமும் புத்தகத்தைக் கடன் கொடுக்கக்கூடாது என்று பாடம் கற்றுக் கொண்டேன்!’’ என்றார்.

அனுபவம் என்பது படிப்பைவிட அழுத்தமாக மனதில் பதியக்கூடிய ஒன்று! ஆனாலும் சில விடயங்களைப் படிப்பதோடு நிறுத்திக்கொள்ள வேண்டும்.

‘‘நெருப்புச் சுடும்’’ என்று ஒரு புத்தகத்தில் படித்துக்கொண்டு அனுபவித்துப் பார்க்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டு அதைப் போய் தொட்டுப் பார்த்துக்கொண்டு இருக்கக் கூடாது! சில விடயத்தைப் படிப்போடு நிறுத்திக்கொண்டால் பிரயோசனப்படாது!

நீச்சல் கலையைப் பற்றித் தெரிந்துகொள்கின்றேன் என்று சொல்லிக் கொண்டு அது சம்பந்தமாக ஒரு புத்தகத்தைப் படித்து முடித்துவிட்டு உடனே நீச்சல் போட்டியில் கலந்துகொள்வதற்கு நான் தயார் என்று சவால் விட்டால் எப்படி?

ஒருத்தருக்குச் சமைக்கத் தெரிந்துகொண்டு சம்சாரத்திடம் சவால்விட வேண்டும் என்று ஒரு ஆசை. உடனே ஒரு சமையல் புத்தகத்தை வாங்கினார். விழுந்து விழுந்து படித்தார். சம்சாரம் கோயிலுக்குப் போயிருக்கும் நேரம் பார்த்து படித்ததை பரிசோதனை செய்ய ஆரம்பித்தார்!

புத்தகத்தில் சொல்லியிருக்கும் படி எல்லாம் ஒவ்வொன்றாக எடுத்துப் போட்டார். கடைசியில் எதையோ ஒன்றைத் தயார் செய்து முடித்தார். சாப்பிடுவதற்கு முயற்சி செய்தார். வாயில் வைக்க முடியவில்லை!

என்ன செய்வது என்று முழித்துக்கொண்டே உட்கார்ந்தார்! வெளியில் போயிருந்த சம்சாரம் திரும்பி வந்தார்! நடந்ததைப் புரிந்து கொண்டார்! “ஏங்க! சமைத்ததைச் சாப்பிட வேண்டியதுதானே... சும்மா அதை ஏன் பார்த்துக் கொண்டே உட்கார்ந்து இருக்கிறீர்கள்?’’ என்று கேட்டார்!

இவர் எப்படிச் சமாளித்தார் தெரியுமா? புத்தகத்தில் சமைத்திருப்பான் என்று தான் போட்டிருக்குச் சாப்பிட்டு இருப்பான் என்று போடவில்லை! அதனால் வெறுமனே சமைத்து அதைப் பார்த்துக்கொண்டே உட்பார்ந்து இருக்கிறேன்!

இதையெல்லாம் ஏன் செல்ல வருகின்றேன் என்றால்... படிப்பு முக்கியம்தான். இருந்தாலும் அனுபவம் அதைவிட முக்கியம்! இந்தக் காலத்தில் படிப்பாளிகள் பலபேர் அனுபவசாலிகளுக்குக் கொடுக்க வேண்டிய மரியாதையைக் கொடுப்பது இல்லை!

ஒரு ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடிக்கொண்டிருக்கிறது... ஓடத்தில் ஏறி அக்கரைக்குப் போவதற்காக ஒருத்தர் காத்துக்கொண்டிருந்தார். அவர் ரொம்பப் படித்தவர்... அது மட்டுமில்லை... அதிகமாகப் படித்திருக்கிறோம் என்னும் நினைப்பும் உள்ளவர். ஓடம் வந்து சேர்ந்தது! ஏறி உட்கார்ந்தார்.

ஓடக்காரன் தள்ள ஆரம்பித்தான்... தண்ணியில் மிதந்து போய்க் கொண்டிருக்கிறது ஓடம்! இவர் மெதுவாக அந்த ஓடக்காரனிடம் பேச்சுக் கொடுத்தார்! ‘‘என்னப்பா தம்பி... நீ இதிகாசம் எல்லாம் படித்திருக் கிறாயா?’’ என்று கேட்டார்! இவர் படித்திருக்கிறாராம்! அதனால் கேட்கிறார்! இல்லைங்க! என்றான் ஓடக்காரன்.


“ஐயையோ பாவம்! உன் வாழ்க்கையில் 1/4 பகுதியை நீ வீணாக் கிவிட்டாயே!’’ என்றார்... ஓடக்காரன் கவலைப்படாமல் ஓடத்தைத் தள்ளுவதிலேயே கவனமாக இருந்தான்! இவர் மறுபடியும் ஒரு கேள்வி கேட்டார்.

“என்ன தம்பி... நீ புராணங்களாவது படித்திருக்கிறாயா” என்றார்... “அது எல்லாம் இல்லைங்க!” என்றான் அவன். “ஐயையோ பாவம்! உன் வாழ்க்கை யில் 1/2 பகுதியை நீ வீணாக்கிவிட்டாயே!’’ என்றார்... கொஞ்சநேரம் ஆகியது! இவர் மறுபடியும் கேட்டார்!

“ஏனப்பா... நீ இலக்கணம், இலக்கியம் எதுவும் படிக்கவில்லையா?” என்று கேட்டார்! “படிக்கவில்லை” என்றான் அவன்! “ஐயையோ பாவம்! உன் வாழ்க்கையில் 3/4 பகுதியை வீணாக்கிவிட்டாயே!” என்றார்! ஓடம் அப்போது நடு ஆற்றில் போய்க்கொண்டிருக்கிறது... திடீர் என்று ஒரு சுழல்... ஓடம் அதில் சிக்கி மூழ்க ஆரம்பித்தது! இப்போது அந்த ஓடக்காரன் இவரைப் பார்த்துக் கேட்டான்.

‘‘ஏங்க பெரியவரே! உங்களுக்கு நீச்சல் தெரியுமா?’’ என்று ‘‘ஐயையோ... தெரியாதே!’’ என்றார். ‘‘ஐயையோ பாவம்! உங்கள் வாழ்க்கை முழுவதையும் நீங்கள் வீணாக்கி விட்டீர்களே!’’ என்று சொல்லிக்கொண்டே ஓடக்காரன் ஆற்றில் குதித்தான்...

கிடுகிடு என்று நீந்திப் போய் கரையேறி விட்டான்! இந்த இடத்தில் படித்த படிப்பு கரைசேர உதவவில்லையே! அனுபவம் தான் உதவியிருக்கிறது! அதனால்... “படிப்பு, அனுபவத்துக்கு” மரியாதை கொடுக்க வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள்.



# பாலிதீவு- பயணத்தின் அனுபவம்

04

சோ.நிக்கஜ்
அரியாலை.



உங்களிடம் சர்வதேச ஓட்டுநர் உரிமம் இருக்கும் பட்சத்தில் அங்கு ஒரு மோட்டார் வண்டியை பெற்றுக்கொண்டு தாராளமாக ஊர் சுற்றலாம். வாடகையாக 50,000 IDR இலிருந்து 75,000 IDR வரை வசூலிக்கிறார்கள். பெற்றோல் விலை லீற்றர் 7,500 IDR லிருந்து ரகத்திற்கு ஏற்றவாறு 10,800 IDR வரை உண்டு. ஓட்டுநர் உரிமம் இல்லாது அகப்பட்டால் பொலிஸாருக்கு 5 இலிருந்து 10 இலட்சம் வரை தண்டம். இந்தத் துன்பம் வேண்டாம் என்றால் நாளொன்றிற்கு 10 மணி நேரம் போகும் இடத்தை பொறுத்து 450,000 IDR இலிருந்து 600,000 IDR இற்கு அமர்த்திக்கொள்ளலாம்.

அப்படி கிடைத்த அன்பர் ஒருவர் தான் Bagi Vikal. நேரம் மூன்று மணியைநெருங்கிக்கொண்டிருக்கிறது. பகி விகால் எங்களுக்கு படகு சவாரியுடன் மேலும் ஐந்தாறு இடங்களுக்குக் கூட்டிச் செல்வதாகக் கூறியிருந்தார்.

எங்களை முதலாவதாக அழைத்துச்சென்ற இடம் Ubud, Tegallalang இல் இருக்கும் Alas Harum Agro Tourism எனும் கோப்பித்தோட்டமாகும். இங்கு உலகப் பிரபல்யம் மிக்க லுவாக் கோப்பியை உற்பத்தி செய்கிறார்கள்.

அதோடு Bali swing எனப்படும் மிக நீளமான அலைவைக் கொண்ட ஊஞ்சல் மற்றும் சில பொழுது போக்கு அம்சங்களுடன் இயற்கையுடன் இணைந்த பூங்காவைப் போல் இருக்கும் இந்த இடம். இதற்குள் நுழைவதற்கு அனுமதிக்கட்டணம் ஏதுமில்லை.

லுவாக் கோப்பியை (Kopi luwak/ Luwak coffee) அறிமுகப்படுத்தி விடுகிறேன். உலகின் மிக விலை உயர்ந்த கோப்பியாக இதனைச்சொல்கிறார்கள். மிக தரம் மிக்க ஒரு கோப்பை லுவாக் கோப்பி 50 USD வரை விலை போகிறது. கோப்பிக்கு இந்த விலையா? என ஆச்சரியப் படுவதைவிட அதை தயாரிக்கும் முறை தான் விசித்திரமானது.

இந்தோனேசிய மொழியில் லுவாக் என்பது புனுகுப் பூனையை /ஆசிய மரநாயினை குறிக்கிறது இதற்கு பிடித்தமான உணவு கோப்பி பழங்கள். இது உண்ணும் கோப்பிப்பழங்களின் விதைகள் மாத்திரம் செரிமானம் அடையாமல் அதன் கழிவுகளோடு சேர்ந்து வெளியேறும். இவ்வாறு வெளியேறிய விதைகளை பிரித்தெடுத்து வெயிலில் உலர வைத்து வறுத்து கோப்பித் தூளாகத் தயாரிக்கிறார்கள். இப்படி தாயிரிக்கப்படும் கோப்பியானது சிறந்த வாசம் மிக்கதாகக் காணப்படுவதாக சொல்கிறார்கள். இதற்குக் காரணம் லுவாக்கின் வயிற்றில் செரிமானத்திற்காக சுரக்கும் அமிலங்கள்தான் காரணமாம். கொசுறாக இதையும் தெரிந்து வைத்திருங்கள்.


இக்கோப்பி இந்தோனேசியா, ஜாவா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் அதிகளவு உற்பத்தி செய்யப் படுகின்றன. அது போக கோப்பி தயாரிப்பிற்காக லுவாக்குளை கூண்டில் அடைத்து துன்புறுத்துகிறார்கள் என விலங்கு நல ஆர்வலர்களிடமிருந்து எதிர்ப்பும் கிளம்பியிருக்கிறது.

நாங்கள் உள்ளே நுழைந்த போதே இலவசக் கோப்பி இருக்கிறது. அதை பெற்றுக் கொள்ளலாம். வேண்டுமானால் மேலதிக பணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம் என்றார்கள். சும்மா தரும் உலகத்தர கோப்பியை ஏன் விட வேண்டும் என போய் ஐந்து கோப்பி என்றால் முதலில் போய் உட்காருங்கள் என்றார்கள. ஐந்து நிமிடம் கழித்து வந்தது ஐந்து கோப்பி அல்ல பதின்னான்கு. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு சுவை. அதற்கு விளக்கப் படம் வேறு தந்து ஒன்றிலிருந்து பதின்னான்கு வரை எந்த முறையில் வருகிறது என விளக்கம் தந்தார்கள்.

துரதிர்ஷ்டவசமாக அதில் லுவாக் கோப்பி அடங்கியிருக்கவில்லை. எங்களது ஆத்மாவில் ஒன்று லுவாக் கோப்பி லுவாக் கோப்பி என அடம் பிடித்ததால் இரண்டு லுவாக் கோப்பிகளை வாங்கி பகிர்ந்து குடித்தோம். ஒரு கோப்பிக்கு நாங்கள் செலுத்திய விலை வெறும் 50,000 IDR மட்டுமே.



சிற்பங்களைச் செதுக்கும் சிற்பிகள்




தோட்டத்தில் இருக்கும் இன்னொரு விடயம் Bali swing எனும் மிகப்பெரும் அலைவைக் கொண்ட ஊஞ்சலாகும். காலுக்கு கீழே முன்னால் பெரிய பள்ளமாக இருக்கும். விரும்பினால் ஆடலாம். ஒரு நபருக்கு பதினைந்து அலைவுகள் தான் கிடைக்கும். 200,000 IDR வரை வசூலிக்கிறார்கள்.

அடுத்ததாக நாங்கள் சென்ற இடம் Yana art Gallery எனும் சிற்ப வேலைக்கூடம். வெளியே சிற்பம் செதுக்கிக்கொண்டிருந்தார்கள். கூடத்தின் உள்ளே அதி அற்புதமான சிற்பங்கள். புகைப்படம் எடுக்க அனுமதி கிடையாது. எல்லா சிற்பங்களும் விற்பனைக்காக இருந்தாலும் நாங்கள் வாங்கக் கூடிய விலையில் இருக்கவில்லை.

மூன்றாவதாக சென்ற இடம் Butterfly Park. இதற்கு நுழைவுக் கட்டணமாக நபருக்கு 100,000 IDR வசூலிக்கிறார்கள். Bagi vikal (சாரதி) க்கு நாங்கள் செலுத்திய கட்டணத்தில் இவற்றுக்கான நுழைவுக்கட்டணமும் சேர்த்து என்று தான் முதலில் நினைத்தோம். பின்னர் தான் அவ்வாறு இல்லை என்று தெரிந்தது. Butterfly Park அதி முக்கியம் வாய்ந்த சுற்றுலாத்தெரிவாக இல்லாத காரணத்தினால் அதை தவிர்த்து விட்டோம்.

நாம் அடுத்து போன இடம் Batuan Temple. Batuan Temple கி.பி. 1020 ஆம் ஆண்டைச் சேர்ந்தது. கிட்டத்தட்ட ஆயிரம் ஆண்டுகள்பழைமையானது. நுழைவுக்கட்டணம் ஏதும் கிடையாது. ஆனால் சாரம் கட்டியிருந்தால் மட்டுமே உள்ளே செல்ல அனுமதி கிடைக்கும். சாரம் தேடி அலைய வேண்டிய அவசியம் இல்லை. கோயிலுக்கு வெளியேயே 10,000 IDR இற்கு வாடகைக்கு தருவார்கள்.

(பயணம் தொடரும்)

# ரூ.69 இலட்சம் பெறுமதியான தங்க நகைகளை கடத்தியவர் விமான நிலையத்தில் கைது

(கொழும்பு)

சிங்கப்பூரிலிருந்து இலங்கைக்கு தங்க நகைகளை கடத்த முற்பட்ட வெல்லம்பிட்டியவைச் சேர்ந்த நபரொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் சிங்கப்பூரிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையம் நோக்கி பயணித்த NO UL 307 விமான சேவையூடாக நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இதனையடுத்து சந்தேகத்திற்கிடமான முறையில் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து வெளியேற முயற்சித்த மேற்படி நபரிடம் சுங்க அதிகாரிகள் சோதனையை மேற்கொண்டுள்ளனர்.

இந்த நிலையிலேயே சந்தேக நபரின் பயணப் பொதியிலிருந்து 1150 கிராம் நிறையுடைய தங்க நகைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு சுங்க அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்ட தங்க நகைகளின் பெறுமதி 69 இலட்சம் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

சந்தேக நபர் 60 வயதுடைய வெல்லம்பிட்டிய பகுதியைச் சேர்தவர் என விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

மேலும், சந்தேக நபரிடம் சுங்க அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன், இவ்வாறு தங்க நகைகளை மறைத்து கடத்த முற்பட்டமைக்காக 5 இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஜனாதிபதி தலைமையில் விசேட நத்தார் விழா







(கொழும்பு)

ஜனாதிபதி செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட நத்தார் விழா நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

கோட்டை ஜனாதிபதி மாளிகையில் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையினதும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

சபாநாயகர் கரு ஜெயசூரிய, அமைச்சர் ஜோன் அமரதுங்க, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன்,எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கலைஞர்கள் உள்ளிட்ட, பெருமளவானோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (இ-7)

# மகிந்தவை திட்டமிட்டு வீழ்த்திய மைத்திரி

## மனோ கணேசன் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 15 வருடங்கள் பின்னால் போயுள்ளார் என அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கடந்த 50 நாட்களில் எங்களிடமிருந்து தட்டிப் பறிக்கப்பட்ட ஆட்சி, அதிகாரம் மீளவும் எங்களால் ஜனநாயக முறையில் வாங்கப்பட்டுள்ளது. அது தான் உண்மை.



கடந்த மூன்று வருடங்களாக எங்களது நல்லாட்சி சில குறைகளை விட்டிருக்கலாம். அந்தக் குறைகள் தற்பொழுது தெளிவாக எங்களுக்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

அது மட்டுமல்ல கடந்த கால தேர்தல்களிலே உயர்ச்சிகள், எழுச்சிகள் பெற்ற மகிந்த ராஜபக்ஷ இப்போது விழுந்து விட்டார்.

ஒருவேளை மைத்திரிபால சிறிசேன அந்த காலத்திலே அப்பம் சாப்பிட்டு விட்டு வந்தது போல் இப்போது இடியப்பம் சாப்பிட்டு விட்டு மகிந்த ராஜபக்ஷவை திட்டமிட்டு வீழ்த்தி விட்டாரோ தெரியவில்லை.

அவரிடம் தான் கேட்க வேண்டும். இப்பொழுது நாட்டிலே கவலையாக இருக்கும் நபர் மகிந்த ராஜபக்ஷதான். இந்த ஆட்சி எங்களது ஆட்சி. நாங்கள் மக்கள் ஆணையுடன் உருவாக்கிய ஆட்சி என மனோ கணேசன் தெரிவித்தார். (இ-7)

# மக்களை வறுமையிலிருந்து விடுவித்து சிறந்ததோர் வாழ்க்கையை கொடுங்கள்

## மல்கம் ரஞ்சித் மைத்திரியிடம் கோரிக்கை

(கொழும்பு)

நாட்டு மக்களை வறுமையிலிருந்து விடுவித்து அவர்களுக்கு சிறந்ததோர் வாழ்க்கை நிலையை ஏற்படுத்திக்கொடுப்பதற்கு அனைத்து ஆட்சியாளர்களும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட நத்தார் விழா மெல்கம் ரஞ்சித் ஆண்டகை மற்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகியோர் தலைமையில் நேற்று முன்தினம் ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

உண்மையான நத்தார் என்பது உண்டு களித்து மகிழ்வது மட்டுமல்லாது. வறிய மக்களின் துயரங்களை புரிந்துகொண்டு அவர்களது பசியை போக்குவதற்காக ஒன்றுபடுவதாகுமெனத் தெரிவித்தார்.

நாட்டு மக்களை வறுமையிலிருந்து விடுவித்து அவர்களுக்கு சிறந்ததோர் வாழ்க்கை நிலையை ஏற்படுத்திக்கொடுப்பதற்கு அனைத்து ஆட்சியாளர்களும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டியது முக்கியமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## வேகக்கட்டுப்பாட்டையிழந்த கார் மதிலுடன் மோதி விபத்து



(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை சந்தியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் காரில் பயணம் செய்தவர்கள் தெய்வாதீனமாக உயிர் தப்பினர்.

நேற்றுக்காலை காங்கேசன்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த கார் தெல்லிப்பழை சந்திக்கு அண்மையாகவுள்ள வளைவில் வேகக்கட்டுப்பாட்டையிழந்து வீதியோரமாக இருந்த மதிலுடன் மோதியதில் கடும் சேதத்துக்குள்ளானது.

அதிநவீன ரக காரில் இருந்த காற்றுப் பைகள் வெளியே வந்ததனால் காரில் பயணித்தவர்கள் தெய்வாதீனமாக உயிர் தப்பினர்

இவ் விபத்து தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## 2 டிப்பர்கள் மோதி விபத்து; சாரதி ஒருவர் படுகாயம்





நாவற்குழி கேரதீவு வீதி ஆலடிப்பகுதியில் யாழ்.நோக்கி வந்த டிப்பர் வாகனமும் எதிரே வந்த டிப்பர் வாகனமும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகிய சம்பவம் நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்றது. இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, யாழ்.நோக்கி கல் ஏற்றி வந்த டிப்பர் வாகனம் வேகக்கட்டுப்பாட்டையிழந்து வீதியின் அருகில் உள்ள வீதி குறியீட்டுப் பலகையுடன் மோதுண்டு எதிரே வந்த டிப்பர் வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியதுடன் அருகில் இருந்த வயலுக்குள் தடம்புரண்டது. இந்த விபத்துச் சம்பவத்தில் கல் ஏற்றி வந்த டிப்பரின் சாரதி படுகாயங்களுடன் மீட்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

*(படங்கள்:-ராகுலன்)*

## ஆடு, புறாக்கள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

கைதடி நாவற்குழி கோயிலாக்கண்டி சந்தியை அண்மித்த கடையொன்றின் பின்புறமாகக் கட்டப்பட்டிருந்த ஆடு, கூட்டில் இருந்த புறாக்களும் கடந்த 19 ஆம் திகதி நள்ளிரவு வேளை திருடப்பட்டுள்ளதாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடையின் பின்புறமாக இரு ஆடுகள் கட்டப்பட்டதாகவும் அதில் ஒரு ஆடு திருடப்பட்டதாகவும் தெரிவிக்கப் பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகை தந்து மேலதிக விசாரணையை மேற்கொண்டுள்ளனர். (இ)

# அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும்

## தவிசாளர் தர்சன் வலியுறுத்து



(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தெற்கு சுன்னாகம் பிரதேச சபையின் வரவு-செலவுத் திட்டம் அனைத்துக் கட்சிகளின் உறுப்பினர்களின் ஆதரவுடன் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளமை போன்று தொடர்ந்தும் அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் வாக்களித்த மக்களுக்காக ஒற்றுமையாக செயற்பட வேண்டுமென்றும் சபையின் தவிசாளர் க.தர்சன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சபையின் வரவு-செலவுத் திட்டம் தொடர்பில் ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் விசேட ஊடக சந்திப்பொன்றை தவிசாளர் நேற்று வெள்ளிக்கிழமை நடத்தியிருந்தார். இதன் போது அவர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்திருந்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகையின் கீழுள்ள இப்பிரதேச சபையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய பல கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

இச் சபையின் அடுத்தாண்டுக்கான வரவு செலவுத் திட்டம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சபையில் என்னால் சமர்ப்பிக்கப்பட்டு அனைத்துக் கட்சிகளின் உறுப்பினர்களினதும் கருத்துக்கள் பெறப்பட்டு அனைவரதும் ஆதரவுடன் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

ஆனால் பல உள்ளூராட்சி மன்றங்களிலும் வரவு-செலவுத் திட்டத்திற்கு பல கட்சிகளும் எதிர்ப்பை வெளிப்படுத்தியே வருகின்றன. அவ்வாறான எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் வரவு-செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டும் வருகின்றன. அதே நேரம் சில சபைகளில் வரவு-செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டும் இருக்கின்றன.

இவ்வாறான நிலைமைகள் இருக்கின்ற போதும் மக்கள் நலன் சார்ந்ததாக அனைத்து உறுப்பினர்களினதும் பங்களிப்புக்களுடன் தயாரிக்கப்பட்ட இவ் வரவு- செலவுத் திட்டத்திற்கு அனைவரும் ஆதரவை வழங்கியதால் நாம் ஏகமனதாக நிறைவேற்றியிருக்கின்றோம். எமது சபையின் உறுப்பினர்களது இத்தகைய செயற்பாடுகள் ஏனைய சபைகளுக்கு முன்னுதாரணமாக விளங்குமென்று கருதுகின்றோம்.

இதிலும் குறிப்பாக நாட்டில் ஏற்பட்டிருக்கும் அரசியல் நெருக்கடி சூழ் நிலைமை காரணமாக தெற்கிலிருந்து சில கட்சியின் உறுப்பினர்களுக்கு அழுத்தங்கள் கொடுக்கப்பட்டிருந்தாலும் அதனையெல்லாம் தாண்டி மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு எமது உறுப்பினர்கள் செயற்பட்டிருக்கின்றனர்.

ஆகவே வாக்களித்த மக்களுக்காக அனைத்து உறுப்பினர்களும் இணைந்து ஏகமனதாக வரவு- செலவுத் திட்டத்தை நிறைவேற்றியதற்கு இந்த நேரத்தில் அனைவருக்கும் மனமார நன்றிகளைத் தெரிவித்து அவர்களை பாராட்டி நிற்கின்றேன். அதே போன்று தொடர்ந்து வரும் காலங்களிலும் சபையின் அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் ஒன்றாக இணைந்து ஒற்றுமையாகப் பயணித்து மக்களுக்கான சேவைகளைச் செய்வதற்கு முன்வர வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார். (இ-89)

## பெண்களுக்கான பரிசோதனைகள்

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் 35 வயது (1983 ஆம் ஆண்டில் பிறந்தவர்கள்), 45 வயது (1973 ஆம் ஆண்டு பிறந்தவர்கள்) பெண்களுககான பரிசோதனைகள் கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் மேற்கொள்ளப்பட இருப்பதனால் எதிர்வரும் 26 ஆம் திகதி பணிமனைக்கு சமுகமளிக்குமாறு சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

மேலதிக விபரங்களுக்கு பகுதி குடும்பநல உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ளவும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-5-60)

## கொழும்பு துறைமுகத்தில் இந்தியக் கடற்படையின் ஆய்வுக் கப்பல் ஜமுனா



(கொழும்பு)

இலங்கைக் கடற்பரப்பில் சமுத்திரவியல் ஆய்வுகளை மேற்கொள்வதற்காக, இந்தியக் கடற்படையின் சமுத்திரவியல் ஆய்வுக் கப்பலான ஜமுனா, நேற்று முன்தினம் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

கொழும்பு தொடக்கம், காலி வரையான கடற்பகுதியில் இலங்கைக் கடற்படையுடன் கூட்டு சமுத்திரவியல் ஆய்வுகளை மேற்கொள்வதற்காகவே இந்தக் கப்பல் கொழும்பு வந்துள்ளது.

85.77 மீற்றர் நீளம் கொண்ட இந்தக் கப்பலில், 230 மாலுமிகள் இலங்கை வந்துள்ளனர். (இ-7)

# இரா.சம்பந்தன் கௌரவமாக எதிர்க்கட்சி தலைவர் பதவியை மகிந்தவிற்கு வழங்க வேண்டும்

## மகிந்த சமரசிங்க கூறுகிறார்

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் எதிர்கட்சி தலைவர் பதவி வகிக்கக் கூடிய தகுதி பெரும்பான்மை அடிப்படையில் எம்மிடமே காணப்படுகின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பில் 16 உறுப்பினர்களே காணப்படுகின்றனர். ஆனால் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில் 98 உறுப்பினர்கள் உள்ளனர். இரா.சம்பந்தன் நீண்ட கால அரசியல் அனுபவம் உள்ளவர் என்ற அடிப்படையில் கௌரவமாக அதனை எம்மிடம் ஒப்படைத்துச் செல்வதே சிறந்ததாகும் எனவும் தெரிவித்தார்.

மகிந்த சமரசிங்க உள்ளிட்ட ஐவர் அமைச்சரவை அமைச்சுப்பதவியைப் பெற்றுக்கொள்ள முயற்சிப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்திருந்தமைக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்க்கட்சி தலைவர் இருவர் இருப்பதாக இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். அதனை நாம் முற்றாக நிராகரிக்கின்றோம். தற்போது பாராளுமன்றத்தில் எதிர்கட்சி தகுதி ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புக்கே காணப்படுகின்றது.

தமிழ் தேசிய கூட்டமைப்பில் 16 உறுப்பினர்கள் மாத்திரமே உள்ளனர். அதிலும் சில சிக்கல்கள் காணப்படுகின்றன. எனினும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில் 98 உறுப்பினர்கள் உள்ளனர். கூட்டமைப்பு முயற்சித்தாலும் அந்த எண்ணிக்கையை எட்ட முடியாது.

நீண்ட கால அரசியல் அனுபவம் உள்ளவர் என்ற அடிப்படையில் தம்மிடம் எதிர்க்கட்சி பதவி வகிப்பதற்கான பெரும்பான்மை இல்லை எனும் போது கௌரவமாக அதனை எம்மிடம் ஒப்படைத்து விட்டுவிலகி விடுவதே சிறந்ததாகும்.

பெரும்பான்மையற்ற ஒரு அரசாங்கத்தின் அமைச்சரவையே நியமிக்கப்பட்டுள்ளது. அவர்கள் எவ்வாறு வேலைத்திட்டங்களை முன்னெடுக்கின்றார்கள் என்பதை அவதானித்து எதிர்க்கட்சியாக நாம் எமது செயற்பாடுகளை முன்னெடுப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

126

கிழக்கு மாகாணத்தைப் போலல்லாது இங்கு நிலம், நீர்ப்பாசன வளம் ஆகியன குறைந்த அளவிலேயே இருந்தன. இப் பிரதேசம் குறைந்த அளவு மழைவீழ்ச்சி உடையதாக இருந்த போதும் சனச்செறிவு மிக்கதாக இருந்தது.

இருந்த போதிலும் சட்டமும் ஒழுங்குமுள்ள அமைதியான அரசியல் நிலவியதுடன் ஒழுங்கான சிவில் நிர்வாக முறைமையும் இருந்தது.

இந்நிலைமைகளின் காரணமாக வடமாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் சனத்தொகை பெருகியதுடன் மக்கள் தமது பொருளாதாரத்தை மேம்படுத்தவும் தமது சமூக அந்தஸ்தையும் வாழ்க்கைத் தரத்தையும் மேலும் வலுப்படுத்தவும் இப்புதிய வர்த்தக முயற்சிகளில் விருப்புடன் ஈடுபட்டனர்.

மேலும் வடமேல் மாகாணத்தின் தோற்றத்துடன் புதிய பொருளாதார நடவடிக்கைகளும் துரித மக்கள் தொகை அதிகரிப்பும் ஏற்பட்டன. இதன் விளைவாக வடமேல் மாகாணம் அதிவேகமாக ஒரு சிங்கள, முஸ்லிம் பிரதேசமாக மாறிக் கொண்டிருந்தமையையும் அக்கால நிலைமை காட்டுகின்றது.

இதன் விளைவாக மேற்படி தமிழரின் பாரம்பரியப் பிரதேசத்தில் தமிழரின் எண்ணிக்கை விரைவாக குறைந்து சென்றுள்ளமையையும் அவதானிக்க முடிகிறது.

பிரித்தானிய ஆரம்ப ஆட்சியிலான இந்த நிலைமாற்றக் காலத்தில் கோல்புறூக் சீர்திருத்தங்களின் விளைவாக யாழ்ப்பாணத் தீபகற்ப மக்கள் வர்த்தகப் பொருளாதாரத்தில் முனைப்புடன் பங்கேற்கலாயினர். டச்சுக்காரரின் காலத்தில் தனியார்துறை ஊக்குவிக்கப்படவில்லை.

1833 இன் பின்னர் தேசம் முழுவதும் பிரித்தானியரின் அமைதியான நிர்வாகத்தின் பின்னரே தனியார்துறை தலைதூக்கத் தொடங்கியது. அரசாங்கத் தனியுரிமைக்கும் எவ்வகையான வர்த்தகத் தடைகளுக்கும் கோல்புறூக் மிகவும் எதிர்ப்புடையவராக இருந்தார்.

எனவே அவர் தனியுரிமை ஒழிப்பையும் கட்டுப்பாடற்ற



"புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட வர்த்தகப் பொருளாதாரத்தினால் இலங்கையில் நெற் செய்கையின் முக்கியத்துவம் குறைந்து கிராமப்புறப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இருந்த நெற்செய்கை படிப்படியாக பின்னடைந்தது. வன்னி மற்றும் கிழக்கு மாகாண மக்கள் தமது சேனைப் பயிர்ச்செய்கை போன்ற பாரம் பரிய விவசாயச் செயற்பாடு களைக் கைவிடாதபோதும் முழுநாட்டுக்கும் போதுமான உணவை அவர்களால் உற்பத்தி செய்யமுடியவில்லை"

## பிரித்தானியரின் ஆரம்ப ஆட்சிக்காலமும் தமிழரும் (கி.பி. 1796-கி.பி. 1850)

வர்த்தகத்தையும் சிபாரிசு செய்தார். அரசாங்கத்தினுடைய வர்த்தகத் தனியுரிமை ஒழிக்கப்படுவதனால் ஏற்படக்கூடிய அதன் வருமான இழப்பை ஈடு செய்வதற்காகக் கோல்புறூக் ஏற்றுமதி வரியொன்றைப் பரிந்துரைத்தார்.

இது அரச செயலாளரினாலும் திறைசேரியினாலும் லண்டனில் கவனத்திற்கு எடுக்கப்பட்டு கட்டுப்பாடற்ற வர்த்தகத்திற்கான சகல தடைகளையும் நீக்குகின்ற திறைசேரியின் நிகழ்ச்சிக் குறிப்பு அனுப்பி வைக்கப்பட்டது.

(18 செப்டெம்பர் 1832 குறிப்பு, அரசாங்க செயலாளருக்கான விநியோக இல. 92, ஒக்டோபர் 1832 இல் உள்ளடங்கியது).

இக்கொள்கை சுதேசிகள் சுதந்திரமாகப் பயிரிட்டு விற்பனை செய்து அதிகபட்ச நலன்களைப் பெற உதவும் என அரசாங்கச் செயலாளர் நம்பினார். எங்கெங்கு இயலுமோ அங்கு ஏற்றுமதி வரிகளின் சமப்படுத்தலை பரிந்துரைத்து அவற்றை வெறும் வருமான வரிகளாக ஆக்கினார்.

இது அரசாங்கத் தனியுரிமையையும் வர்த்தகத் தடைகளையும் முற்றுமுழுதாக முடிவுக்குக் கொண்டுவந்ததுடன் பாரியளவிலான விவசாயத்தையும் வர்த்தகச் செயற்பாடுகளையும் உருவாக்கி தனியார் முதலீட்டுக்கான வாய்ப்புக்களையும் ஏற்படுத்தியது. ராஜகாரிய முறைமையையும் இது முடிவுக்குக் கொண்டுவந்தது.

இதுவரையில் இல்லாததோர் புதிய சுதந்திரத்தை தொழிற் சந்தையில் ஏற்படுத்தியது. மேலே ஆராயப்பட்டது போன்று நிர்வாகம் சீர்திருத்தப்பெற்று தேசாதிபதி அஞ்சியது போலன்றி வருமான நிலைமை சீராகி மேலதிக செல்வம் குவியலாயிற்று.

1833 ஆம் ஆண்டு இலங்கையில் ஒரு சகாப்தத்தின் முடிவாகவும் புதியதொன்றின் ஆரம்பமாகவும் இருந்தது.

தமிழர் இந்தப் புதிய பொருளாதார நிலைமைகளுக்கு எவ்வாறு முகங்கொடுத்தனர் என்றும் தமது பாரம்பரிய பொருளாதாரத்தைக் கைவிடாமலே எந்தளவுக்குப் புதிய வர்த்தகப் பொருளாதாரத்துக்கு ஏற்ற வகையில் தம்மை மாற்றிக் கொண்டனர் என்பதையும் பார்க்கலாம்.

அடுத்துவரும் அத்தியாயத்தில் தமிழ் உணர்வு அடையாளம் உருவாவதற்குக் காரணிகளாக அமைந்த சமூக, பொருளாதார அம்சங்களை ஆராய்வதற்கான ஒரு பயனுள்ள அடித்தளத்தை அமைக்க இப்பார்வை வழிகோலும்.

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட வர்த்தகப் பொருளாதாரத்தினால் இலங்கையில் நெற்செய்கையின் முக்கியத்துவம் குறைந்து கிராமப்புறப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இருந்த நெற்செய்கை படிப்படியாக பின்னடைந்தது.

வன்னி மற்றும் கிழக்கு மாகாண மக்கள் தமது சேனைப் பயிர்ச்செய்கை போன்ற பாரம்பரிய விவசாயச் செயற்பாடுகளைக் கைவிடாதபோதும் முழுநாட்டுக்கும் போதுமான உணவை அவர்களால் உற்பத்தி செய்யமுடியவில்லை.

கிராமத்து மக்கள் குறிப்பாக யாழ்ப்பாணத் தீபகற்பத்து மக்கள் தமது வருமானத்துக்கு நெய்பயிர்ச் செய்கையில் தங்கியிருப்பது குறைவடைந்து அவர்கள் பணப்பயிர்ச் செய்கையிலும் வர்த்தக நோக்கத்தைக் கொண்ட தோட்டச் செய்கையிலும் ஈடுபட ஆரம்பித்தனர்.

(தொடரும்)

# மீண்டும் சுகாதார அமைச்சராக ராஜித அரச வைத்திய அதிகாரிகள் கடும் எதிர்ப்பு



(கொழும்பு)

சுகாதார அமைச்சராக மீண்டும் ராஜித சேனாரட்ன நியமிக்கப்பட்டமைக்கு அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

குறித்த நியமனம் தொடர்பில் எடுக்க வேண்டிய தீர்மானங்கள் தொடர்பில் ஆராய, நிறைவேற்று சபையைக் கூட்டவுள்ளதாகவும் அதன் பின்னர் செயற்குழுக் கூட்டத்தையும் கூட்டுவதாகவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் ஹரித அலுக்கே தெரிவித்தார்.

ராஜித சேனாரட்ன அமைச்சராகச் செயற்பட்ட காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு செயற்பாடுகள் காரணமாக அவருக்கு மீண்டும் அமைச்சுப் பதவியை வழங்க வேண்டாம் எனக் கோரி, 14 ஆயிரத்திற்கும் அதிகமான வைத்தியர்கள் கையொப்பமிட்ட மனுவொன்றை ஜனாதிபதியிடம் கையளிக்க எதிர்பார்த்திருந்ததாகவும் இவ்வாறான நிலையில் அவருக்கு மீண்டும் சுகாதார அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் விசனம் வெளியிட்டுள்ளார். (இ-7)

## படவரைஞர்களைப் பதிவு செய்தல் - 2019

யாழ்.மாநகரசபையில் கட்டட அனுமதிக்கான வரைபடங்களை வரைந்து சமர்ப்பிக்க விரும்பும் படவரைஞர்கள் மற்றும் புதுப்பித்துக்கொள்ள விரும்புவோர் எதிர்வரும் 31.01.2019 ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம் என்பதனை சகல படவரைஞர்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

குறிப்பு:- மேற்குறிப்பிட்ட திகதிக்குள் பதிவுகளைப் புதுப்பிக்கத் தவறும் படவரைஞர்களது பதிவுகள் இரத்துச் செய்யப்படும்.

**முதல்வர், யாழ்.மாநகரசபை.** (சி-4785)





இலங்கை முதல் உதவிச்சங்க இந்து சமயத் தொண்டர் சபை ஸ்தாபகரும் ஆணையாளருமாகிய அமரர் நாகேந்திரம் போஜனின் 7 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு விசுவமடு பிரமந்தனாறு மகாவித்தியாலயத்தில் கடந்த 16 ஆம் திகதி இடம்பெற்றது. இலங்கை முதல் உதவிச் சங்க இந்து சமயத் தொண்டர் சபையின் மகளிர் பிரிவு பொறுப்பாளர் சற்குணபாலன் கேதீஸ்வரி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஈகச்சுடரை இலங்கை முதல் உதவிச் சங்க இந்து சமயத் தொண்டர் சபை ஆணையாளர் வை.மோகனதாஸ் ஏற்றிவைத்தார். அதனைத் தொடர்ந்து மலர் அஞ்சலி இடம்பெற்றது. அத்துடன் தொண்டர் அணியினரின் கற்றல் செயற்பாட்டை ஊக்குவிக்கும் முகமாகக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

## மாநகர எல்லைக்குள் குழாய்க்கிணறு நிர்மாணித்தல் - 2019

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் குழாய்க்கிணறு நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் இதுவரை பதிவு செய்யாத நிறுவனங்கள் மற்றும் 2018 ஆம் ஆண்டு பதிவினை மேற்கொண்ட நிறுவனங்கள் 2019 ஆம் ஆண்டுக்கான பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்வதுடன், யாழ்.மாநகர சபையில் பதிவினை மேற்கொள்ளாது குழாய்க்கிணறு நிர்மாணிக்கும் நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

**முதல்வர், யாழ்.மாநகரசபை.** (சி-4786)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1594

Search for people, places and things

### கிசானா

உங்கள் வாழ்க்கையில் ஒவ்வொரு நொடியையும் ரசித்து வாழுங்கள் ஒருநாள் கடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்த்தால் பெரிய சந்தோசம் காத்திருக்கும்



### சிலம்பரசன்

வாழ்க்கையில் யாரையும் நம்பி வாழ்ந்து விடாதீர்கள் நிழல்கூட வெளிச்சம் உள்ளவரை தான் துணைக்கு வரும்



### தமிழினி

உண்மையாக நேசிக்கும் அளவுக்கு வெறுக்கவும் கத்துக்கனும் உலகம் ரொம்ப போலித்தனமானது



### தர்ஷிகா

உதவி என்று வந்திட்டா கடவுளையும் தாண்டி நினைவுக்கு வருவது நண்பனே...!



### சஜீவன்

பார்க்கும் சொந்தமெல்லாம் பாசமாய் தெரிந்தாலும் பழகிப் பார் அதில் பாதி வேஷம்தான்



### கிரிசாந்


உங்கள் பாதையை நீங்களே தேர்ந்தெடுங்கள் ஏனெனில் வேறு எவராலும் உங்கள் கால்களைக் கொண்டு நடக்க முடியாது



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறையில் அபிவிருத்தி செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்

## அமைச்சர் சாகல தெரிவிப்பு



(கொழும்பு)

துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறையில் அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுக்க இலங்கை துறைமுக அதிகார சபை தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

துறைமுகங்கள் கப்பல் துறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்நாயக்க நேற்று வெள்ளிக்கிழமை தன்னுடைய அமைச்சில் கடமைகளை ஆரம்பித்தார்.

இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"நீண்ட கால அரசியல் நெருக்கடி இந்நாட்டிற்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. கடந்த 51 நாட்களாக இந்நாட்டின் அனைத்து செயற்பாடுகளும் முடங்கின. விசேடமாக இந்நாட்டு பொருளாதாரத்தில் சிக்கல் நிலை தோன்றியது.

இக்காலக் கட்டத்தின் பின்னர் புதிய பிரதமராக ரணில் விக்கிரமசிங்க சத்தியப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார். அதன் பின்னர் நேற்று முன்தினம் அமைச்சரவை நியமிக்கப்பட்டது. அமைச்சரவையின் பின்னர் அமைச்சர்களை சந்தித்த பிரதமர் விரைவில் அமைச்சுக்களின் பணிகளை முன்னெடுக்குமாறு கேட்டுக்கொண்டார். அதன் அடிப்படையில் நான் இன்று இவ்வமைச்சில் என்னுடைய கடமைகளை ஆரம்பித்தேன்.

இது நாட்டிற்கு மிகவும் முக்கியமான அமைச்சாகும். துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை இன்று பெருமளவில் அபிவிருத்தியடைந்துள்ளது. நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே இவ் அபிவிருத்திகளை அடிப்படையாகக் கொண்டு முன்னோக்கிச் செல்வதற்கு இலங்கை துறைமுக அதிகார சபை தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

மேலும் இலங்கை துறைமுக அதிகார சபையில் காணப்படுகின்ற முனையத்தை அபிவிருத்தி செய்ய வேண்டியுள்ளது. துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை தொடர்பாக விரிவாக ஆராய்ந்து செயற்படவேண்டியுள்ளது. மக்கள் அபிவிருத்தியடையும் வகையில் நாம் செயற்பட வேண்டும்" என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சூட்சுமமான முறையில் இயங்கி வந்த கசிப்பு நிலையங்கள் சுற்றி வளைப்பு

(காலி)

காலி பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் சட்டவிரோதமான முறையில் இயங்கிவந்த கசிப்பு உற்பத்தி நிலையங்களிலிருந்து ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.




காலி ஹிக்கடுவ மற்றும் கோலவத்தை ஆகிய பகுதிகளில் காலி மதுவரி திணைக்களம் மற்றும் பொலிஸார் இணைந்து கடந்த 18 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சுற்றிவளைப்பில் 100,000 மில்லி லீற்றர் கசிப்பு, கோடா 13,25,000 மில்லி லீற்றர், 9 தகடு பீப்பாய்கள், 4பரல், 4 எரிபொருள் வாயுக்கள் அடங்கிய தாங்கிகள், அமோனியா ஆகியவை உட்பட சுமார் 15 இலட்சம் பெறுமதியான கசிப்பை கைப்பற்றியுள்ளனர்.

ஹிக்கடுவ, கோலவத்தை, பல்தேகமுவ, அம்பாலங்கொடை, மியாகொடை, ரத்கம உள்ளிட்ட பிரதேசங்களில் பரிமாற்றம் செய்துகொள்ளக்கூடிய வகையில் குறித்த கசிப்பு உற்பத்தி மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸாரின் விசாரணைகளின் இருந்து தெரியவந்துள்ளது.

மிகவும் சூட்சுமமான முறையில் நத்தார் பண்டிகை, புதுவருடத்தை மையமாக முன்னிட்டு குறித்த சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நிலையங்கள் இயங்கி வந்ததாகவும் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் ஐவருக்கு எதிராகவும் பலபிட்டிய நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# பொலிஸ் பரிசோதகர் ரங்கஜீவவுக்கு இடமாற்றம்



(கொழும்பு)

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவின் பரிசோதகர் நியோமல் ரங்கஜீவ பொலிஸ் தரைப் படை தலைமையகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

குற்றப்புலனாய்வு பிரிவினர் பொலிஸ்மா அதிபரிடம் விடுத்த வேண்டுகோளை அடுத்து பொலிஸ்மா அதிபரால் நேற்று முன்தினம் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை பொலிஸ் பரிசோதகர் நியோமல் ரங்கஜீவவுக்கு வழங்கப்பட்டுள்ள பொலிஸ் பாதுகாப்பு அவ்வாறே நடைமுறையில் இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 160 | 120 | 130 | 100 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 90 | 85 | 80 |
| பச்சைமிளகாய் | 500 | 450 | 480 | 400 | 450 |
| தக்காளி | 300 | 300 | 320 | 250 | 320 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 50 | 350 | 40 |
| கோவா | 120 | 100 | 100 | 130 | 120 |
| கரட் | 200 | 280 | 240 | 220 | 250 |
| பூசணி | 80 | 50 | 60 | 40 | 80 |
| புடோல் | 120 | 160 | 100 | 110 | 100 |
| வாழைக்காய் | 80 | 80 | 70 | 60 | 120 |
| சின்ன வெங்காயம் | 120 | 130 | 140 | 120 | 160 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 90 | 90 | 100 |
| பாகற்காய் | 300 | 350 | 320 | 250 | 300 |
| வெண்டிக்காய் | 120 | 120 | 120 | 100 | 160 |
| கருணைக் கிழங்கு | 80 | 50 | 70 | 60 | 60 |
| பயற்றங்காய் | 200 | 200 | 280 | 240 | 160 |
| லீக்ஸ் | 200 | 150 | 200 | 120 | 200 |
| பீற்றூட் | 200 | 180 | 200 | — | 200 |
| கறிமிளகாய் | 250 | 300 | 300 | 220 | 280 |
| முருங்கைக்காய் | — | — | — | — | — |
| போஞ்சி | 150 | 150 | 180 | 110 | 120 |
| கத்தரிதம்புள்ள | 80 | 120 | 110 | 90 | 100 |
| கீரை-1பிடி | 40 | 40 | 60 | 35 | 80 |
| தேசிக்காய் | 500 | 400 | 450 | 350 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 45 | 40 | 30-50 |
| இராசவள்ளி | 350 | 250 | 260 | 180 | 240 |
| வெங்காயப்பூ | 300 | — | 400 | — | — |
| முள்ளங்கி | 80 | 80 | 120 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 50 | 40 | 50 | 20 | 60 |
| வல்லாரை | 20 | .40 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 50 | 80 | 80 | 120 | 70 |


# பாணந்துறை பிரதேச சபை முன்னாள் தவிசாளர் கைது

(கொழும்பு)

பாணந்துறை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் நிஹால் தேவேந்திர பெர்னாண்டோ கைது செய்யப்பட்டுள்ளார். தொல்பொருளுடன் தொடர்புடைய குற்றச்சாட்டுக்காக இவர் நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (இ-7)

# சட்டம் ஒழுங்கு அமைச்சை ஜனாதிபதி ஒப்படைப்பார்

## நவீன் திஸாநாயக்க நம்பிக்கை



(கொழும்பு)

ஜனாதிபதி கொலை சதி முயற்சி தொடர்பில் முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணைகள் முடியும் வரையில் சட்டம் ஒழுங்கு அமைச்சு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் காணப்படும் எனவும் விரைவில் விசாரணை முடிவடைந்தவுடன் அந்த அமைச்சை எம்மிடம் ஒப்படைப்பார் எனவும் அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சராக தனது பொறுப்புக்களை ஏற்கும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார். இந்த அமைச்சின் கீழ் பொலிஸ் திணைக்களம் நிர்வகிக்கப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# உண்ணாவிரதப் போராட்டத்துக்கு மேலும் இளைஞர்கள் ஆதரவு

(ஹற்றன்)

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளத்தை ஆயிரம் ரூபாயாக உயர்த்தக் கோரியும் கூட்டு ஒப்பந்தத்திலிருந்து, அதில் கையெழுத்திடும் தொழிற்சங்கங்கள் விலக வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தும், மலையகத்தைச் சேர்ந்த இரு இளைஞர்கள், கொழும்பு-கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்பாக முன்னெடுத்துவரும் உண்ணாவிரதப் போராட்டத்துக்கு மேலும் இரு இளைஞர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

தற்போது நான்கு இளைஞர்கள் இணைந்து, இந்தப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். இவர்களில் ஒருவர், உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டுள்ளாரென்றும் தெரியவருகிறது. (இ-7)

# சமசமாஜக் கட்சியின் மாநாடு

(இரத்தினபுரி)

லங்கா சமசமாஜக் கட்சியின் 83ஆவது வருட மாநாடு இரத்தினபுரி மாவட்டத்தில் எகலியகொட கூட்டுறவு மண்டபத்தின் கேட்போர் கூடத்தில் நாளை 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக லங்கா சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண கலந்து கொள்வார். (இ

# விசா இன்றி சட்டவிரோதமாக தங்கியிருந்தவர்கள் கைது

(வெலிகம)

செல்லுபடியற்ற விசா இன்றி இலங்கையில் தங்கியிருந்த வெளிநாட்டுப் பிரஜைகள் இருவர் வெலிகம, மிரிஸ்ஸ பிரதேசத்தில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர். வெலிகம பொலிஸாருக்கு கிடைத்த தகவலின்படி நடத்தப்பட்ட சுற்றிவளைப்பில் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபர்கள் 22 மற்றும் 27 வயதுடைய பாகிஸ்தான் மற்றும் எகிப்து நாட்டுப் பிரஜைகள் என்று பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# புதையல் தோண்டிய 7பேர் கைது

(திருமலை)

திருகோணமலை-நொச்சிக்குளம்-ஆடியாகல வன பிரதேசத்தில் புதையல் தோண்டிய 7 சந்தேக நபர்கள் பொலிஸ் அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது புதையல் தோண்ட பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)




# கடவுளின் கருணை



சந்தனபுரி என்ற ஊரில் வணிகர் ஒருவர் இருந்தார். நேர்மையான வியாபாரி. கொள்முதல் செய்த விலையை விட சற்று கூடுதலான விலைக்கு பொருட்களை விற்று, அதில் கிடைத்த வருமானத்தைக் கொண்டு தன்னால் முடிந்த அளவுக்கு பிறருக்கு உதவியும் தான தர்மங்களும் செய்து வந்தார்.

இளம் வயதில் திருமணம் செய்து பிள்ளைகள் பெற்று, அவர்களுக்கு தக்க வயது வந்ததும் திருமணம் நடத்தி வைத்தார். பெண் பிள்ளைகள் தங்கள் புகுந்த வீடு சென்று பிறந்த வீட்டின் மதிப்பை உயர்த்தினர். ஆண் பிள்ளைகள் தங்கள் தந்தையின் வியாபாரத்தை நல்ல முறையில் கவனித்துக் கொண்டு, தங்கள் தந்தையை போல் வாழ்ந்து வந்தனர்.

வணிகரின் மனைவி தன் பிள்ளைகளின் திருமணம் முடிந்த சில காலத்தில், இறைவனிடம் போய் சேர்ந்து விட்டாள். இளம் வயதில் கரம் பிடித்த தன் மனைவியின் பிரிவு, வணிகரை மிகவும் வேதனைக்கு உள்ளாக்கியது. குடும்பத்தில் மகன், மருமகள் மற்றும் பேரன் பேத்திகளோடு வாழ்ந்த வாழ்க்கை அலுத்து விட்டது.

ஒருநாள், அவர் தன் மகன், மருமகள் மற்றும் பேரக் குழந்தைகளிடம் விடைபெற்று தனக்கென்று சேர்த்து வைத்திருந்த பொருளோடு ஒரு காட்டு பிரதேசத்தில் பல முனிவர்கள் வசிக்கும் ஆசிரமத்துக்கு சற்று தூரத்தில் ஒரு சிறிய குடிசை அமைத்து, சகல ஜீவராசிகளும் சுகமாக வாழ வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனிடம் பிரார்த்தனை செய்த வண்ணம் இருந்தார்.

ஒருநாள் இரவு இடைவெளி இல்லாமல் கனத்த மழை பெய்து கொண்டிருந்தது. வணிகர் தான் சமைத்த உணவை உண்டு படுக்கச் சென்று விட்டார். உறங்கும் வேளையில், அவர் குடிசையின் கதவு தட்டப்படும் சப்தம் கேட்டு கதவை திறந்தார். வெளியே ஒரு பிச்சைக்காரன் கிழிந்த, அழுக்கடைந்த ஆடைகளுடன் மழையில் முழுமையாக நனைந்து குளிரில் நடுங்கிக் கொண்டிருந்தான்.

அவனை பார்த்த வணிகர், உடனேஅவனைஉள்ளே வருமாறு அழைத்து புதிய துணி கொடுத்து, உடுத்திக் கொள்ளச்சொன்னார்.

பிச்சைக்காரனை சற்று நேரம் அமரச் சொல்லி அவன் பசிக்கு அந்த இரவு வேளையில் உணவு சமைக்க சமையலறை பக்கம் சென்று, சமைத்துக் கொண்டிருக்கும் போது, பிச்சைக்காரன் கடவுளை திட்டிக் கொண்டிருந்தான்.

“கடவுள் எல்லோருக்கும் பொதுவானவர் என்று கூறுகின்றனர். அப்படியானால், அவர் என்னை பிச்சைக்காரனாகவும் இந்த குடிசையில் வசிக்கும் வணிகனை சர்வ சுகத்தோடும் வசிக்க வைக்கிறாரே... அது ஏன்?" என்று சற்று கோபமாக கேட்டான்.

கடவுள் பணக்காரர்கள் பக்கம் மிக மிக பரிவோடும், ஏழைகள் பக்கம் மிகவும் அலட்சியமாகவும் நடந்துக் கொள்கிறார். ஏழையாகிய நான் கந்தலாடை உடுத்தியபடி மழையில் நனைந்து பசியால் வாடி, ஒதுங்க இடம் இல்லாமல் தவிக்கிறேன். நான் தற்போது தங்கி உள்ள குடிசையின் சொந்தக்காரனை சகல வசதிகளோடும் நல்ல உடைகளோடும் பசிக்கு நல்ல உணவோடும் மழை குளிருக்கு பாதுகாப்பான குடிசையில் வாழ வைக்கிறான். இது தான் நியாயமா?" என்று, குடிசையில் நுழைந்ததில் இருந்து விநாடிக் கூட இடைவெளி விடாமல் கடவுளை திட்டிக் கொண்டிருந்தான்.

பிச்சைக்காரன் கடவுளை திட்டிக் கொண்டிருப்பதை கேட்டு, விரக்தி அடைந்த வணிகர் தன் பூஜை அறைக்கு சென்று கடவுளிடம் பிச்சைக்காரன் கடவுளை இடை விடாமல் திட்டுவதை சொல்லி வருத்தப்பட்டார்.

வணிகரின் உண்மையான பக்தியையும் வேதனையையும் உணர்ந்த கடவுள் அவர் முன் தோன்றி, “வணிகரே! பிச்சைக்காரன் என்னை திட்டுவதைப் பற்றி கவலைப்படாதே... சில நிமிடங்கள் அவன் என்னை திட்டுவதை கேட்டு பொறுத்துக் கொள்ளாமல், வேதனை அடைந்து என்னிடம் முறையிட்டாய். அவன் இடைவிடாமல் நாள், மாதம் மற்றும் வருடக் கணக்கில் என்னைத் திட்டிக் கொண்டிருக்கிறானே... அதை நான் எவ்வளவு பொறுமையுடன் பொறுத்துக்கொள்கிறேன் என்று உனக்குத் தெரியாது.

அவன் என்னை சர்வ சதா காலமும் திட்டும் போது, என்னை நினைத்த படி தான் திட்டுகிறான் என்று நான் மகிழ்ச்சி அடைகிறேன். அதனால் அவனும் என்னை சர்வ சதா காலமும் நினைத்துக் கொண்டிருக்கிறான். அவனுக்குப் பிச்சைக்கார வாழ்க்கை கிடைத்ததற்கு அவன் வாழ்ந்த வாழ்க்கை முறை தான் காரணம்.

இளம் வயதில் சேராத நண்பர்களோடு சேர்ந்து, கல்வி பயிலாமல் ஊர் சுற்றி கெட்ட பழக்கங்களுக்கு அடிமையாகி திரிந்ததால் தான் அவனுக்கு இந்த நிலை.

“இந்தப் பிறவியில் அவன் பிச்சைக்காரனாக இருந்தாலும், அவன் என்னை திட்டிய படி சர்வசதா காலமும் என் நினைவில் உள்ள படியால், அவன் அடுத்த பிறவியில் வசதியோடு வாழ்வான்.

நீ அவனுக்கு வயிறார உணவளித்து ஆழ்ந்து உறங்க வசதி செய்து கொடு,” என்று கூறி கடவுள் மறைந்தார்.

வணிகனும் சுடச்சுட சமைத்த உணவை பிச்சைக்காரனுக்கு அளித்து உண்ணச் செய்து, உறங்க வழி செய்து, மறுநாள் அவனை அனுப்பிவைத்தார்.

பிச்சைக்காரனுக்கும் எல்லா காலத்திலும் உணவளித்து காப்பாற்றுவது தான் கடவுளின் கருணை. காட்டில் கனத்த மழையில் நனைந்து குளிரில் நடுங்கி பசியில் தவித்த பிச்சைக்காரனுக்கு வணிகன் மூலமாக உணவளித்து பசியைப் போக்கிக் குளிரை நீக்கி அவனைக் காப்பாற்றிய நன்மையை மட்டும் மனிதனும் மறந்துவிடுவதுதான் உண்மை.

## சிந்தனைக்கு சில...

- பேசும்முன் கேளுங்கள் எழுதும்முன் யோசியுங்கள் செலவழிக்கும்முன் சம்பாதியுங்கள்.
- சிலவேளைகளில்இழப்பு தான் பெரிய ஆதாயமாக இருக்கும்.
- யாரிடம் கற்கிறோமோ அவரே நம் ஆசிரியர். கற்றுக் கொடுப்பவரெல்லாம் ஆசிரியர் அல்லர்.
- நாம்மாறும்போது தானும் மாறி, நாம் தலையசைக்கும்போது தானும் தலையசைக்கும் நண்பன் நமக்குத் தேவையில்லை. அதற்கு நம் நிழலே போதும்.
- நோயைவிட அச்சமே அதிகம் கொல்லும்.
- நான் குறித்த நேரத்திற்குக் கால்மணி நேரம் முன்பே சென்று விடுவது வழக்கம். அதுதான் என்னை மனிதனாக்கியது.
- நம்மிடம் பெரிய தவறுகள் இல்லை எனக் குறிப்பிடுவதற்கே, சிறிய தவறுகளை ஒப்புக்கொள்கிறோம்!
- வாழ்க்கை என்பது குறைவான தகவல்களை வைத்துக்கொண்டு சரியான முடிவுக்கு வரும் ஒரு கலை.
- சமையல் சரியாக அமையாவிடில் ஒருநாள் இழப்பு; அறுவடை சிறக்காவிடில் ஓராண்டு இழப்பு. திருமணம் பொருந்தாவிடில் வாழ்நாளே இழப்பு.
- முழுமையானவன் இன்னும் பிறக்கவில்லை. இனியும் பிறக்க மாட்டான்.
- பரபரத்து ஓடுவதில் பயனில்லை. உரிய நேரத்தில் புறப்படுங்கள்.
- எல்லோரையும் நேசிப்பது சிரமம்தான். ஆனால் பழகிக்கொள்ளுங்கள்.
- நல்லவர்களோடு நட்பாயிருங்கள் நீங்களும் நல்லவனாகலாம்.
- உலகம் ஒரு நாடக மேடை ஒவ்வொருவரும் தம் பங்கை நடிக்கிறார்கள்.

யார் குற்றினாலும் அரிசியானால் சரி.

~ தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நண்பன் படத்தில் வரும் பஞ்சவன் பாரிவேந்தன் போல...

விஜய் நடித்த நண்பன் என்ற திரைப்படம் பலரையும் ஈர்த்திருந்தது. ஹிந்தி மொழியில் தயாரிக்கப்பட்ட படத்தின் பிரதியாக்கமாக நண்பன் படம் வெளிவந்திருந்ததும் தெரிந்ததே.

இந்தத் திரைப்படத்தில் பஞ்சவன் பாரிவேந்தன் என்ற பெயரோடு விஜய் பல்கலைக்கழகப் பட்டப்படிப்பை மேற்கொள்கிறார்.

ஆனால் உண்மையில் பஞ்சவன் பாரிவேந்தன் என்ற பெயர் இன்னொருவருக்குரியது.

தன் மகனுக்கு படிப்பு வரவில்லை என்பதனால் தன் மகனின் பெயரில் பல்கலைக்கழகப் பட்டத்தைப் பெற வேண்டும் என்பதற்காக, படிப்பில் கெட்டிக்காரனான விஜய், பஞ்சவன் பாரிவேந்தன் என்ற பெயரில் பல்கலைக்கழகத்தில் இணைந்து கொள்கிறார்.

பட்டப்படிப்பு முடிவுற்று சில வருடங்கள் கழிந்த பின்னர் சக நண்பர்கள் பஞ்சவன் பாரிவேந்தனைப் பார்ப்பதற்காகச் சென்றபோதுதான் பஞ்சவன் பாரிவேந்தனும் விஜய்யும் ஒன்றல்ல என்பது தெரியவந்தது.

இதை நாம் கூறும்போது ஐயா, 2012ஆம் ஆண்டில் வெளியாகிய நண்பன் படத்தை இப்போது எதற்காக எழுதுகிறீர்கள் என்று நீங்கள் கேட்கலாம்.

ஒருவருக்காக இன்னொருவர் கருமம் ஆற்றுகின்ற முறைமை ஒன்று உள்ளது என்பதைக் கூறுவதற்காகவே அந்தப் படத்தை முன்வைத்தோம். அந்தப் படம் போன்ற வேறு சம்பவங்களும் நடந்துள்ளன.

கடந்த ஒரு சில நாட்களுக்கு முன் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் மீண்டும் பிரதமராகப் பதவியேற்றுக் கொண்டார்.

அவ்வாறு பதவியேற்ற பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வடக்கு அபிவிருத்தி மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு அமைச்சை தன்னிடம் வைத்துக் கொண்டார்.

ஆளும் தரப்பில் இருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெளியேறியதனால், அந்தக் கட்சியினர் தாம் வகித்த அமைச்சுப் பதவிகளை மீளவும் பொறுப்பேற்க மறுத்து விட்டனர்.

இதன்காரணமாக அமைச்சுப் பதவிகள் அனைத்தும் ஐக்கிய தேசியக் கட்சியினருக்காயிற்று.

எனினும் வடக்கு அபிவிருத்தி மீள்குடியேற்ற அமைச்சராக இருந்த டி.எம்.சுவாமிநாதனுக்கு மீண்டும் அந்தப் பதவி வழங்கப்படவில்லை.

டி.எம்.சுவாமிநாதனுக்கு அந்தப் பதவி வழங்கப்படுவதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரும்பாதென்பது தெரிந்த விடயம்.

ஆக, டி.எம்.சுவாமிநாதனுக்கு மேற்படி அமைச்சுப் பதவியை மீளவும் வழங்காமல், அந்தப் பதவியை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தானே எடுத்துக் கொண்டார்.

வடக்கு அபிவிருத்தி மீள்குடியேற்ற அமைச்சை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதற்காக தன்னிடம் வைத்துக் கொண்டார் எனும் கேள்வி எழும்போதுதான் பஞ்சவன் பாரிவேந்தன் என்ற பாத்திரம் ஞாபகத்துக்கு வந்தது.

ஆம், வடக்கு அபிவிருத்தி மீள்குடியேற்ற அமைச்சு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் இருந்தாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருக்கக்கூடிய ஒரு முக்கியமான புள்ளிதான் அமைச்சராக இருக்கப் போகிறார் என்று ஊகிப்பதில் தவறில்லை.

பரவாயில்லை. நல்லது நடந்தால், பஞ்சவன் பாரிவேந்தன் என்ற பாத்திரம் பற்றி நாம் கவலை கொள்ளத் தேவையில்லை.

## இலங்கை தமிழ்க் குடும்பத்தை நாடு கடத்துமாறு அவுஸ்திரேலிய உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவு

அவுஸ்திரேலியாவில் புகலிடம் மறுக்கப்பட்ட இலங்கை தமிழ் குடும்பத்தை நாடு கடத்துமாறு, அவுஸ்திரேலிய உயர்நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

இந்த ஆண்டு தொடக்கத்தில் நடேசலிங்கம் பிரியா மற்றும் இரண்டு குழந்தைகளைக் கொண்ட இந்தக் குடும்பம், அவர்கள் வசித்த பிலோலா என்ற இடத்தில் இருந்து அதிகாலை வேளையில் குடிவரவு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டனர். பின்னர் மெல்போனில் உள்ள தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டனர்.

இலங்கைக்கு நாடு கடத்தப்படவிருந்த இவர்கள் இறுதிநேர பிரயத்தனத்தின் காரணமாக அதில் இருந்து மீட்கப்பட்டனர். ஏற்கெனவே இவர்களின் வழக்கை ஆராய்ந்த நீதிமன்றம், அவர்களை நாடு கடத்துமாறு உத்தரவிட்டது.

எனினும் மேன்முறையீட்டின் தீர்ப்பு வரும் வரை நாடு கடத்தலை ஒத்திவைத்திருந்தது. இந்த நிலையில் மேன்முறையீட்டு மனு மீது நேற்று தீர்ப்பளிக்கப்பட்டது.

இதன்படி தமிழ்க் குடும்பத்தை நாடு கடத்துமாறு அவுஸ்திரேலிய உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

எனினும், 2019 பெப்ரவரி முதலாம் திகதிக்கு முன்னதாக இவர்களை நாடு கடத்த வேண்டாம் என்றும் குடிவரவு அதிகாரிகளுக்கு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இந்தக் குடும்பத்தை நாடு கடத்த வேண்டாம் என்று கோரி 140,000 அவுஸ்திரேலிய மக்கள் கையொப்பங்களை இட்டு உள்துறை அமைச்சுக்கு அனுப்பியுள்ளனர்.(ம-3)

## நாதஸ்வர,தவில் கச்சேரி இன்று

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் நடத்தும் இந்திய ஈழக் கலைஞர்கள் இணைந்து வழங்குகின்ற நாதஸ்வர தவில் கச்சேரி இன்று சனிக்கிழமை காரைநகர் கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கில் பி.ப 5.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ம-3)

## வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்

### ரவூப் ஹக்கீம் வேண்டுகோள்

(கொழும்பு)

அடுத்த வருடத்துக்கான வரவு-செலவுத் திட்டத்தில் வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். அத்துடன் அந்தப் பகுதிமக்களின்தொழில வாய்ப்புகளை அதிகரிக்கும் வகையில் நிதி ஒதுக்கீட்டை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நகர திட்டமிடல் நீர்வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித் தார்.

நிதி அமைச்சர் மங்கள சமரவீரவினால் நேற்று பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால கணக் கறிக்கை தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறுகையில்.

நாட்டில் கடந்த ஒன்றரை மாதங்களுக்கு முன்னர் இடம பெற்ற அரசியல் குழப்ப நிலையால் நாட்டின் பொருளாதாரம தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையை ஏற்படுத்தியவர்கள் தற்போது எதிர்க்கட்சிக்கு சென்று பதவிகளை பெற்றுக்கொண்டிருக்கின்றனர்.

2007ஆம் ஆண்டு முதல அதிகளவான நிதிகளை வெளிநாடுகளிலிருந்து கடன்களாகப் பெற்றுக்கொள்ளும் கட்டாய நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளோம். நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியே இந்நிலைக்கு காரணமாகும் என அவர் மேலும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## நிதானமே நிரந்தரம்

- எதையும் நிதானமாக யோசியுங்கள். எதையுமே நிதானமாய்ச் செய்யும் செயல்கள் யாவும் வெற்றியை அடைந்திடுங்கள்.
- தெளிவான முடிவு என்பது நிதானத்தின் நிரந்தரம் என்றே உணர்ந்திடுங்கள்.
- அவசரமாகச் செய்கின்ற காரியங்கள் எப்பொழுதுதாவதுதான் வெற்றியைப் பெற்றுத் தருகின்றது.ஆனால் நிதானமாக செய்கின்ற காரியங்கள் தான் எப்பொழுதுமே வெற்றியைப் பெற்றுத் தருகின்றது.
- அவசரம் என்பது புயல் மாதிரி நிதானம் என்பது தென்றல் மாதிரி.

### சோடா உள்ளிட்ட குளிர்பானங்களுக்கு

## சீனியின் அளவுக்கேற்ப வரி அதிகரிக்கப்படும்

### ராஜித சேனாரத்ன தெரிவிப்பு

சீனியின் அளவின் அடிப்படையில் சோடா உள்ளிட்ட குளிர்பானங்களுக்கு விதிக்கப்படும் வரி மீளவும் அதிகரிக்கப்படும் என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன அறிவித்துள்ளார்.

புதிய அமைச்சரவை நியமனம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

அதில் ராஜித சேனாரத்ன, மீளவும் சுகாதார அமைச்சராக நியமிக்கப்பட்டார். அவர் தனது கடமைகளை சுகாதார அமைச்சில் நேற்று பொறுப்பெடுத்தார்.

கடமைகளைப் பொறுப்பேற்றவுடன் சுகாதார அமைசசர் ராஜித சேனாரத்ன அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

சீனியின் அளவின் அடிப்படையில் சோடா உள்ளிட்ட குளிர்பானங்களுக்கு விதிக்கப்பட்ட வரி 30 சதவீதத்தால் குறைப்பதற்கு முன்னாள் நிதி அமைச்சர் மகிந்த ராஜபக்ஷ, அதிகாரிகளுக்குப் பணித்திருந்தார்.

இதன்மூலம் சோடா உள்ளிட்ட மென்பானங்களின் விலைகள் 30 சதவீதத்தால் குறைக்கப்படும் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

நாட்டில் நீரிழிவு நோயாளரின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதாகச் சுட்டிக்காட்டி குளிர்பானங்களில் உள்ளடக்கப்படும் சீனியின் அளவுக்கு ஏற்ப வரி அதிகரிப்பு முன்னைய கூட்டு அரசில் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவால் நடை முறைப்படுத்தப்பட்டிருந்தது. அதனையே பின்னர் மகிந்த ராஜபக்ஷ குறைப்பதற்கு அறிவுறுத்தியிருந்தார்.

இந்த நிலையில் அதன் வரியை மீளவும் அதிகரிக்கவுள்ளதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். (ம-3)

## டொலருக்கு எதிராக ரூபாயின் பெறுமதி பாரியளவில் வீழ்ச்சி

இலங்கை வரலாற்றில் அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை பாரியளவில் அதிகரித்த முதல் சந்தர்ப்பம் நேற்றாகும்.

இலங்கை மத்திய வங்கி நேற்றைய தினம் வெளியிட்ட நாணயமாற்று விகிதத்திற்கமைய இந்த விடயம் தெரியவந்துள்ளது.

அதற்கமைய அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 182.71 ரூபாயாக பதிவாகியுள்ளது.

அத்துடன் அமெரிக்க டொலரின் கொள்வனவு விலை 178.74 ரூபாயாக பதிவாகியுள்ளது.

இதற்கு முன்னர் டொலருக்காக அதிகூடிய விலை கடந்த நவம்பர் மாதம் 28 ஆம் திகதி 182.27 ரூபாயாக பதிவாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- மனிதன் வலிமை பெற வேண்டுமானால், உண்மை மிக்கவனாக வாழ வேண்டும்.
- ஆயிரம் முறை தோல்வி அடைந்தாலும் மீண்டும் ஒருமுறை லட்சியத்தை அடைய முயற்சி செய்யுங்கள்.
- பலவீனத்திற்கு பரிகாரம் பலவீனத்தை சிந்திப்பது அல்ல. மாறாக வலிமையைக் குறித்து சிந்திப்பது தான்.
- கீதை படிப்பதை விட, கால்பந்தின் மூலம் நீங்கள் சொர்க்கத்திற்கு அருகில் இருப்பீர்கள். அதனால், உடல் வலிமை மிக்கவராக ஆகுங்கள்.
- உலகில் யார் என்ன வேண்டுமானாலும் சொல்லட்டும். உங்கள் லட்சியத்தை நோக்கி உறுதியுடன் செயற்படுங்கள்.
- தன்னை பற்றி மட்டுமே நினைத்துக் கொண்டிருக்கும் சுயநலமே உலகில் மிகப்பெரிய பாவம்.
- சாந்தமான மனநிலை கொண்டவன் நல்லபணிகளில் ஈடுபட்டு, நன்மையைத் தேடிக் கொள்கிறான்.
- மனிதர்கள், விலங்குகளை விட ஒழுக்கமானவர்களாக இல்லை. சமூக பொது அபிப்பிராயம்தான் நம்மை ஒழுக்கமுள்ளவர்களாக வைத்திருக்கிறது.

# கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் வெற்றிக்கிண்ணம்

# கரைச்சிப் பிரதேச செயலகத்தின் வசமானது




கிளிநொச்சி மாவட்ட செயலக நலன்புரிச்சங்கத்தின் ஏற்பாட்டில் 2018 ஆம் ஆண்டிற்கான அரச திணைக்களங்களிற்கு இடையே யான அரச அதிபர் விளை யாட்டுக் கிண்ண விளையா ட்டுப் போட்டிகளின் இறுதி நிகழ்வு கடந்த 18ஆம் திகதி உருத்திரபுரம் விளை யாட்டுக்கழகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவட்டச் செயலாளர் சுந்தரம் அரு மைநாயகம், மேலதிக மாவ ட்ட செயலாளரும் மற்றும் பிரதேச செயலாளர்களும் ஒவ்வொரு திணைக்களத் தலைவர்களும் பதவி நிலை உத்தியோகத்தர்களும் ஏனைய அலுவலக உத்தி யோகத்தர்களும் பங்கு பற்றி சிறப்பித்தனர்.

அரச திணைக்களங்களுக்கு நடைபெற்ற உதைபந்து, கரப்பந்து, கிரிக்கெட், வலைப்பந்து, கரம், சதுரங்கம், பூப்பந்தாட்டம், கயிறி முத்தல் மற்றும் மெய்வல்லுநர் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற புள்ளிகளின் வரிசையிலே கட்டடங்கள் திணைக்களம் 7 புள்ளிகளையும் இலங்கை போக்குவரத்துச் சபை 10 புள்ளிகளையும் சுகாதாரத் திணைக்களம் 17 புள்ளிக ளையும் விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி திணைக்களம் 17 புள்ளிகளையும் கண்டா வளைப்பிரதேச செயலகம் 17 புள்ளிகளையும் பூநகரிப் பிரதேச செயலகம் 21 புள்ளி களையும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம் 44 புள்ளிகளையும் மாவட்டச் செயலகம் 44 புள்ளிகளையும் கரைச்சிப் பிரதேச செயலகம் 58 புள்ளிகளையும் பெற்றுக் கரைச்சிப் பிரதேச செயலகம் முதல் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

இரண்டாம் இடத்தினை மாவட்ட செயலக அணி பெற்றுக் கொண்டது. (க)



Goshin Isshin-Ryu Karate UK கழகத்தினால் முதல் முதலாக இந்தியாவில் நேரு உள் விளையாட்டு அரங்கில் நடைபெற்ற இன்ரநஷனல் கராத்தே போட்டியில் லண்டன், இலங்கை, மும்பை ஆகிய நாடுகளும் கேரளா, ஆந்திரா மற்றும் பல மாநிலங்களில் இருந்தும் 800 மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

இப் போட்டியில் யாழ்ப்பாணத்தில் இருந்து Goshin Isshin-Ryu Karate மாணவிகளான அருள் தனுஷா யசோதரன் குமுத்தே போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தையும் காட்டா போட்டியில் இரண்டாம் இடத்தைப்பெற்று வெள்ளி பதக்கத்தையும் பெற்றுள்ளார். மற்றும் பமிலா றெமோண்டே சிசிலிய ராஜன் காட்டா போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தைப் பெற்றுள்ளார். (க)


## கேள்வி அறிவித்தல்

## கமநல அபிவிருத்தி திணைக்களம் - கிளிநொச்சி

**தாம்போதி குழாய் (Hume Pipe) பொருத்திகள் (Collar) துருசு கதவுகள் (Sluice gate), எல்லைக்கல் (bountry Stone) கொள்வனவு செய்வதற்கான கேள்வி கோரல்**

கிளிநொச்சி மாவட்டத்தில் குள புனரமைப்பு வேலைகள் செய்வதற்காக தேவைப்படும் தாம்போதி குழாய்கள் (Hume Pipe), பொருத்திகள் (Collar), துருசு கதவுகள் (Sluice Gate), எல்லைக்கல் (bountry Stone) போன்றவற்றை கொள்வனவு செய்து கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள காரியாலயத்திற்கு பெற்றுக்கொள்ளும் பொருட்டு கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் 2018.12.22 தொடக்கம் 2018.12.27 வரையான காலப்பகுதியில் கீழ்க்காட்டப்படும் விபரங்களின் அடிப்படையில் ரூ. 22,000.00 பெறுமதியான வங்கிப்பிணையுடன் வியாபாரப் பதிவுச்சான்றிதழ் பெறுமதிசேர் வரிப் பதிவுச்சான்றிதழ் என்பன இணைக்கப்பட்டு இரண்டு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு "மூலப்பிரதி" மற்றும் "இணைப்பிரதி" என இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு வலது பக்க மேல் மூலையில் **"தாம்போதி குழாய்கள் (Hume Pipe), பொருத்திகள் (Collar), துருசு கதவுகள் (Sluice gate), எல்லைக்கல் (bountry Stone) என்பவற்றுக்கான கேள்வி கோரல்"** எனக் குறிப்பிட்டு மூடப்பட்ட கடித உறையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். சமர்ப்பிக்கப்படும் விலைப்பெறுமதிகள் 40 நாட்கள் வலுவிலுள்ளதாக இருக்கவேண்டும் என்பதுடன் அவற்றுக்கான தரச்சான்றிதழ்கள் மற்றும் பரிசோதனை அறிக்கைகளும் இணைக்கப்பட்டு 2018.12.28 பி.ப 2.30 மணிக்கு முன்பாக கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படவேண்டும் அல்லது நேரடியாகக் கையளிக்க வேண்டும். அன்றைய தினம் பி.ப 2.00 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விகோரல் சம்பந்தமாக இறுதி முடிவெடுக்கும் அதிகாரம் கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள கேள்விச்சபையைச் சார்ந்ததாகும். தெரிவு செய்யப்படும் வழங்குனர் இதில் குறிப்பிடப்படும் பொருட்களை இவ்வருட இறுதிக்குள் திணைக்களத்திற்கு கொண்டுவந்து கையளிக்க வேண்டும்.

தலைவர்
திணைக்கள கேள்விச்சபை
மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களம் - கிளிநொச்சி

| S.No | Item | Technical Specification | Qty |
|---|---|---|---|
| 1 | 12''Hume pipe | 12''Diameter-8'lenth R.C.C. Hume Pipe | 100 |
| 2 | 18''Hume pipe | 18''Diameter-8'lenth R.C.C. Hume Pipe | 110 |
| 3 | 24''Hume pipe | 24''Diameter-8'lenth R.C.C. Hume Pipe | 110 |
| 4 | 12''Collar | 12''Diameter R.C.C Collar | 60 |
| 5 | 18''Collar | 18''Diameter R.C.C Collar | 50 |
| 6 | 24''Collar | 24''Diameter R.C.C Collar | 60 |
| 7 | 12''C.I Sluice Gate | 12''Diameter C.I Sluice Gate, Complete set as base plate, housing, brassjam nuts,1 ¼''-2'' 6'' threaded fitting rod ave height 12''with operating handle, nuts bolts, push pin, tag bolts | 05 |
| 8 | 18''C.I Sluice Gate | 18'' Diameter C.I Sluice Gate, Complete set as base plate, housing, brassjam nuts, 1 1/2''-2'' 6'' threaded fitting rod ave height 12''with operating handle, nuts bolts, push pin, tag bolts | 05 |
| 9 | boundary stone | 100*100 Section 750mm height, 1:11/2:3 (18mm) cement concrete Boundary Stone with 3y10,4R 6 ( triangle stirrups) rein for cement and one cot of primer and two cots of yellow colour enamel paint with white colour lettering on the boundary stone | 4,000 |

(C-4797)

## பெற்றோல் ரூபா...

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வில், நிதியமைச்சின் இடைக்கால கணக்கறிக்கை தொடர்பாக கருத்துத் தெரிவித்தபோதே அவர் இந்த அறிவிப்பை விடுத்தார்.

அதன்படி, பெற்றோல் ஒக்டேன் 92 மற்றும் பெற்றோல் ஒக்டேன் 95 எரிபொருள் ஒரு லீட்டர் தலா 10 ரூபாயினாலும், ஒட்டோ டீசல் ஒரு லீட்டர் 5 ரூபாயினாலும், சுப்பர் டீசல் ஒரு லீட்டர் 10 ரூபாயினாலும் குறைக்கப்பட்டுள்ளது. (ம-3)

## இடைக்கால கண...

சுதந்திர கூட்டமைப்பினர் கலந்துக் கொள்ளவில்லை.

எதிர்வரும் முதல் நான்கு மாதங்களுக்கான இந்த நிதிநிலை அறிக்கைக்கு ஆயிரத்து 765 பில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதில் 970 பில்லியன் ரூபாய் நிதி கடன் வட்டி மற்றும் தவணைக்கொடுப்பனவிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும். இந்த தொகையானது, மொத்த நிதி நிலை அறிக்கையின் 55 சதவீதமாக அமைந்துள்ளது.

அத்துடன், இந்த நிதிநிலை அறிக்கையின் ஊடாக 480 பில்லியன் ரூபாய் மீண்டுவரும் செலவுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மூலதன செலவுக்காக 310 பில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த நிதிநிலை அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த நிதி அமைச்சர் மங்கள சமரவீர, எதிர்வரும் ஜனவரி மாதத்தில் பாதீட்டை பாராளுமன்றில் சமர்ப்பிப்பதாக தெரிவித்தார். (ம)

## குழு மோதலுக்கு...

வாள்களையும் மீட்டுள்ளனர்.

இச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலையில் பளையில் இடம்பெற்றுள்ளதாக பளைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் எழுதுமட்டுவாளைச் சேர்ந்த குழுவொன்றுக்கும் பளை பகுதியைச் சேர்ந்த குழுவொன்றுக்கும் இடையில் நேற்று முன்தினம், வியாழக்கிழமை இரவு கைகலப்பு ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து பளைப் பிரதேசத்தை சேர்ந்த குழுவினர் தங்களுடன் மோதிய எழுதுமட்டுவாள் பகுதியைச் சேர்ந்த குழுவினரை நள்ளிரவு வேளையில் தாக்குவதற்கு தயாராகியுள்ளனர்.

இரகசிய தகவல் ஒன்றின் மூலமாக அறிந்து கொண்ட பளைப் பொலிஸார் பளையைச் சேர்ந்த குழுவினர் தங்கியிருந்து மோதலுக்கு தயாராக இருந்த இடத்தை அதிகாலை ஒரு மணியளவில் சுற்றிவளைத்துள்ளனர்.

இதன்போது அங்கிருந்த சிலர் தப்பிச் சென்றுள்ள போதிலும் இருவரை மடக்கிப் பிடித்துஅவர்களிடமிருந்து இரண்டு வாள்களையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாகவும் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர். (ம-9-101)

## கல்வி இராஜாங்...

மாதம் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றிய விஜயகலா மகேஸ்வரன், தமிழீழ விடுதலைப் புலிகளின் கை ஓங்கவேண்டும் என்று தெரிவித்தார். அவரது கருத்து தெற்கில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

அதனால் விஜயகலா மகேஸ்வரன் மீது ஐக்கிய தேசியக் கட்சி ஒழுக்காற்று நடவடிக்கையை முன்னெடுப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றுக்கு அறிவித்தார். அத்துடன், விஜயகலா மகேஸ்வரனுக்கு எதிராக கொழும்பு நீதவான் நீதிமன்றில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கில் அவர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இந்த நிலையில் சிறுவர் மற்றும் மகளிர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சராகவிருந்த விஜயகலா மகேஸ்வரன், தனது அமைச்சுப் பதவியிலிருந்து கடந்த ஜூலை மாதம் 5ஆம் திகதி விலகிக்கொண்டார். (ம-3)

## வட மாகாணத்தில்...

இந்த ஆண்டின் வடகிழக்குப் பருவ மழை இன்று சனிக்கிழமை இரவுடன் நிறைவுக்கு வருகிறது என்று வானிலை ஆய்வாளர்கள் அறிவித்துள்ளனர். அதனால் நேற்று இரவு முதல் இன்று இரவுவரை இலங்கை, தமிழகம், கேரளா மற்றும் கர்நாடகாவில் மழையுடனான காலநிலை தொடரும் என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

வங்காளவிரிகுடாவில் ஏற்பட்டுள்ள காற்றழுத்த தாழமுக்கம் காரணமாக வடக்கு - கிழக்கு வடமத்திய, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களில் அடுத்த சில தினங்களில் 75 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை, கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது, இந்த ஆண்டு வடக்கு மாகாணத்தில் மழைவீழ்ச்சி மிகக் குறைவாகவே பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ம-3)

## எதிர்க்கட்சித் தலை...

பாராளுமன்றம் நேற்று முற்பகல் 10.30 மணிக்கு கூடியது, இதனை அடுத்து சபாநாயகர் அறிவிப்பின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார். அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

சபை முதல்வர் லக்ஷ்மன் கிரியெல்ல மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் எதிர்க்கட்சி தலைவர் பதவி தொடர்பாக கடந்த செவ்வாய்க்கிழமை சபையில் எழுப்பப்பட்ட கேள்விகள் தொடர்பாக நேற்றைய தினம் அது தொடர்பான நிலைப்பாட்டை அறிவிப்பதாக நான் அறிவித்திருந்தேன். எவ்வாறாயினும் இந்த விவகாரம் குறித்து விசேட தெரிவுக்குழுவொன்றை அமைக்குமாறு எம்.பிக்கள் குழுவொன்று என்னிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீரவினால் இது தொடர்பாக எனக்கு கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளமையினாலும், பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அது தொடர்பாக மீண்டும் கடிதமொன்றை கையளித்துள்ளதாலும் எதிர்க்கட்சி தலைவர் விவகாரம் குறித்து ஆராய்ந்து மிக விரைவில் எனது நிலைப்பாட்டை அறிவிக்கின்றேன் என குறிப்பிட்டார். (ம-3)

## பிணைமுறி மோச...

கணக்காய்வை தாமதமின்றி ஆரம்பிப்பதற்கும் இந்த கலந்துரையாடலின் போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பான முன்னேற்றம் குறித்து ஒவ்வொரு மாதமும் மீளாய்வு கலந்துரையாடல் நடத்தப்படவுள்ளது.

முறிகள் மோசடி தொடர்பான வழக்கு குறித்த திருத்த சட்டமூலத்திற்கு பாராளுமன்றக் குழுவில் இடையூறு ஏற்படுத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனை கைது செய்வது தொடர்பில் இலங்கை அரசாங்கத்தினால் சிங்கப்பூர் அரசுக்கு அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அந்நாட்டு அரசாங்கம் இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை எனவும் ஜனாதிபதியுடனான நேற்றைய கூட்டத்தின் போது தெரியவந்துள்ளது. (ம-3)

## கட்சி தாவிய வடி...

வடிவேல் சுரேஷ், மைத்திரிபால சிறிசேனவினால் நேற்று இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணி தலைமையிலான அரசாங்கத்தின் அமைச்சரவை ஏற்கெனவே நியமிக்கப்பட்டுள்ள நிலையில் நேற்று இராஜாங்க மற்றும் பிரதி அமைச்சர்கள் பதவியேற்றனர்.

அந்தவகையில் வடிவேல் சுரேஷ் பெருந்தோட்டத்துறை இராஜாங்க அமைச்சராக ஜனாதிபதி முன்பதவியேற்றார். (ம-3)

## அமைச்சரவை அந்...

ரஞ்சன் அலுவிஹார - சுற்றுலா அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர், வசந்த அலுவிஹார - விவசாயம், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர், லக்கி ஜயவர்தன - ந க ர திட்டமிடல், நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர்,நிரோஷன் பெரேரா - தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர், ருவன் விஜேவர்தன-பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், சம்பிக்க பிரேமதாச -மின்சக்தி, மீள் புதுப்பிக்கத்தக்க வலுச்சக்தி இராஜாங்க அமைச்சர், அசோக்க அபேசிங்க- போக்குவரத்து சிவில் விமான சேவைகள் இராஜாங்க அமைச்சர், பைசல் காசிம் -சுகாதார போசனை, சுதேச மருத்துவத்துறை இராஜாங்க அமைச்சர், எச்.எம்.எம். ஹரீஸ் -மாகாண சபைகள், உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர், அமீர் அலி -விவசாய, நீர்ப்பாசன, கிராமிய பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர், திலிப் வெதஆராச்சி -மீன்பிடி, நீரியல்வள அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர், ஏ.இசட்.எம். செயிட் - சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர், வடிவேல் சுரேஷ் - பெருந்தோட்ட கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

பிரதி அமைச்சர்கள்

அனோமா கமகே -பெற்றோலிய வள அபிருத்தி பிரதி அமைச்சர், எட்வட் குணசேகர - காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அலுவல்கள் பிரதி அமைச்சர், நளின் பண்டார ஜயமகா - அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தகத்துறை பிரதி அமைச்சர், அஜித் மன்னப்பெரும - சுற்றாடல்துறை பிரதி அமைச்சர், கருணாரத்ன பரனவிதான -திறன் விருத்தி, தொழிற்பயிற்சி பிரதி அமைச்சர், புத்திக பத்திரன- கைத்தொழில், வாணிப அலுவல்கள் பிரதி அமைச்சர், பாலித குமார தெவரப்பெரும - சமூக வலுவூட்டல் பிரதி அமைச்சர் (ம-3)

## எதிர்க்கட்சித் தலை...

கட்சியின் பிரதம கொஹடாவாகவும் அங்கீகரிப்பதாக சபாநாயகர் கடந்த செவ்வாய்க்கிழமை பாராளுமன்றில் அறிவித்தார்.

இந்நிலையில் இதனை எதிர்க்கும் வகையில் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனினால் நேற்று (வெள்ளிக்கிழமை இந்த மனு கையளிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் தலைவர் மைத்திரிபால சிறிசேன அரச தலைவராகவும், அமைச்சரவையின் தலைவராகவும் விளங்குகின்ற நிலையில், ஐ.ம.சு.கூவை எதிர்க்கட்சியாகவும் கருத முடியாது என குறித்த மனுவில் அவர் சுட்டிக்காட் யுள்ளார்.

மேலும், ஐ.ம.சு.கூட்டமைப்பின் தலைவர் அரச தலைவராக மாத்திரமின்றி அமைச்சரவை அமைச்சராகவும், அவருக்கு கீழ் ஐந்து அமைச்சுப் பதவிகளும் காணப்படுகின்ற நிலையில், ஐ.ம.சு.கூட்டமைப்பை எதிர்க்கட்சியாக அங்கீகரிக்க முடியாது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-3)

## நிவாரண உதவிக...

கணக்கு அறிக்கை மீதான விவாதத்தில் பிரதமர் உரையாற்றினார்

நாட்டின் நிதி நிர்வாகத்தை மேற்கொள்ளும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கே உண்டு. கடந்த நவம்பர் மாதம் 5ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவிருந்த வரவுசெலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த பொதுமக்களுக்கான அனைத்து நிவாரண உதவிகளையும் வழங்குவதற்கு தயாராக உள்ளதாக பிரதமர் தெரிவித்தார்.

கடந்த ஒக்டோபர் மாதம் 26ஆம் திகதி ஏற்பட்ட அரசியல் பிரச்சினை காரணமாக பல அத்தியாவசிய சேவைகள் ஸ்தம்பிதம் அடைந்தன. கடந்த காலத்தில் ஏற்பட்ட அரசியல் குழப்பநிலை காரணமாகவே இடைக்கால கணக்கறிக்கையை நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டி ஏற்பட்டது என்று அவர் குறிப்பிட்டார். (ம-3)

## பேருந்துகளின் கட்டணங்களை குறைக்க தீர்மானம்

(கொழும்பு)

நேற்று நள்ளிரவு மேற்கொள்ளப்படவுள்ள எரிபொருள் விலை குறைப்பை தொடர்ந்து, பேருந்து கட்டணங்களை குறைப்பது தொடர்பில் கலந்துரையாடவுள்ளதாக, இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள எரிபொருள் விலை குறைப்பின் பிரகாரம், பேருந்து கட்டணங்களை குறைப்பது தொடர்பில் தற்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய எதிர்வரும் திங்கட்கிழமை நிதியமைச்சருடன் கலந்துரையாடி தீர்மானிக்கவுள்ளதாகவும், அந்த சந்திப்பில் போக்குவரத்து அமைச்சரும் கலந்துக் கொள்வார் என தாம் எதிர்பார்ப்பதாக கெமுனு விஜேரத்ன குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பேருந்து கட்டணத்தை 4 சதவீதத்திற்கும் 5 சதவீதத்திற்கும் இடைப்பட்ட அளவில் குறைக்க முடியும் என அகில இலங்கை தனியார் பேருந்து சம்மேளனத்தின் செயலாளர் அஞ்சன பிரியஞ்ஜித் தெரிவித்துள்ளார்.

அடுத்த வாரத்தில் கட்டாயம் பேருந்து கட்டணம் குறைக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

A/L 3 PASSES உடன் BIT DEGREE from Colombo University
Call and Register before 31.12.2018 @ 0779785796
BIT Semester 1,3,5 & Project classes
2nd Upper உட்பட இதுவரை 80 பேர் BIT Degree பெற்றுள்ளனர். 12 வருட அனுபவம்.
வகுப்புக்கள் சனி மற்றும் ஞாயிறு தினங்களில்
By: T.Tharmmendra (BIT, MCSE, MBCS)
28/23, Manaltharai lane(by lane of Palaly Rd), Kandarmadam.
(677)

**தன நிதானய**
திகதி 2018-12-21
சீட்டிழுப்பு இலக்கம் 91
ஆங்கில எழுத்து: H — வெற்றி இலக்கங்கள்: 16 27 68 74

**கொவிசெத**
திகதி 2018.12.21
சீட்டிழுப்பு இலக்கம் 1980
ஆங்கில எழுத்து: S — வெல்லப்பட்ட இலக்கங்கள்: 06 17 41 71

**மஹஜன சம்பத**
திகதி 2018/12/21
சீட்டிழுப்பு இலக்கம் 3816
ஆங்கில எழுத்து: J — வெல்லப்பட்ட இலக்கங்கள்: 4 6 9 4 7 2

**மெகா பவர்**
திகதி 21/12/2018
சீட்டிழுப்பு இலக்கம் 321
வெற்றி எழுத்து: V — சுப்பர் இலக்க: 26 — வெற்றி இலக்கங்கள்: 21 29 47 78

தேசிய லொத்தர் சபை

# காணி விற்பனைக்கு

சித்தன்கேணியில் அமைதியான சிறந்த சுற்றாடலில் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில், வீடு கட்டுவதற்கான 2 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

தரகர் தேவையில்லை

தொடர்புகளுக்கு : 071 117 3291

(6747)

# TECHNO WORLD

A/L தொழில்நுட்ப பிரிவு

(C-4798) A/L - 2021 விரைவில் ஆரம்பம் 077 017 5346

CNR உள்நாடு, வெளிநாடுகளுக்கான தபால், பொதிகள் விநியோக சேவை



- அதிவேக மற்றும் சிக்கன பொதிகள் சேவை
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும் வசதி
- அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தரவாதம்
- கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்குப் பரிமாற்ற சேவை

CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062, 077 6655413

(C-4785)

வெளிநாடு - உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

WESTERN UNION MONEY TRANSFER 070 330 5500 WESTERN UNION MONEY TRANSFER

அண்ணா பொதிகள் சேவை

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி (C-4742)

021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்
முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை

# வாடகைக்கு

18, றக்கா வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஐந்து கடைத் தொகுதிகளும் அதனுடன் கூடிய மூன்று படுக்கை அறைகளைக் கொண்ட வீடும் வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : 077 913 4325 (6745)

# விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

(C-4853)

DELIVERY IN 3-5 DAYS

UK- 550 */=Kg
கனடா-900 */=Kg
ஜேர்மனி- 700 */=Kg
நெதர்லாந்து-700 */=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)

0768226240

V2 TRAVELS

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

வாருங்கள்... இலவசம்...

# விடுதலைப் பெருவிழா

கவலை, கண்ணீர்,
தீராத வியாதி,
பிசாசின்பிடி,
பில்லி-சூனியக்கட்டு, பாவங்கள்,
பரம்பரை சாபங்கள்,
அடிமைத்தனம் ஆகியவற்றிலிருந்து

## இயேசு விடுதலை கொடுக்கிறார்!!!

இடம்: நாற்சதுர சுவிசேஷ சபை, முத்திரைச் சந்தி, நல்லூர்.

22, 23 மார்கழி 2018 மாலை 4.00

இலங்கை நாற்சதுர சுவிசேஷ சபை, நல்லூர்.
673, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்.

(6742)

FLC FRENCH LANGUAGE CENTRE

# பிரெஞ்சு

(C-4687)

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)

40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781
181, பிரதான வீதி, நெல்லியடி. 0779 789 456/0762 669 614

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1
IELTS,SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.

ALLIANCE FRANÇAISE DE JAFFNA-

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

# af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org

(6718)


021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்தில்

# 1 ஏக்கர், 2 ஏக்கர் கற்பகவனம் 2

காணிகள் விற்பனைக்கு எழுதுமட்டுவாழ்

உடனடி உறுதி மாற்றம் * வங்கி கடன் வசதி செய்து தரப்படும்



**1 ஏக்கர் – 16 பரப்பு**
- 40 தென்னை
- 40 - 60 தேக்கு
- 20 கஜு மரம்
- 10 - 15 மாமரம்
- கல் இருக்கை 1 தொகுதி
- சுற்று முட்கம்பிவேலி படலையுடன்

**26 இலட்சம்**
(5 வருட பராமரிப்பு உள்ளடங்கலாக)

**2 ஏக்கர் – 32 பரப்பு**
- 80 தென்னை
- 80 - 90 தேக்கு
- 40 கஜு மரம்
- 20 - 30 மாமரம்
- கல் இருக்கை 1 தொகுதி
- சுற்று முட்கம்பிவேலி படலையுடன்

**49 இலட்சம்**
(5 வருட பராமரிப்பு உள்ளடங்கலாக)

- அனைத்து மரங்களும் நட்டு உரிய முறையில் **5 வருடங்கள் பராமரிப்பு** செய்து தரப்படும்!
- 30 அடி, 15 அடி அகல பாதை
- விடுமுறை வீடு அமைப்பதற்கான இடவசதி
- 24 மணிநேர பாதுகாப்பு
- விளைபொருட்களுக்கான சந்தை வசதி

பொதுவான வசதிகள்

பொது விடுதி · உணவகம் · உடற்பயிற்சிக்கூடம் · நீச்சல் தடாகம் · விளையாட்டுத்திடல் · நடைபயிற்சிக்கான பாதை · மீன்பிடி குளம் · முந்திரிகை தோட்டம் · மூலிகைத் தோட்டம்

சிறப்புக் கழிவு
ரூபாய் 1 இலட்சம்
வருட இறுதிக்குள் முற்பதிவு செய்பவர்களுக்கு மட்டும்



சி. அனுராஜ்
உரிமையாளர், விற்பனையாளர்

078 284 5000 021 492 7778

551A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

Good Gift Property Developers (Pvt) Ltd

Reg. No.: PV 115306

(C-4794)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.12.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.